


உ

திருக்குருகூர்
சிறிய இரத்தின கவிராயர்
இயற்றிய

புலவராற்றுப்படை.

இஃது
சேதுசமஸ்தான வித்வான்
ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்களாற்
பரிசோதித்து அச்சிடப்பெற்ற பிரதிக்கிணங்கச்
செந்தமிழ்ப் பத்திராதிபர்
திரு. நாராயணையங்காரால்
இரண்டாவது பதிப்பாயச்சிடப்பட்டது.



செந்தமிழ்ப்பிரசுரம்.—௪.

தமிழ்ச்சங்கமுத்திராசாலை
மதுரை.
1918.

உ

திருக்குருகூர்
சிறிய இரத்தின கவிராயர்
இயற்றிய

புலவராற்றுப்படை.

இது
சேதுசமஸ்தான வித்வான்
ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்களாற்
பரிசோதித்து அச்சிடப்பெற்ற பிரதிக்கிணங்கச்
செந்தமிழ்ப்பத்திராதிபர்

திரு. நாராயணையங்காரால்

இரண்டாவது பதிப்பாயச்சிடப்பட்டது.

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப்பிரசுரம்.—௪.

தமிழ்ச்சங்கமுத்திராசாலை
மதுரை.
1918.

புலவராற்றுப்படை.

முகவுரை.

இவ்வாற்றுப்படை இயற்றியவர் திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியிலிருந்த சிறிய இரத்தினகவிராயர் என்பார். இவர் இற்றைக்கு முந்நூறுவருடங்கட்குமுன்விளங்கிய செந்தமிழ்ப்புலவரும், மாறனலங்கார வுரையாசிரியருமாகிய திருமேனி, இரத்தின கவிராயரின் வழித்தோன்றலாவர். இவர் இருநூறுவருஷங்கட்கு முன் கல்வியுஞ் செல்வமும் ஒருங்கெய்திவிளங்கிய வள்ளலும், மச்ச புராணம், நீடூர்த்தலபுராணமுதலிய பல நூல்களியற்றியோருமாகிய இரசை-வடமலையப்ப பிள்ளை அவர்கள் பேரில் இவ்வாற்றுப்படை பாடினர். இந்நூல் திருச்சிராப்பள்ளியிலே கொல்லமாண்டு ௮௱௮-ல் அரங்கேற்றப்பட்டதாக அவ்வேட்டில் எழுதப்பட்டுள்ளது. வடமலையப்பவள்ளலின் மரபினர் திருநெல்வேலியில் இன்றும் சிறப்புற்றிருக்கின்றனர். இவ்வாற்றுப்படை சொற்சுவை பொருட்சுவை பெரிதுடைத்தாய்ப் படிப்போர்க்குப் பேரானந்தம் பயப்பது.

பத்திராசிரியர்.

உ

திருக்குருகூர்

சிறிய இரத்தின கவிராயர்

இயற்றிய

புலவராற்றுப்படை.

காப்பு.

வேற்றுப் படையை நரிப்படை யாக்குந்தன் வேற்படைக்கும்
கூற்றுப் படைக்கும் விருந்தூட்டும் வீரன் கொழுங்கருணை
யூற்றுப் படைக்கும் வடமலை மாவிரை யூர்ப்புலவ
ராற்றுப் படைக்குமுன் னிற்பான்செந் தூரி லறுமுகனே

அரச வடமலையே யாதுலர்தம் வாழ்வே
யிரசையர சேயரச ரேறே——முரசப்
புலவராற் றுப்படையும் போர்வேலோய் நின்மேற்
புலவராற் றுப்படைபொற் பூண்

பாயிரம்.

* கன்ன னநவரத கல்யாணன் பார்புரக்கு
மன்ன னிரசை வடமலைமேற்——பன்னுதமி
ழேற்றுப் படைக்கு மிரத்நகவி ஞன்புலவ
ராற்றுப் படைபாடி னான்.

நூல்.

பார்புகழ் தெய்வப் பசுந்துழாய் பூத்த
கார்முகின் மேனிக் கருணையங் கடவு
ளண்ட முமகண்ட முமனைத்தும் பூத்த
முண்டக நாபி முளைத்தெழும் பிரம

* இச்செய்யுள் 'வடமலையப்பன் கவிராயர் பாடியது' என இவ்வேட்டில் எழுதப்பட்டுள்ளது.

னிசைமுகப் பழமறை யீர்ந்தே னுவட்டெறி
திசைமுகப் பரிமளச் செந்தா மரையினு
மேனிலா வியமுகை மென்முலைக் குடைந்த
பானிலா வெள்ளிதழ்ப் பங்கே ருகத்தினும்
வெண்டுகில் வெண்பணி லேய்ந்துவீற் றிருந்த
பெண்டகை வெண்ணிறப் பேடை யோதிம
மறுபா னன்கென வமைத்துசொற் கலையா
யுறுபாற் கடலக டுதித்தெழுந் திங்க
ளல்வழிப் புகுமென வகவிருண் மாற்றுபு
நல்வழி காட்டிய நந்தா விளக்கங்
காவிளை யாடுங் களிமயில் கடுப்ப
நாவிளை யாடு நற்றமிழ்க் கவிஞன்
கவியொடு வாதி கமகன் வாக்கியெனப்
புவியிடம் பழிச்சிய புலமை யாள
னறம்பொரு ளின்பவீ டாமெனு நான்குந்
திறம்பட வுணர்ந்து செப்புநூ லறிஞ
னெண்பெயர் முதலா வீரைந் தெழுத்தும்
பண்புற வகுத்த பதங்க ளிரண்டு
மொருமூன்று புணர்ச்சியு மிருமூன்று விகாரமும்
வேற்றுமை யாறுந் தோற்றிய வல்வழி
தொழின்முத லாகத் தழுவுமீ ரேழுஞ்
சாரியை யுருபுஞ் சேருமிரு திணையுஞ்
செய்யுளும் வழக்குமென் றெய்துமிரு திறனு
மொருவகை தழீஇய விருவகை யெச்சமும்
வினைமுற்றுக் குறிப்புமுற் றெனுமிரு குறிப்பு
மூவகை யிடனு மூவகைக் காலமு
நால்வகைச் சொல்லும் பாலோ ரைந்துந்
தொகையோ ராறு மிகைவழு வேழுந்
தொகுத்திடு மெட்டு வகைப்பொருள் கோளு
மிடைச்சொ லுரிச்சொலென் றடுத்தசொல் லிரண்டுங்
காட்சி முதலாங் கைக்கிளைப் பகுதியு
மாட்சி யியற்கை மணத்தன் முதலாக்

களவிற் குரிய கிளவித் தொகையு
முற்புணர் மகிழ்ச்சி முதலா வுரைத்த
கற்பின் வகையுங் கட்டுரை யொழிபு
மெழுத்தசை சீர்தளை யியைந்த வடிதொடை
வழுத்துபாப் பாவினம் வண்ணமீ றாகக்
கோப்புற வகுத்த யாப்பின் விதியு
முத்தகங் குளக மெய்த்தொகை தொடர்நிலை
யென்னநால் வகைத்தாய் மன்னிய செய்யுளுஞ்
செறிவுமுத லாக நிறைகுணம் பத்துடை
வைதர்ப்ப பாகமு மெய்திய கவுடமுந்
தன்மை யுவமை தானமுத லாக
வன்மையில் பாவிகம் வரைபொரு ளணியுந்
தேமூற் றிருந்த கோமூத் திரிமுத
லக்கரச் சுதகமீ றானசொல் லணியு
மிக்குள மடக்குமென வேறுவே றிசைத்த
தொல்காப் பியமுத லொல்காப் பனுவலுட்
கருவி செய்கையென் றிருவகைத் தாய
வெழுத்துச் சொற்பொரு ளியாப்பணி யெனத்துறை
பழுத்த விலக்கணப் பவ்வங் கடந்து
மிலக்கிய மெனுங்கட லெளிதினிற் கடந்துங்
கலக்கும்வெங் கலிக்கடல் கடப்பரி தாகி
யீகை யென்னு மிரும்புணை யேற்றி
யோகைசேர் செல்வமென் றோர்பெருந் தீவினிற்
சேர்த்தியுயிர் காக்குந் தியாகி யென்றோர்
கீர்த்திபெறு மீகான் கிடைத்திலின் மையினாற்
றொல்லையூழ் வினையாஞ் சுழிபடுத் தலைப்பச்
செல்லல்கூ ரவாவெனுந் திரையெடுத் தெறிய
வன்பசி யென்னு மகரமீன் விழுங்கத்
துன்ப மென்னுஞ் சுறவெதிர் பாயக்
கவலை யென்னுங் கடுங்கரா மீர்ப்பத்
துவளுபு மேனி சோர்ந்து நடுக்கமு
மன்புள சிந்தைய ராகுட் டோடினும்

வன்பிலா வோட்டை வங்கத் தேறலு
மப்புறத் தியங்கா தலைதலை மீதுறக்
குப்புறத் தாழ்ந்து கூட வமிழ்ந்தியு
மெவ்வழி யேனு மினிமுயன் றுய்துமென்
றவ்வழி யுஞற்று மருங்கொழிற் பாசியைப்
பற்றெனப் பற்றிப் படர்தலு நைந்துநைந்
தற்றிடை சிதைப்ப வலக்கணுற் றிரங்கியு
மாக்க மென்னு மக்கரை சேர்துமென்
றூக்கமி லிரவெனு மோர்பசு மட்குடங்
கைக்கொடு நீந்தக் கரைந்துகரைந் தேகலு
மக்குடம் போல வகங்கை கரைந்து
நல்குர வென்னு நடுக்கான் புகுந்து
மல்குவெந் துயராம் வனத்தீ வளைப்பக்
கிளையெனுந் தூறுகாற் றளையெனச் சுற்ற
மாயா விரவெனும் வன்பேய் தொடர
வீயா வன்கண ரெனுந்தேள் கொட்ட
நெடும்பசி யென்னுங் கொடும்புலிக் கிரையாய்
மானமுங் குலமும் வண்மையும் பொறையு
ஞானமுந் தருமமு நன்மையுங் குடிபோய்க்
கருத்துறு பயமுங் கவ்வையும் பழியும்
வருத்தமும் பிணியும் வதியுமா லயமாய்ப்
படல்கொடு சாத்து மிடனிலா மனையுங்
காய்ந்தபுத் தோலை வேய்ந்திடாக் கூரையும்
வெளியறக் கற்றை விரித்துவான் முகட்டிற்
றுளிவிழா திறுக்கிச் சுற்று முகடும்
பொருக்கறத் தெளித்துப் பொருக்கா முன்றிலும்
புரையறத் தீற்றிப் புதுக்காச் சுவருந்
தரையலான் மெத்தை தழுவாச் சேக்கையு
மொழுகிமென் கோல மெழுதாத் திண்ணையுங்
கழுநீர் கலந்து பொழியாத் தொட்டியும்
பொங்கா வடுப்பும் புகையா வட்டிலு
மங்கார் பதம்மைத் தடுக்காக் குழிசியு

மயன்மனை புகுதாச் செயன்மனை யாட்டி
மஞ்சணீ ராடி வயங்கா மேனியு
மஞ்சனந் தீட்டா வயில்விழிக் கடையுஞ்
செம்பஞ் செழுதா வம்புயப் பாதமும்
வரிவளை புனையா விருகைக் காந்தளுந்
திலகம் பொறியாத் திங்கள்வா ணுதலு
மிலகுவெண் டுகல்பொரு திடுகுறு விடையு
மைம்முகிற் காடென வகிர்ந்துசிக் கறுத்து
மொய்ம்மலர் செருகி முடியாக் கூந்தலு
நயனிலா நடையு நகையிலா முகமும்
பயனிலா மொழியும் பரிவிலா வுளமும்
பாலொடு வறந்து பசியொடு வெதும்பித்
தோலொடு திரங்கிச் சுருங்கிய முலையு
மம்முலை நெருடி யரும்பசி பொறாது
விம்முசெங் கனிவாய் மென்பசுங் குழவி
சுவைத்தலு மொருபாற் சுவைத்துளி பெறாது
நெடிதுயிர்த் தயர்ந்து துடிதுடித் தேங்கி
நோய்முக நோக்கிய தாய்முக நோக்கி
யீரித ழுண்க ணீர்கரைந் தொழுக
மூரல்வெள் ளெயிற்றின் முளைநிலா வொழுக
மழலையந் தொனிவிடுத் தழுமிளங் குதலு
முற்பட முதிர்ந்த பொற்புடைச் சிறாஅ
ரொருபொழு தாயினு மூண்சுவை காணு
திருபொழு தேமாந் திணைக்கவு ளதைப்ப
வெண்ணெய் காணாது கண்முடி காய
மிளகு காணா தொளிமுக மழுங்க
நரம்பெழுந் தென்பு நிரம்பமெய் தோன்ற
வெக்கிய வயிறு விலைபோற் குழைய
நக்கிய கடைவாய் நாவொடு பிசுக்குறக்
கழங்கெனப் பசிய கண்களுட் குழியப்
பழந்துணிக் கந்தை பறந்திடை நால
வாயே யாயே யீயாய் கூழென

முகிற்றலைப் பருவ முழக்கெழுந் தேரையிற்
றுகிற்றலை பற்றித் தொடர்ந்தழு தரற்றலுங்
காண்டொறுங் காண்டொறுங் கவலுறு சிந்தைய
னீண்டினி யென்செய் தூஉ மென்செய் தூஉ மென்னப்
பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருளெனத் துணிந்துந்
திரைகட லோடியுந் திரவியந் தேடென
வுரைசெயு மவ்வை யுரைபகுத் துணர்ந்தும்
வாழ்ந்தார்க் குறவு வழியினு முளதாந்
தாழ்ந்தார்க் குறவிலைத் தமரினு மென்றுங்
கல்லா வறிவுடைப் பொல்லா மூர்க்கரைக்
கைப்புறப் பழுத்த காஞ்சிரை போன்று
முப்புநீர் போன்று முவர்ப்புறு செல்வரை
நீரினுட் கிடப்பினு நெட்டிபோற் சிறிதுள்
ளீரமு மிரக்கமு மில்லாப் புல்லரை
யுயர்குடிப் பிறந்து முளைக்கரும் பதடியிற்
பெயர்பெறுந் திறனிலாப் பேதை மாந்தரை
மாங்கனி தொடாது விளைக்குமுள் வேலியிற்
றுங்கொடா விடினுந் தடுக்கு நீசரை
முற்புரி தவத்தா லற்பவாழ் வெய்தி
யிந்திரப் பட்டம் வந்தது தமக்கென
வொருவரை யெண்ணா திருசெவி செவிடாய்
விழிகண் குருடாய் மொழியுமூங் கையுமாய்
மெய்யுங் காலுங் கையு மெழாது
முன்பொரு சொல்லும் பின்பொரு மொழியுங்
கண்டா லொன்றுங் காணா தொன்று
முண்டா லொன்று முண்ணா தொன்றும்
பலபல பிதற்றிக் கலகலென் றொலித்துச்
சட்டஞ்செய் துலகைத் திட்டஞ்செய் பவர்போன்
முன்னிறை யிராட்டி பின்னிறை யேற்றி
யடுங்கோ லென்னக் கொடுங்கோல் செலுத்தி
யடியடி யென்ன வடித்தாத் தெளிய

குடியலைத் தோட்டுங் கொடியபா தகரை
யப்பிறப் பினிலே யளித்தன மதனா
லிப்பிறப் பினிலே யிப்பொருள் படைத்தே
முற்றவர்க் கின்னு முதவின் மேன்மேலு
மற்றுள பிறப்பினும் வருநமக் கென்று
சொல்லவந் தவர்மனச் சூழ்ச்சி யறியாது
செல்வநிலை யன்றெனுஞ் செய்கை குறியா
தீதலே யறமெனு நீதி கருதா
தானார் பகுவா யுணர்விலாக் காகமுங்
கரவா கரைந்துணக் கண்டு தெளியாது
வாரறப் புடைத்து வட்டமிட் டெழுந்து
பூரண குடம்போற் புளகிதஞ் செறிந்த
கொங்கையும் வாள்வளைச் செங்கையுங் காட்டி
வாடையு மருந்து மஞ்சளுங் கூட்டி
மேடைமே னின்று வெண்ணகை கோட்டிச்
சொக்கு மாய மைக்கணான் மருட்டும்
பாசிழை யல்குல் வேசையர்க் கலது
தனம்பெரி தளிக்க மனங்கூ டாது
படிறுபல விளைத்துக் கொடிறுக வுடைக்குங்
கூர்ங்கை யல்லவர்க் கீர்ங்கை விதிராது
வறியவர்க் காணின் மொறுமொறுத் திகழ்ந்து
பகைத்தவ ரென்னத் திகைத்தெதிர் நோக்கி
யிஞ்சி தின்ற வெஞ்சினக் குரங்கென
வகங்கெட வாளா முகங்கடு கடுத்துக்
கல்லெறிந் தன்ன வல்லுரை கூறி
நாய்போற் குரைத்துப் பேய்போற் குனித்துத்
தள்ளெனத் தள்ளித் தலைக்கடை யடைத்துத்
தண்டிய குண்டோ தரன்போற் றொந்தியும்
பண்டியும் பாவமும் பருக்கப் பருத்து
நமரிவர் நமக்கிவர் நண்பின ருரிய
தமரென வடுத்தோர் தமக்கு மெள்ளளவும்
பாத்துணா தளவில் பழப்பொருள் புதைத்துவைத்

தீத்தொகு தேன்போ விழக்கு மூடரை
வேனிலிற் றளர்ந்து விடாய்கெட நுகர்வான்
கானலை நீரெனக் கருதுபு சென்றெனக்
கற்பசு முலைப்பால் கறப்பான் புக்கென
வற்புறு மணனெய் வடிப்பா னிசைந்தென
வறிதினி லடுத்துப் பெறுபயன் வேண்டி
யிரவலர்க் கொருகா சியாக் கைகளை
வரைவிலா தளிக்கு மழைமுகி லென்றும்
பொய்யொழிந் துரையாப் புரைகொள்பாழ் முகத்தை
மையொழிந் திலங்கும் வாண்மதி யென்று
மொருவரைத் தாங்கா வுரணிலாப் புயங்களை
யிருவரைச் சிகரத் திகலுடைத் தென்றும்
வழுவறத் தேர்ந்து வடித்துநன் மதுரந்
தழுவிய நவரசத் தண்டமிழ்ப் பாகைக்
காட்டுக் கெறித்த கதிர்நிலா வென்ன
மேட்டுக் கிறைத்த விழுப்புன லென்னப்
போதமில் செவிடர்முன் னூதுசங் கொலியெனக்
கமரிடை யுகுத்த வமிர்தென வாங்கவர்
தொள்ளா மரச்செவி யுள்ளே தூஉய்
வேளையன் றின்று நாளவம் மென்ன
வழிபல தேய்ந்து குழிபட நடந்து
நூல்கொளுந் தமிழை நுவன்றிடும் வாய்போற்
கால்களுஞ் சலித்துக் கருந்தழும் பேற
வூர்தரு சகடத் துருளே போலவும்
பேர்தரு மூசற் பிறழ்வடம் போலவும்
போவதும் வருவது மாவதே தொழிலாய்
நாட்செல நாட்செலத் தாழ்ச்சியாய்ப் பலமும்
பஞ்சியாய்க் கழிய விஞ்சிநீள் கலியா
லிரைமுகக் கீரிமுன் வருபொறிப் பாந்தளப்
பாந்தள்வாய்ப் பட்டு மாந்து தேரை
கொடிச்சிறு தூண்டில்வாய்த் துடித்தெழு கெண்டை
பருந்துவாய்க் கவ்வ வருந்தும் பார்ப்புத்
தொகப்படு மொட்டில்வந் தகப்படும் பறவை

யாலைவாய்க் கரும்பு வேலைவாய்த் துரும்பு
வலைவாய்ப் புகுமொரு மானெனத் தியங்கி
யுலைவாய் மெழுகென வுருகிவெய் துயிர்த்துச்
சிதலை தின்ற முதுமரம் போலவும்
புல்லுரீஇ படர்ந்த சில்லி போலவு
மிளங்களி றுண்ட விளங்கனி போலவுந்
தும்பி குடைந்த தம்பம் போலவு
முள்ளுற மெலிந்து வெள்ளுடற் கோதாய்ச்
சலமதி யெனமதிச் சஞ்சலம் பெரிதுற
நாழிகை யொருநா ளொரு மாதம்
வாழிய மாதமோர் வருடமாய் நீடத்
திரிதரு நாளோ ரிரவிடைச் சனியா
லொடுங்கிய மெய்யன் கொடுங்கை யணையாக
வொருசிறி தாங்கே யிருவிழி முகிழ்ப்பக்
கனவுகண் டிதுவோர் கனவென விழித்தன
னீர்தோ வென்னின் மாதே கேளாய்
குடதிசைப் புறத்தோர் நெடுவரை முகட்டி
லாருப் பசிக்கனன் மாறு துழன்று
தாகமுந் துயருஞ் சோகமும் பெருகத்
தளர்வுறு மஞ்சிறைச் சாதகச் சேவல்
கிளையொடும் பார்ப்பொடுங் கீழ்த்திசை நோக்கி
யெழுந்துசெல் பொழுதி னினவளை கொழிக்குங்
கொழுந்திரைப் படுகரைச் செழுந்திணை மருதத்
திங்கிலங் குளிர்ப்புற மனாரம் பெழுதூற்
கருமழைக் கொழுந்து பெருமழை பொழிய
வருந்துளி யமுதம் விருந்துகூட் டருந்தி
யெல்லையின் மகிழ்வொடு மொல்லையின் மண்டன
னீண்டிவண் வரும்வழி யாண்டொரு நெறிக்க
ணறைமலர்க் கூந்தற் பிறைமணி வாணுதற்
பவளமென் கனிவாய்க் குவளையங் கடைக்க
ணிணைத்தடித் திரண்டு பணைத்தெழு கொங்கை
பிறமிறு மென்ன மறுகுறான் மருங்குற்

சிலம்புபொற் சதங்கை யலம்புஞ் சீறடித்
தாயினு மன்பிற் சேயிழை யொருத்தி
கருநிறப் புயல்போன் மருவுமோர் தலைவன்
நன்மொழி மாறு தென்முன மெய்தி
விளங்குதங் கையின்மா துளங்கனி யொன்று
நன்கொடு பெறுகென வென்கையி னீந்தனன்
வாங்கினன் வல்லையி னீங்குவந் தடைந்தே
னங்கதற் கூறுபய னிங்குநின் றெளியே
னத்திசைக் கேக வவனியேழ் புரக்கு
மைத்தகு நிறத்தோர் மன்னர்மன் னவனு
மின்புறு பெருவள மெய்துவ துளதென
வன்புறு மனையாட் கறிவுறப் பகர்ந்து
களிப்பொடு மெழுந்து வெளிப்புறப் படுதலு
மந்தண ரிருவர் வந்தது கண்டனன்
பிறைவடந் திகழ்முலைப் பெண்ணணங் கனையவர்
நிறைகுடஞ் சுமந்து நேர்வரக் கண்டனன்
கரிக்குரீஇ யிடம்பாய்ந் திருக்குதல் கண்டனன்
கருடன்வந் திடமா யருடரக் கண்டனன்
நன்றிகூர் நிமித்தமீ தென்றுகொண் டாடினன்
றிகழும்வெண் டாளமுஞ் செம்பொனும் வரன்றி
மொகுமொகென் றருவி முழக்கிவீழ் குன்று
மாரமுந் தேக்கு மசோகமு நாகமும்
வேரலு மைவனம் விளையுஞ் சாரலுஞ்
சிறையடித் தகவுஞ் செழுங்களித் தோகையுங்
கறையடித் திரளுங் கடும்போர் மடங்கலு
முறப்புலி யெதிர்பாய் மறப்புலிக் குழாமும்
விடாவடி வள்ளுகிர்க் குடாவடித் தொழுதியும்
பெறுகுடிக் குறவர் சிறுகுடிக் குரம்பையு
நிரம்பிய குறிஞ்சிப் பெரும்புலங் கடந்தனன்
விராவரும் பாரைக் குராவு மராவுங்
காரையுங் கரிந்த சூரையு மிருப்பையுஞ்
சருகுபட் டுலர்ந்த கருகுபைங் கள்ளியும்

விடரெழுந் தெங்கணும் படர்வெயிற் கானலு
முரிசிறைக் கழுகும் விரிசிறைப் பருந்து
முன்னாய் வெருண்டிகல் செந்நாய்க் கணமு
மிடைந்தவெம் பாலைக் கொடுந்திணை கடந்தனன்
பைங்குலை முல்லையுஞ் செங்குலைக் காந்தளு
நறுஞ்சினைக் குருந்துங் குறுஞ்சுனைக் கலுழியுந்
தாற்றுக்கதிர் வரகு மேற்றுத்தொறு நிரையு
மதுவியல் கூந்தற் பொதுவியர் குரவையு
மன்னிய முல்லை நன்னிலங் கடந்தனன்
தடம்பணைச் செந்துண ரடம்பின் கானமும்
விரும்புவெண் முகைமுத் தரும்புபுன் னாகமுந்
தாங்குலைக் குடக்காய் தூங்குமுட் கைதையுந்
திவள்சினைப் பணிலமுந் தவழ்கழிக் கானலு
முடைப்புலால் பகருங் கடைப்படு களமு
மப்பள வளாய வுப்பள வளமுஞ்
சைவலப் படலையுங் கைவலத் திமிலும்
பாய்மரம் விரித்து வேய்மரக் கலமும்
பட்டின வளாகமு மட்டிலா திசைந்த
நெய்தலஞ் சூழ ஞெய்தினிற் சாருமுன்
மற்றதன் மருங்கில் வான்முக டளந்து
சுற்றிய பளிக்குச் சுவர்மணி மாடமுந்
தோரண நாற்றுந் துகிற்கொடி மறுகு
மாரண வேதியர்க் கக்கிர காரமுஞ்
சித்திர முகப்புந் தேவரா லயமு
நித்திலப் பெருந்து ணிறைத்தகா வணமு
நித்தலும் பொழியன சத்திர சாலையு
மாடகத் திரண்முலைப் பாடகச் சிறடிச்
சூடகக் கையினர் நாடகத் தரங்கும்
வாழையும் பலாவு மடற்பசும் பூகமுந்
தாழையு மாவுந் தழைத்தபூங் காவுங்
குவளையுங் கமலமுங் குமுத முஞ்செறிந்த
தவளையுங் கயலுந் தாவும்வா விகளு

மடைகரைப் புளினமுங் குடையுநீர் மதகு
மாற்றுநீர்ப் படுகையு மூற்றுநீர்க் கேணியுங்
கன்னலம் பாப்பையுஞ் செங்கெலங் கழனியு
முழுதொழின் மாறு மழவ ரோதையு
மாலையு மிளமரச் சாலையு மெங்கணுஞ்
சூழ்ந்துவிண் ணிமையவர் வாழ்ந்தபொன் னுலக
நவநிதி யொடுபோந் தவனியில் வந்தெனத்
தரையூர் சிறப்புடை யிறையூர் புகுந்தனன்
றிருந்துபொற் கோயிற் செழுமணி முகப்பிடை
யிருந்தன னக்கணந் தெறிகடன் முழக்கென
வல்லியங் குறுங்கண் வார்ப் பல்லியங் கறங்கத்
தண்கதிர் மதியென வெண்குடை கவிப்பத்
தேமரு மெல்லிதழ்த் தாமரை முகத்தியர்
காமரு கற்றைவெண் சாமரை யிரட்ட
வெள்ளடை நாசியர் வெள்ளடை யுதவ
வாளஞ்சு கண்ணியர் காளாஞ்சி யேந்த
வொருதனித் தடக்கை யிருபிறைக் கோட்டு
மும்மதஞ் சொரியும் வெம்மத நால்வாய்
முகபட மிலகிய புகர்முக விகடப்
போதகக் கழுத்தின் மீதிலோர் புலவ
னெதிர்ந்தனன் மன்னனை யெதிர்ந்தனன் மன்னனு
மதிர்ந்தன யானையி னடைகுநர் யாரென
வத்திசை நோக்கலு மித்திசை நோக்கினன்
யானெதிர் செலவவன் றானெதி ரணுகின
னொருவ ரோருடலோ ருயி ரிவரென
விருவரு மிருமார் பிசைந்துறத் தழுவினன்
விள்ளருங் காதன்மீ தூரமீ தூர
வுள்ளமும் வாய்மையு மொன்றுபட் டுவந்தன
னலிந்தவெங் கலியா னாடொறும் புலவ
மெலிந்தனை கொல்லோ மெலிந்தனை கொல்லோ
முற்றிய வுன்றுயர் முழுவது நீங்குதற்
குற்றது கால முரைக்குவல் கேளாய்

மாரிசூழ் குடுமி நேரிமால் வரையான்
கரைபொரு தரங்கத் தரளமா நதியா
னியலிசை முத்தமிழ் யாவரு முணர்ந்து
பயிலிருங் கோளப் பாண்டிநன் னாட்
ணிரையூர் வளைதவ ழிரையூர்க் கதிப
னரங்கெழு நடன னரங்க மிவர்ந்தோன்
மருவலர் வயிர மணிமுடி யிடறுங்
கருநிறக் கரடக் கடாக்களிற் றுதய
னலமு மமுதமு மளவிய மாதர்கண்
ணிலமு நீலமு நீங்கா மார்பினன்
பாசிய மூவகை முரசதிர் முன்றில
னூழிசூழ் புவிபுகழ் மேழியர் துவசன்
பொருதிரைத் தலனுந் திரைதிரைத் தெறிந்த
நந்தூர் கடல்வாய்ச் செந்தூர் முதலாந்
தலமோ ராறுஞ் சிரமோ ராறு
மின்னவிர் முடியும் பன்னிரு கரமு
மழகுறப் பொலிந்த மழகளி றனைய
கந்தனை யுமையாண் மைந்தனைக் குமரனை
மோகனை வடிவேன் முருகனை மயூர
வாகனை யநுதினம் வழுத்துபே ராணையன்
றெள்ளிய கலைபயில் பள்ளியி லரிவரி
கற்குமு னைகொடை கற்றறி நிபுணன்
சற்குண லளிதன் சரசசல் லாபன்
செவியினுங் கையினுஞ் செல்பவர்க் கினியநாற்
கவியெனு மமுதமுங் கனகமு மிறைப்போன்
றன்முகங் கண்டவர் தாங்கள்பின் புல்லர்பேய்
வன்முகங் கண்டு மலங்கா தருள்வோ
னருமையும் பெருமையு மடுத்தவ ரெளிமையு
முரிமையும் பழமையு முண்மையு மறிந்தோன்
மருண்டுசொற் பணிந்து மிரண்டுரை யாத
சத்திய வசன னித்தியகல் யாணன்
வரையா தெவர்க்கும் வழங்குபொன் மேக

கரைகடந் தொழுகுங் கருணைத் தடங்கட
லியலளப் பரிய நயகுணக் குன்ற
மன்பு கனிந்த வின்பக் கொழுங்கனி
பெருமைக் களஞ்சியர் தருமக் கொள்கல
மாதுலர் திரவியம் வேதியர் தாபரங்
கற்றவர் கண்மணி யுற்றவர் பிராண
ஞவலர் கற்பக மேவலர் கூற்ற
மேற்றவர் கலிநோய் மாற்றுசஞ் சீவி
தரைமுழு தாளுந் துரைகள் சிகாமணி
தந்திர விவேகி மந்திர யூகி
யொருதனி வீரப் பொருதிறற் சேவகன்
பொறுமையி லுயர்ந்த பூமி பாலகன்
சிறுமையில் பெருநிதி சேரள கேசன்
சைவசித் தாந்தங் கைவரு சூரிசின்
முல்லையம் பதிசூழ் நெல்லையம் பதிவாழ்
பிடிநடைப் பூரணக் குடமுலைச் சிறடித்
துடியிடைக் கோதையெம் வடிவுடைத் தாயொடும்
வரைவனப் பெருமா னரசுவீற் றிருப்ப
மனைத்தளங் கண்ட மணிநெடுங் கோயி
லினைத்தழ குங்கண் டமைத்தது மன்றிப்
பாவியற் றமிழ்தேர் காவியப் புலவர்
கரகம் பிதத்துடன் சிரகம் பிதஞ்செயத்
தேனூற் றிருந்து செவிதொறுங் கனிய
நானூற்றுக் கோவையு நாற்கவி வண்ணமும்
பலர்புகழ் சீரேர்த் தலபு ராணமு
மிருநிலம் புகழு மொருகலம் பகமு
நீடுல குவப்பப் பாடிநிலை நிறுத்துங்
கூறுசொற் கவிதா சாருவ பௌமன்
வாரணக் கொடைபயில் காரணக் கொடையான்
றருவொப் பெனவெழு தாரணி புரக்கு
மிருவப் பன்பெறு மிராச குமாரன்
றெரிதமிழ்க் கூடற் பெரியகர்த் தாக்கள்

வரிசைப் பெயர்பெறும் வரிசைத் துரைமகன்
சிங்காச னத்துரை மங்கா மைக்குமுன்
சூரிய மூர்த்திதன் காரண வரத்தாற்
பேர்பெற வுதித்த சூரிய மூர்த்தியோ
டாசர்க் கரசென வவனியேழ் புரக்கு
மிருவப் பனுக்கு மின்னுயிர்த் தாதை
கருவுடை மேகக் கடுஞ்சிறை தவிர்த்த
பருவுடைப் பெருமான் றிருமலைக் கொழுந்துதன்
ஒருதவக் கொழுந்தென வருசிவக் கொழுந்து
ஞான கரனபி மான பரணன்
செந்தமிழ்க் குதவுந் தியாக வாரிதி
வந்தவினை தீர்த்த மகரா சனுக்கும்
வாரிசூழ் கிடந்த மகிதலம் புரக்குங்
காரிகூ டற்றுரை கல்விக் களஞ்சியர்
தாயகத் துணையெனு நாயகப் பெருமாள்
மேகவார் குழலியர் விழிமனங் கவரு
மோகநா யகனெனு மேகநா யகவேள்
வீறுள மணிய காரர்சட் டம்பி
வைத்தவா ரமுமபி மானமும் பொறுமையுஞ்
சத்தியவா சகமுந் தமிழறி புலனும்
புத்திசா துரியமும் பொலிவுறு நிபுணன்
முத்துநா யகமலர் மூவேந் தருக்கும்
பெருமைபெற் றுயர்ந்த வருமைமைத் துனவேள்
இராசைப் பதிவள ரிருவப் பனையருள்
வரிசைப் பெரியவன் வடமலை யப்பனைத்
தஞ்சமென் றடைந்தே னஞ்சலென் றளித்தா
னித்திறம் பாரவன் கைத்திறம் பாடின
னுதலா னீயு மவனையே பாடிப்
போதியென் றுரைப்பப் புகழ்ந்தவற் பணிந்து
சிந்தையி லெழுந்த சிறுகளி முதிரத்
தந்தனை செல்வந் தமிழ்வலோ யென்னச்
சென்றனன் பொற்குடஞ் செறிந்தொளி ராடகக்

குன்றென வுயர்ந்த கொடிநெடு மாளிகைப்
பச்சொளி நீலப் பருக்குமிழ் செறித்த
வச்சிர கபாடம் வகுத்தநீண் முன்றிலிற்
குடகமு மீழமுங் கடகரி நிரைப்பக்
காம்பிலி யாரியம் வாம்பரி வகுப்ப
வல்லமுந் துளுவமு மணிமுத் தளப்பக்
கொல்லமுங் கவுடமுங் குடநிதி யிறைப்ப
மகதமுங் கடாரமுங் குகுதமும் வளைந்து
கவிகையுஞ் சுடர்மணிச் சிவிகையுங் குவிப்பத்
தென்கலிங் கந்தினம் பொன்சலிங் கந்தரக்
கருநட மாளுவங் குருமணி சொரிய
வங்கஞ் சிங்கள மணிமுடி யேந்தக்
கங்கங் குலிசங் கவசம் வழங்க
மையலங் களிற்று மணிமுடி யரசர்
கொய்தபட் டாடைக் குறும்பாய் விரித்துக்
கையணை நாப்பண் செய்யகண் முகிழ்ப்ப
முறையிடுந் தெவ்வர் முறைமுறை முத்தந்
திறையிடுந் தழனி செறிந்தபொன் வாசலி
னின்றனன் சமையம்யா தென்று வினாதலு
மாதுலர் வறியோ ரடுத்தவ ருற்றவ
ரேதிலர் பெரியவர் யாரையு மழைத்து
வரிசையின் முறைமுறை நிரைபெற விருத்திக்
கனியுமுக் கனியு மினியபாற் குழம்பு
மிறுகுவெண் டயிரு நறியவா னெய்யு
மறுவிலா வடிசிலு மலிந்துதேக் கெறிய
வறுசுவைக் கறியொடு மன்பொடு மருத்தி
மனந்துணிந் தெவர்க்கும் வரையா தம்பொன்
றினந்தினம் பொழியுந் தியாக மண்டபத்துச்
சூரிய படத்தாற் றுலங்குபூந் தழுவணைச்
சீரிய தமனியச் சிங்கா தனத்து
வேதிய ரொருபால் விருந்தின ரொருபால்
வாதிய லேழிசை வல்லவ ரொருபாற்

காவல ரொருபாற் கவிமழை பொழியும்
பாவல ரொருபாற் பதிந்துசூழ்ந் திருப்ப
விருந்தவன் விரைந்தாங் கெழுந்தெதிர் வந்தனன்
பரிந்துமுன் னெடுநாட் பழகுநண் பினர்போன்
முற்றவத் துறுபய னுற்றதின் றென்றனன்
வருகவென் றுருகுக யிருகையிற் றாங்கினன்
வியப்புட னுள்ளே பயப்பயக் கொடுபோய்த்
திருத்திக ழாசனத் திருத்தி யிருந்தனன்
முளரியின் மலர்மகள் முகமலர் குடிகொள
வொளிபெற வெனதுட லுளமொடு புளகெழ
விதிவிளை தெறுகலி விடைகொள வருண்மழை
குதிகொள விணைவிழி குளிர நோக்கினன்
குருமணி மகரக் குழைக்கா தழக
வருள்பரி மளிக்கு மம்புய விலோசன
சுந்தர சீதள சந்திர வதன
மடலவிழ் குவளைமேல் வரியளி துளிமறை
யிடையிடை பொதுளிய விருபுய பூதர
கொடியிடை மடவியர் குடமுலை மிருகமதம்
வடிபுழு கொடுகமழ் வரைநெடு மார்ப
தியாகவை போகபூ லோகதெய் வேந்திர
பலகலை நிபுண பார்த்திப சேகர
கலியுக கன்ன கருணா கடாக்ஷ
மதுரித வசன விதரண சூர
விரவலர் தவமே மருவலர் ரிடியே
கற்றவர் துணையே யுற்றவ ரமிர்தே
முதியபாட் டமைத்த மதுரைவிட் டாசே
யிரசையம் பதிவாழ் கருணையங் கடலே
வடமலை சாயினுந் திடமலை யாயெனக்
கடமலை யழைப்ப வுடன்மலை வகற்றித்
தடமலை யேந்தும் வடமலை வேந்த
வென்றுசொன் மதுர வியற்றமி ழிசையொடுந்
துன்றுநற் பொருளொடுஞ் சுவைபெறக் கேட்டனன்
பெருகிய வுவகை கரைகடந் தேற
மூட்டுபொற் கஞ்சுகம் பூட்டற நிமிர்ந்து

வென்றிகொண் மணிப்புயம் வீங்குறப் பலகா
லன்றுநன் றென்ன நன்முடி யசைத்தனன்
பொருக்கென வெழுந்து சரக்கறை திறந்தனன்
பகைத்திடு மரசர் திகைத்திட நாளுந்
திறைகொணர்ந் தளித்த நிறைபசுங் கனகஞ்
செய்யபட் டாடை துய்யமென் றூசு
மின்னிய சரப்பணி பின்னுபொன் னரைஞாண்
மணிவிர லாழி யணிமணிக் குண்டல
நித்தில மாலை சித்திர மகுட
நவமணிப் பதக்கங் கவின்மணித் தண்டிகை
வேண்டுவ வேண்டுவ விரைந்திவை முதலா
வாண்டகை கொள்கென வன்பொடும் வழங்கினன்
போற்றுசெந் தமிழ்முரு காற்றுப் படைக்காச்
செந்தில்வாழ் முருகன் வந்துநக் கீரன்
வன்சிறை தவிர்த்தென வென்சிறை தவிர்த்தனன்
றன்கட னும்மென் றென்கடன் தீர்த்தனன்
மாடுந் தொழுவும் வயலுந் தோட்டமும்
வீடும் விளக்கும் விளங்குறச் செய்தன
னொருகுறை யில்லா துயர்ந்தன னெளியேன்
பெருநய சுற்றமும் பெண்டிரு மக்களும்
கற்றபா வலருஞ் சுற்றவா துலருஞ்
சூழ்ந்துவாழ் வுறவினி தூழி
வாழ்ந்தவன் புவிமேல் வாழி வாழியவே.

முற்றும்.

---

௧ கோதிச்சிக் கின்றி முடிக்கின்ற மாலைக் குழலிவிடு
தூதிச்சிங் கின்றுசெங் காவிநல் காய்துணைக் கண்கறுத்து
போதிச்சிக் கென்று பணைத்திறு மாந்த முகிழ்முலைப்பூ
மாதிச்சிக் கின்றபொன் மார்பா விரசை வடமலையே.

௨ ஆலைக் குவளைக்கும் விற்கரும் பான்கணை யைந்தும்வந்தென்
சேலைக் குவளைக் கிடர்செய்யு மோதிரை நீர்படிந்த
வேலைக் குவளைக்கங் காந்தாய் நறுமழை வெள்ளந்துள்ளு
மாலைக் குவளைப் புயத்தா விரசை வடமலையே.

௩ மேல்வளைக் கும்பனி கீழ்வளைக் குங்கடல் வேள்கரும்பைக்
கால்வளைக் குந்தொறுங் கைவளைக் கேபயங் காமர்மள்ளர்
சால்வளைக் குங்கொழுக் கால்வழி போய்முத்தந் தட்டுகுட
வால்வளைக் கஞ்ச வயல்சூ ழிரசை வடமலையே.

௪ ஈர்க்கிடை போகப் பொருமுலை மாலை யிளம்பிறையாற்
பார்க்கிடை யானது பார்க்கிலை யேயெதிர் பாறிட்டொன்னார்
நீர்க்கிடை போனெகி ழாமனம் பேதிக்க நேரிடும்போர்
வார்க்கிடை வேற்கை யபங்கா விரசை வடமலையே.

௫ படைத்தலை வாளை நிகர்போ மலர்க்கணை பாயநொந்து
சடைத்தலை வாளை முகம்பார்க் கிலாயலை தத்துதெண்ணீ
ருடைத்தலை வாளை விரிமுத்த ராசி யொதுக்கியவாய்
மடைத்தலை வாளை குதிபா யிரசை வடமலையே.

௬ முடக்கால் வளைக்கும் பிறைக்கீற்றுக் கண்டபின் மோகமென்னு
லடக்கா வகைகை கடந்ததெண் ஞணமர்க் குந்தமிழ்க்கு
மிடக்கா லெனினு மொருக்கான் மனங்கொண் டெடுத்தவடி
மடக்கா முழுவல் லமையா னிரசை வடமலையே.

௭ கூவிக்கு நான்சொல்வ தோவெம்ம னோர்நின் கொழுங்கருணை
வேலிக்கு ணின்ற பயிரல்ல வோவெறுங் கான்புகுந்த
நீலிக்கும் ராவணன் மோலிக்குக் கும்ப நிரும்பனுக்கும்
வாலிக்கும் வாளிதொட் டாயிரை யூரில் வடமலையே.

௮ பொரிந்தது முத்தம் புகைந்தது சாந்தம் பொருக்கெழுந்தே
கரிந்தது பூவணை மேதுப டாள்பனிக் கால்பரப்பி
விரிந்தது வான நிலாவெள்ளங் காணுன்னை விட்டொருநாட்
பிரிந்ததற் கித்தனை யுண்டோ விரசைப் பெரியவனே.

௯ இரசைப் பதியில் வடமலை ராயன்றெய் வேந்தனென்னைப்
புரசைக் களிற்றிற் பவனிவந் தான்வந்த போதிலென்பெண்
ணரசைக்குறித்தின் றுபோர்க்கோலங்கொண்டவனங்கன்வெற்றி
முரசைப் பதித்துடைப் பாரிலை யோவமர் மூளுமுன்னே.

௧0 ஏர்விற் றுப் பள்விற் றுடைமையெல் லாம்விற் றிருந்தமனைச்
சீர்விற் றனமுன்னைக் காறாத முன்றெரி சித்தமின்பு
போர்விற் றடக்கை யிரையூர் வடமலைப் பூபதிநின்
பேர்விற்று முன்விற்ற தெல்லா மறுபடி பெற்றனமே.

வேறு.

௧௧ பொருந்து திக்கைக் கருங்கங் குல் யானையான்
புறப்ப டும்படைப் போர்க்கிலக் காய்மலைத்
திருந்து திக்குத் திகையறி யாதுவிண்
ணெழுந்து திக்கு மிளம்பிறைக் கேங்குமோ
வருந்து திக்கற் புடையா ளசோதைமுத்
தாடும் ரத்ந முழுமணி யேயனை
வருந்து திக்கப் புகழ்படைத் தாய்சின்ன
வடம லேந்திர மகராசராசனே.

வேறு.

௧௨ இங்கணையு மொருகணைவிட் டிருகணையுந்
துயிலவொட்டா திரவெல் லாம்வந்
தைங்கணைவேள் பொருவதெல்லா மறுகணைவே
ணியனறிவான் யாரை நோவேன்
கொங்கணையும் பங்கயமேற் குருகணைய
முருகணையுங் குமுதந் தோறுஞ்
சங்கணையும் வளவயல்சூ ழிரசைவட
மலையேமுத் தமிழ்வல் லோனே.

வேறு.

௧௩. முடிக்கு மருப்புக் கிருந்தலைங் கோதைப்பெண் மூரிவில்வேள்
பிடிக்கு மருப்புக் கணைக்கிலக் கோசிறைப் பேரிட்டொன்னார்
குடிக்கு மருப்புக் கடலேற்றி விற்பக் கொடிமதில்பாய்ந்
திடிக்கு மருப்புக் களிற்றா யிரசை யிருப்பவனே.

௧௪ பாடுவன் பாடுவ தல்லாமற் பாவலர் பாடலுங்கொண்
டாடுவன் செய்ய னிரையூர் வடமலை யன்றிப்புல்லன்
றேடுவன் றேடிப் புகைப்பா னவனுக்குச் செந்தமிழன்
வேடுவன் சேரியி லெவ்வாறு நானம் விலைசொல்வதே.

ஸ்ரீ:

பாப்பாவினம்.

இது,

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச்

"செந்தமிழ்"உதவிப்பத்திராசிரியர்

திரு. கி. இராமாநுஜையங்காரால்

பரிசோதிக்கப் பெற்றது.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—௩௯.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

ஸ்ரீ:

பாப்பாவினம்.

இது,

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச்

"செந்தமிழ்"உதவிப்பத்திராசிரியர்

திரு. கி. இராமாநுஜையங்காரால்

பரிசோதிக்கப் பெற்றது.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—ருகூ.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

ஸ்ரீ:

இப்புத்தகத்திலடங்கியவை.

பக்கம்.

ஸ்ரீ:

முகவுரை.

பாப்பாவினம் என்பது, பாவும் பாவினமுமாக இயற்றப்பட்ட தொரு பிரபந்தவிசேடத்தைக் குறிக்கும். இது, மாறன் பாப்பாவினம் எனவும் வழங்கப்படும்.

இதிற் காணப்படும் பாடல்கள், செய்யுட்குவேண்டும் நலனெல்லாம் ஒருங்குகொண்டனவாய்த் தொல்காப்பியச் செய்யுளியலிற்கூறிய இலக்கணங்க ளமைந்தனவாய், அவற்றின்பெயரும், அவற்றுளமைந்து கிடக்கும் அணியும், அகத்திணையும், புறத்திணையும், துறையும் முதலியனவும், யாப்பருங்கலக்காரிகையுடையார் முதலிய பிறநூலாசிரியர் கொள்கைகளும் விளங்க வரையப்பட்ட குறிப்புரையுடையனவாய்த் திகழ்கின்றன. அவற்றுள் இறுதிநின்ற ஐந்தும், இக்காலத்து வழக்கற்ற பரிபாடற்குதாரணமாக அகத்தியர் கூறிய ஐந்துறுப்புடன் சங்கத்தார் பரிபாடலின் நடையமைய இயற்றப்பட்டுள்ளன.

இதனை இயற்றினர் பெயர் முதலிய விவரமொன்றும் தெரியவில்லை. இது, மாறனலங்கார உரையாசிரியராகிய பேரைக் காரிரத்தினகவிராயரால் இயற்றப்பட்டதென்று, கும்பகோணம் அரசாங்கக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் வித்வான் ஸ்ரீமத் ஆ. மா. சடகோபராமாநுஜாசாரியரவர்கள் மாறனலங்காரவரலாற்றில் எழுதியுள்ளார்கள். அதற்கு யாதோராதாரமும் அவர்களாற் காட்டப்படவில்லை.

இந்நூற்செய்யுட்களின் நடைமுதலியவை மாறனலங்கார உதாரணச்செய்யுட்களின் நடைமுதலியவற்றையொத்தனவாயிருத்தலாலும், மாறனலங்காரத்துள் உதாரணமாக எடுத்தாளப்பட்டனவும் திருக்குருகைப்பெருமாள்கவிராயரியற்றியனவுமான குருகாமான்மியச்செய்யுட்களிற் சிலவும், நம்பெருமாள் மும்மணிக்கோவைச் செய்யுட்களும், வேறுபலசெய்யுட்களும் இந்நூலகத்துக் காணப்படுதலாலும் இது, மாறனலங்கார ஆசிரியராகிய திருக்குருகைப்பெருமாள்கவிராயரால் தொகுத்தியற்றப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது.

மேலும், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி: என்னும் தமிழிலக்கணமைந்தனுள், செய்யுளைப்பற்றிவருவன பொருளும் அணியுமாம். அவற்றுள், பொருளிலக்கணத்துள், பிற்காலத்துப் பயிற்சி குன்றிய புறப்பொருட்பகுதி யொழித்து, அகப்பொருள்பற்றி மாறனகப்பொருளும், அணியினுட் பொருளணி சொல்லணியாதிய வெல்லாமடங்க மாறனலங்காரமும், தம் ஈடுபாடுதோன்றப் பகவத் பாகவத விஷயமான உதாரணச்செய்யுட்களுடன் வேண்டுவனகூட்டி விரித்தியற்றியதிருக்குருகைப்பெருமாள்கவிராயர், அவ்வாறே பொருளும் அணியுமாகிய அவற்றுக் கிடனாய்விளங்கும் யாப்பினிலக்கணங்களமைய இதனை யியற்றினரென்று ஊகித்தலும் பொருந்துவதாம்.

அன்றியும் இது, பின்னும் வேண்டுவன கூட்டித் திருத்தி விரித்துச் செம்மைசெய்துகொள்ளுமாறு முற்படவரைந்த வரைவேயாய்ப் பின் அவ்வாறு செம்மைசெய்யப்படாதநிலையில் உள்ளதென்பது, இதன் ௩௰, ௩௫-ம் பக்கங்களின் கீழ்க்குறிப்பு முதலியவற்றால் விளங்குதலால் திருக்குருகைப்பெருமாள்கவிராயரே, குருகாமான்மியம், மாறனலங்காரம், மாறனகப்பொருள், நம்பெருமாள்மும்மணிக்கோவை முதலிய நூல்களைச் செய்து பின்னர்த் தம் அந்திமதசையில் இந்நூலை யியற்றி யிதனைச் செப்பஞ்செய்துமுடிக்குமுன் காலகதி யடைந்துவிட்டனரோ என்று சங்கித்தற்கு மிடனாகிறது. இது நிற்க.

இந்நூலின் ஏட்டுப்பிரதியொன்று செந்தமிழ்ப்பத்திராசிரியர் ஸ்ரீ உ.வே. திரு நாராயணையங்கார்ஸ்வாமி அவர்களிடமிருந்து நெடுநாளைக்குமுன் எனக்குக் கிடைத்தது. வேறுசில பிரதிகளும் பெற்று ஆராய்ந்து இதனை வெளியிடக்கருதி இதுவரை முயன்றும் வேறுபிரதிகள் கிடைத்தில. கிடைத்த ஒருபிரதியும் சிதன்முதலியவற்றாலழிந்தொழியாது காக்கக்கருதி, அதனை அதிலுள்ளவாறு, பொருள்விளங்காத இடங்களில் வினக்குறி (?) கொடுத்துச் செந்தமிழிற் புத்தகவுருவில் வெளியிட்டு வரலானேன். இந்நூலின் இறுதிப்பகுதி செந்தமிழில் வெளியிடப்படுந்தருணத்தில் இந்நூல் முன்னமே கலாநிலயத்தில் வெளியிடப்பட்டுளதென்றறிந்தேன். கலாநிலயத்தில் வெளிவந்த இந்நூற்பகுதிகளைப் பண்ணுருட்டிப் போர்டுஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ வித்வான் கோ. சுந்தரராமாநுஜநாயுடு அவர்கள் அனுப்பியுதவினர்கள். அவர்கள் உதவி பாராட்டத்தக்கது. அவர்கள் பிரதியும் சில திருத்தங்கள்செய்வதற்கு உதவியது.

மாறனலங்காரத்துள் உதாரணமாக எடுத்தாளப்பட்ட செய்யுட்களிற் பல இந்நூலகத்துப் பயின்றுள்ளமை முன்னரே குறிக்கப்பட்டது. அவற்றுள் மாறனலங்காரத்திற் கண்ட பாடபேதம் முதலியன இந்நூலகத்து அவை வந்த பக்கங்களிற் கீழ்க்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளன.

இந்நூல், மாறன் பாப்பாவினம் என்று வழங்கப்படுமேனும், ஏட்டுப்பிரதியினிறுதியிற் காணப்படும் தற்சிறப்புப்பாயிரச் செய்யுளினும் ஏட்டுப்பிரதியின் தொடக்கத்திலும் முடிவிலும் பாப்பாவினம், பாப்பாவினம் முற்றும் என்றே காணப்படுதலால், பாப்பாவினம் என்ற பெயர் கொடுத்தும், ஏட்டுப்பிரதியில் வஞ்சிப்பாவின் முடிவுவரை ஓலையிதழெண்கள் தொடர்ந்திட்டு வஞ்சிப்பாவின்முடிவிற் பாப்பாவினம் முற்றும் என்று எழுதிப் பரிபாடற்கவிகளெழுதிய ஓலையிதழ்கட்குத் தனியெண்கள்கொடுத்து முடிவிற் பாப்பாவினம் முற்றும் என்று மறித்தும் குறித்திருத்தலால் அவ்வாறே பரிபாடற் கவிகளைத் தனியெண்கள் கொடுத்துப் பிரித்தும் பதிக்கலாயிற்று.

அறிவாற் பெரியார் மேற்கோடற்குரிய இப்பணியைச் சிற்றறிவினனாகிய யான் மேற்கொண்டமையால் நேர்ந்த பிழைகளை அறிஞர் பொறுத்தருள்வார்களாக.

இங்ஙனம்,

திரு. கி. இராமநுஜையங்கார்,

சேந்தமிழ் உதவிப்பத்திராசிரியர்,

மதுரைத்தமிழ்ச்சங்கம்,

மதுரை.

ஸ்ரீ:

தற்சிறப்புப் பாயிரம்.

[தெய்வ வணக்கம்.]

என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமா
னென்றும் எனக்கே பிரானுவான்—என்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமு
மறவாது வாழ்த்துக வாய்.

[செயப்படுபொருள்.]

தேவர் திருவள் ளுவர்புலமைச் செல்வத்தால்
யாவரிணை யென்பா ரிசைத்தகுறட்—பாவினையும்
பாடினேன் பாப்பா வினம்பாடப் புல்லறிவா
னூடினே னென்பதனு னுன்.

ஸ்ரீ:

பாப்பாவினம்.

வெண்பா.

1 திருமகளோ பார்மகளோ தென்னரங்கன் வெற்பில்
வருமகளோ யாரோவிம் மாது.

இது, ஒருவிகற்பக் குறள்வெண்பா. அலங்காரம்—சுத்தசந்தயம். பகுதி—இயற்கை. துறை—ஐயுறல். (க)

2 மாத ரிலவிதழ்போன் மாண்பிற்றே மாதவனால்
வாரனை ரருந்து மருந்து

இது, இரண்டு விகற்பக் குறள் வெண்பா. அலங்காரம்—அவயவ வுவமை. பகுதி—இதுவுமது. துறை—புணர்ச்சியின் மகிழ்தல். (உ)

3 மலைமதிதென் மாறன் வரைவேல் விழியாண்
முலைவதன நண்பா மொழி.

இதுவும் ஒருவிகற்பக் குறள்வெண்பா. அலங்காரம்—நிரனிரை யுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல். (௩)

4 தேர்வலவா வென்னு முகின்முந்திற் செங்கண்மால்
காரகத்தாட் கென்வாச கம்.

இதுவு மொருவிகற்பக் குறள் வெண்பா. அலங்காரம்—சுவையி னுள் அழுகை; வறுமைபற்றியவழுகை*. பகுதி—பொருள்வயிற் பிரிதல். துறை—வலவனொடுகூறல்.

ஆக விவற்றுள்,—காசு பிறப்பு மலர் நாள் என்னு நான்குதாரணத் தான் வந்திற்றவாறு கண்டுகொள்க. (௪)

*மாறனலங்காரத்தில் இது, 'இளிவால்பற்றிவந்தஅழுகை' என்று காட்டப் பட்டிருக்கிறது (பக். ௩0௪.)

5 *நிலம நிலமனல்வா னீரென் பனவா
யலமனலம னமலன்—புலனைந்தும்
வென்றார் தொழுமால் விளங்குதிரு விண்ணகா
மென்றார்க்கு முண்டோ விடர்.

இது, இரண்டுவிகற்பத்தா னிரண்டுகுறள்வெண்பாவாய் நடுவு தொடைக்கேற்ற தனிச்சொல்லா லடிமூஉய் வந்த விருகுறணேரிசை வெண்பா. அலங்காரம் சொல்லணியினுள், முதலடியு மிரண்டாமடியு மிடைவிடா வடிமுதன் மடக்கு. திணை—பாடாண். துறை—நகரவாழ்த்து.

6 உலகு புகழரங்கத் துத்தமமெய்ஞ் ஞானத்
திலக ருடன்பயின்று சென்று—புலவீர்
நிலமிசைதாழ்ந் தேத்தி னெடுமா லுமக்குந்
தலமிசைப்பே ரின்பந் தரும்.

இதுவு மிரண்டுகுறள்வெண்பாவாய் நடுவு தொடைக்கேற்ற தனிச்சொல்லா லடிமூஉ யொருவிகற்பத்தான்வந்த விருகுறணேரிசைவெண்பா. திணை—இதுவுமது. துறை—புலவராற்றுப்படை. (௬)

7 †நாவலவன் பின்போந்த நன்னீர்த் திருவரங்கங்
காவலன்பொற் றாளாங் கமலத்தே—பாவலர்தம்
பாமாலை சூட்டாதப் பாமாலை யையெவனோ
தாமா னிடர்க்களிக்குஞ் சால்பு.

இது, திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பணிதல். அலங்காரம்—தொகைவிரியுருவகம். (௭)

8 பூங்கமலக் கோயிலாள் புத்தமுதி னுட்பிறந்தாள்
வீங்கு துணைமுலையாள் வெண்ணகையா—ளோங்குபுனற்
பொன்னி நடுவுட் பொருண்மார் பகத்தாளென்
சென்னி பிரியாத் திரு.

திணை—இதுவுமது. துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—பொருட்டன்மை. (௮)

* 'நிலமநிலமன் னெடுவெளிதீ நீரா' வென்பது மாறனலங்காரத்துக்கண்ட பாடம் (பக். ௧௮௨.)

†'நாவலன்பின் போந்த நறுநீர்த் திருவரங்க'மென்பது மாறனலங்காரத்துக் கண்ட பாடம் (பக். ௭௪).

9 அருண்மனையா ளாயுவந்த தாழியான் கோடு
பொருதிரைப்பாற் றெள்ளமுதிற் போந்த—திருவரங்கம்
பூம்பதுமக் கண்முகிழ்த்துப் புத்தேளிர் கைதொழுமால்
பாம்பணைமேல் வைகும் பதி.

திணையுந் துறையு மிதுவுமது. அலங்காரம்—இணையிடைநிலைப் பெயர்நிரனிறை.

இவைமூன்றும் முதற் றுறட்பாவினோடு தனிச்சொலிடை வேறுபட் டிரண்டசையானு மோரசையானு மாசிட் டிரண்டுவிகற்பத்தான்வந்த வாசிடைநேரிசைவெண்பா. (௯)

10 சிரந்தா னிழந்தா னயனச் சிரங்கொய்
திரந்தா னிரப்பொழிப்பா யென்ன—வரந்தான்
புரந்தா னிருப்பப் பொருள்வேறுண் டென்று
பரந்தானுண் டென்ன பயன்.

இதுவுந் திணையுந் துறையு மது. அலங்காரம்—சுவையினுள், பேதைமைபற்றிவந்த நகை. (௧0)

11 மாதங்க மூலமெனும் வண்குருகூர் மால்வரையோர்
மாதங்க மஞ்ச வருபோழ்திம்—மாதங்க
மாதங்க வாருவலை யத்தணைத்து வல்விரைந்தம்
மாதங்கம் வென்றானோர் மன்.

இது, பகுதி—வரைபொருட்பிரிவு. துறை—(தோழி கூற்று. செவிலி முன்னிலை.) களிற்றிடையுதவிக் கறத்தொடுநிற்றல். அலங்காரம்—சொற்பொருட்பின்வருநிலை.

இவை முதற் றுறட்பாவி னிறுதிக்க ணோரசையானு மீரசையானு மாசிட் டொருவிகற்பத்தான்வந்த வாசிடை நேரிசைவெண்பா. (௧௧)

12 காவலர்போற் காவலர்போற் காதங் கமழநந்தை
காவலனைக் காவலர்தூய்க் காவலெனக் கற்றுணர்ந்தோர்
காவலனே காவலனே காத்தியெனக் கண்டுற்றுங்
காவலகா வென்னார் கலர்.

இது, திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி. அலங்காரம்—இதுவுமது. (௧௨)

13 வாராய்நன் னெஞ்சமே வைகலுநம் பாவிளமை
தீராமூப் பெய்துந் திறமின் றுணர்ந்தனமா
ஞாரா யணன்புகழே நாடியினி நஞ்சனனஞ்
சாராத தாராய்தல் சால்பு.

இது, திணை—வாகை. துறை—பொருளொடுபுகறல். அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம்.

இவையிரண்டும் நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி யொருவிகற்பத் தான்வந்த வின்னிசைவெண்பா. (கங)

14 இவ்வுலகத் தின்பமுவர்த் தெஞ்ஞான்றும் பூமகள்கோ
னவ்வுலகத் தின்ப மதுவே விருப்புற்றார்
முந்நீர் வளாக முழுதுறினும் வாய்க்கொள்ளா
ருய்ந்நீர வல்லா வுரை.

இதுவும் திணை—வாகை. துறை—சால்புமுல்லை. அலங்காரம்—இதுவுமது. இது தனிச்சொல்லின்றி யிரண்டுவிகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா. (கச)

15 மண்ணுயிரே வான்பிரம மாதவனன் றென்றுரைத்தல்
பொய்கொலை கள்ளுண்டல் பொருள்வெளவ லிவ்வனைத்து
மின்றே சிறிய ரிடத்தன விவ்வூழிக்
கடைக்கா லென்செய்யார் கலர்.

இது, திணை—பொதுவியல். துறை—முதுகாஞ்சி. அலங்காரம்—பேதமைபற்றிய நகை. (கரு)

16 கண்ணனருள் பெற்றார்நன் கல்வியே செல்வமெனக்
கொல்லா விரதங் குறிக்கொள்ப வேறுசிலர்
தீக்கொலையிற் செய்பொருளே செல்வமென நின்றனரா
லென்னே யுலகியற்கை யென்.

திணை—இதுவுமது. துறை—பொதுமொழிக்காஞ்சி. அலங்காரம்—சுவையினு ளிழிவுபற்றிய வழுகை.

இவையிரண்டும் பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. ()

17 கோங்கரும்பு போலுங் குவிமுலைக ளாம்பலகத்
தாங்கரும்பு நல்லை யரும்பேய்க்கும்—பூங்குழற்குச்
செவ்வாயும் வெண்ணகையுஞ் செண்பகமா றன்சிலம்பிற்
காமர் சுனைக்காவி கண்.

இஃ திரண்டாமடி யிறுதி தனிச்சொற்பெற்று மூன்றுவிகற்பத் தான்வந்த வின்னிசைவெண்பா. அலங்காரம்—தொகைவிரியுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல். (௧௭)

18 நாராய ணாய நமவென்றே நாவீற
ரோரா யிரமென் றுரைத்தகவிப் பாவமுத
மாராய் பவர்க்கடிமை யாகினேன்—வாரானிங்
கென்பா லொருநாள் யமன்.

இது, மூன்றாமடியினிறுதி தனிச்சொற்பெற்று இரண்டுவிகற்பத் தான்வந்த வின்னிசைவெண்பா. திணை—வஞ்சி. துறை—நெடுமொழி. அலங்காரமு மது. (௧௮)

19 மாதராய் தென்னரங்கன் மால்வரைவாழ் மாதராள்
காம னிரதியெனுங் காட்சியாள்—காமவேள்
பூவாளி யென்பவற்றுண் மன்னுயிருண் பூவாளி
கண்டார் நிறையினையுண் கண்.

இஃ தடிதொறு மொரூஉத்தொடைபெற்று நேரிசைவெண்பாவிற் சிறிது வேறுபட்டுவந்த வின்னிசைவெண்பா. பகுதி—சேட்படை. துறை—அவயவங்கூறல். அலங்காரம்—தொகைவிரியுவமை. (௧௯)

20 இமிழ்திரைநீர் ஞாலத் திருளிரிய வான்றோய்த்
துமிழ்கதிர்வெண் டிங்க ளுடனேயொரு ஞான்றும்
வலஞ்செய் சுவண வடவரைபோன் மாடம்
பொலஞ்செய் மதின்கோ புரஞ்சிகர பந்தி
யிலங்கு பொழிலரங்கத் தெம்பிரான் பல்புகழைப்
பாடினார் பாதமலர் பாடிப் பணிமுடிமேற்
சூடினார்க் குண்டோ துயர்.

இஃ தேழடித்தாய்வந்த பலவிகற்பப் பஃறொடைவெண்பா. அலங்காரம்—பலபொருட்கொருபொருளுவமை. திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பணிதல். (௨௦)

21 தண்டுழாய் மார்பன் வடமலைசார் தண்புறவின்
வண்டுழா யோங்கி மிடைகோங்கின் கொம்பருழ
மண்டுகா ருக்க குறுந்திவலை வண்டளவங்
கண்டுகா ரென்று கடுக்கை யுடன்மலர்தல்
பண்டுநங் கேள்வர் பருவங் குறித்ததெனக்
கொண்டதெவ னன்னெஞ்சே கூறு.

இது, திணை—பெருந்திணை(ப்படலம்). துறை—பருவமயங்கல். தலைவிகூற்று. இஃ தாறடியான்வந்த ஒருவிகற்பப் பஃறொடைவெண்பா. அலங்காரம்—திரிபதிசயம். (உக)

22 மாதவனை யெவ்வுள் வழுத்தியமெய்ம் மாதவர்தா
மின்ப முறவெதிர்சென் றீதிறனு மின்பமுடன்
பேரின்ப மெய்துவது மீறிலாப் பேரின்பப்
பொன்னே நித்யந் தருமெனமுன் பொன்னனையாட்
குற்றதை யெவ் வாறுரைப்பே னுற்று.

இது, பொருள்வயிற் பிரிதல். துறை—வாட்டங்கூறல். அலங்காரம்—அவயவியுவமை. இஃ தைந்தடியா யடிதோறு மொரூஉத்தொடை பெற்றுப் பலவிகற்பத்தான்வந்த பஃறொடைவெண்பா. (உஉ)

23 கேளா திருந்திலேன் கேசவா வென்பதனை
வாளா திருந்திலேன் வாழ்த்தினே—னாளானார்க்
காளானே னென்னிணையிங் கார்

இஃ தொருவிகற்பத்தான்வந்த நேரிசைச் சிந்தியல்வெண்பா. திணை—வஞ்சி. துறை—நெடுமொழி. அலங்காரம்—பெருமிதஞ்சார்ந்த வுவகை; நெடுமொழிகூறல். (உங)

24 திருந்திழையாய் மாறன் றிருவாய் மொழியே
மருந்தாம் பிறவிப்பிணிக்கு மாதர் —தநம்பிணிக்கு
வாய்ந்தமருந் தென்பார் மடல்.

இது, பாருதி—மடல். துறை—உலகின்மேல்வைத்துக் கூறல். அலங்காரம்—மாட்டேறில்லா (ரூபகம்;) ஏகதேச வுருவகம். இஃ திரண்டு விகற்பத்தான்வந்த நேரிசைச்சிந்தியல் வெண்பா. (உச)

25 வழிமதுத்தார் மாறன் மணிவரைமேன் மாதர்
விழியெழுதி னுமிணை வெற்பெழுதி னும்
மொழியெழுத லாமோ மொழி.

பகுதி—இதுவுமது. துறை—எழுதவரிதென்றல். அலங்காரம்—இதுவுமது. (மாட்டேறில்லாத வேகாங்கரூபகம்.) இஃதொருவிகற்பத்தான்வந்த இன்னிசைச்சிந்தியல்வெண்பா. (உரு)

26 சோலை மலையழகர் தோண்மாலை காமுறுமுன்
மாலையா யாமமாய் வைகறையா யல்கிரவின்
றென்னேநீட் டித்த தெவன்.

திணை—பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை—இரவுநீடுபருவரல். அலங்காரம்—சுவையினுள் தன்கட் டோன்றிய வறுமைபற்றிய வழுகை. இஃதிரண்டுவிகற்பத்தான்வந்த வின்னிசைச்சிந்தியல்வெண்பா. (உசு)

27 நாணு நிறையு நலநுதாலுன் மாணிழையா
டந்தவன் காமத் தழல்கதுவ வெந்து
தருமடன்மா வேற்றன் தரும்.

இது, பகுதி—மடல். துறை—நாணழிவுரைத்தல். அலங்காரம்—ஏகதேச வுருவகம். இதுவும் மூன்றடியா யொரூஉத்தொடைபெற்றுத் தனிச்சொல்லின்றிப் பலவிகற்பத்தான்வந்த வின்னிசைச்சிந்தியல் வெண்பா. (உஎ)

28 நாரா யணனே நமவென் றுரைப்பவர்பால்
வாரா தொருநாளும் வல்வினைதான்
சாரா தொருதலையாய்த் தண்டதரன் சாராவாம்
போாத மாயப் பிறப்பு.

இது, சவலைவெண்பாட்டு. என்னை? "கனியிரு குறளாய் நான்கடியுடைத்தாய்த், தனிவர வில்லது சவலைவெண் பாட்டே" என விக்காலத்துள்ளோர் பெயரிட்டு வழங்கும் வேறுபாடென வுணர்க. அன்றியும், மூதுரையினுள்ளும், "அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவளாய், நட்டாலு நண்பல்லார் நண்பல்லர், கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்களேசங்கு, சுட்டாலும் வெண்மை தரும்" என்பதூஉ மிப்பாவென வுணர்க. (உஅ)

வெண்பா முற்றும்.

வெண்பாவினம்.

29 பெருநூல் பிறபல கற்பதின் மாற
ஒருநூல் கற்ப தாதிய முயிர்க்கே.

இது, குறள்வெண்பாவிற் கினமாகிய வெண்செந்துறை. இது விழுமியபொருளு மொழுகியவோசையுமாக வரல்வேண்டுமென்ற முறையே வந்தவாறு கண்டுகொள்க. (இது) திணை—காஞ்சி துறை—முது மொழிக்காஞ்சி. அலங்காரம்—சுவையிலுள், கல்விபற்றிய பெருமிதம். (க)

30 அண்டர் நாயக னரங்கன தடித்தளி ரணிமுடி மிசைபுனை தூயோர்
மண்டு தெண்டிரைக் கடற்புவி யிடைப்பிற வாரே.

இது, திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பணிதல். அலங்காரம்—ஏகாங்கரூபகம். இஃது ஈற்றடி குறைந் திரண்டடியாய்ப் பலசீரான் வந்தமையாற் குறட்டாழிசை. (உ)

31 நிலையி லாதன மூன்றுமே நிலையெனு நினைவொடு
நெடியமா லடியிணை நினையா தார்.
தொலைவி லாப்பவக் கடலிடை யழுந்துபு துயர்தலைப் படுவாரே.

இதுவு மீற்றடி குறைந் திரண்டடியா யொருவிகற்பத்தான் வந்தமையாற் குறட்டாழிசை. இது திணை—பொதுவியல். துறை—பெருங்காஞ்சி. அலங்காரம்—ஏகதேசரூபகம். (ங)

32 அம்புய மாதன் புறுமால் மலர்ப்பதந்
தம்பமென் றுய்ந்திலார் தர்ம மெய்தார்.

இது, விழுமிய பொருளு மொழுகிய வோசையு மின்றி யிரண்டடியுந் தம்மு ளளவொத்து வந்தமையாற் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள். அலங்காரம்—தொகையுவமை. திணை—பொதுவியல். துறை—முதுமொழிக்காஞ்சி. (ச)

33 புரவலர்நீத் தார்தமக்குப் பூமகள்கோன் றிருநறையூ
ரிரவலரிக் காமம் யமன்.

இது, செப்பலோசையிற் சிதைந்து வேற்றுத்தளைதட்டுக் குறள் வெண்பாவிற் சிதைந்துவந்த தாழிசைக்குறள். அலங்காரம்—முன்ன விலக்கினுள் பொருள்விலக்கு. திணை—வெண்பாற்கூற்றுப் பெருந்திணை. துறை—பொழுதுகண்டிரங்கல். (ரு)

34 மூவா மறைக்கு முதன்மொழியாய் நின்றதுவு—முகுந்தநாம
மோவா நமன்வந் தடக்கா தொழிப்பதுவு—முகுந்தநாமந்
தாவாத பேரின்பந் தனையிழைவார் சாற்றுவது—முகுந்தநாமம்.

இது மூன்றடியாய் முகுந்தநாமமென்னுந் தனிச்சொற் பெற்று வந்த வெளிவிருத்தம். திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம். (௬)

35 நாரா யணனே நரர்பேர் புகழா—தருள்கூர்வாய்
போரா யிரவா பிறர்தே நயவா—தருள்கூர்வாய்
கூரா ழியனே நமனூர் குறுகா—தருள்கூர்வாய்
ஆரா வமுதன் றருள்வாய் பிறவா—தருள்கூர்வாய்.

இது, நான்கடியா யருள்கூர்வா யென்னுந் தனிச்சொற்பெற்றுவந்த வெளிவிருத்தம். இதுவுந் திணையுந் துறையு மது. அலங்காரம்—சுவையினுள் அசைவுபற்றிவந்த வழுகை. (௭)

36 உண்டிக் காய்மா னிடர்பே ருரையா
ரண்டத் தப்பா லந்தா மத்தான்
றொண்டர்க் காட்செய் பவர்.

இது மூன்றடியா யாசிரியத்தளையான்வந்த வெண்டாழிசை. (௮)

37 படர்சிறைவண் டினந்துதைந்தே ழிசையெழுப்பு நறைவகுளப் பைந்தா மத்தான்
துடரிவளைக் கொம்பரிற்செந் தேனெனவே யினிமைதருஞ் சொல்லீர் சொல்லீர்
வடவரைபோற் பன்முலைக்கீழ் மதித்திடுதற் குளதாய
விடர்பெறுநுண் ணிடையினைக்கட் புலங்கொளவிங் கேதென்றே.

இது நான்கடியா யீற்றடியிரண்டும் இரண்டுசீர் குறைந்துவந்த வேற்றொலி வெண்டுறை. பகுதி—மதியுடன்படுதல். துறை—இடைவினாதல். அலங்காரம்—அவயவவுவமை. (௯)

38 ஏனைக் கடவுளர்பா லெவ்வரமும் பெற்றிடுக்க ணிழைத்த லாலே
கானத் தடைந்தரக்கர் கட்டழித்தான் றாள்பரவார்
மானத்தின் மாண்பிறந்த மானமும் வேறில்லையே.

இது மூன்றடியா யீற்றடி யிரண்டு மிரண்டுசீர் குறைந்துவந்த வோரொலி வெண்டுறை. திணை—பாடாண். துறை கடவுள்வாழ்த்து. அலங்காரம்—சுவையினுள் பேதமைபற்றிய நகை. (௧0)

39 தலையவிழ்தண் ணறவருந்திச் சுரும்பிமிர்பூந் தண்டுளபத் தாரா றறன்
விளைவளர்வண் புகழ்த்திருமால் பணிவரைமேன் மூன்றுமத விழுது கூர்கைம்
மலையுளதோ வந்ததென்ப ரஃதன்றி வாளியொடுங்
கலையுளதோ வந்ததென்பர் கறையோடுங் கண்ணின்றிக்
கொலையுளவாம் படிவேட்டை யாறிக்கொள்வா ரிடந்தழிய
சிலையுளதோ வெனிலுடக்குந் திண்சிலையுஞ் சினைதருபச்
சிலையுளரா லொளியிலரா லிவரெண்ணந் தெளிவரிதே.

இஃ தேழடியாய் முதலிரண்டடியு மறுசீரா யோரோசையாய்ப் பின்னைந்தடியும் வேறோரோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை. ஐந்தடியானும் ஆறடியானும் வருவன யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க. பகுதி—இருவருமுளவழி யவன்வரவுணர்தல். துறை—ஐயுறுதல். அலங்காரம்—அற்புதம். (௧௧)

40 மதுமகி ழணிதரு மார்பான் கூறிய
முதுமொழி யுரைதமிழ் மறைமுழு துற்று
ரிதுபொரு ளனுமுர னெய்துவ ரெய்தா
ரெதுபொரு ளதுபொரு ளனுநொது மலர்நூ
லதுபுக லுரைகற் றூர்.

இஃ தைந்தடித்தா யீற்றடியொன் றொருசீர்குறைந்து வெண்பாவினீற்றடிபோல மூச்சீர்த்தா யாசிரியத்தளையா னொன்னு மோரசைச் சீரானிற்ற வோரொலிவெண்டுறை. திணை—பொதுவியல். துறை—பனுவல்வாழ்த்து. அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம்.

41 வான்மா சறவழுத்தும் வாச மகிழ்த்தாமத்
தான்மா சறவுரைத்த தண்டமிழ்ப்பா வின்றேற்றே
வான்மாவி தென்றறிவா ரார்,

வாதியர்வாய் வீணடங்க வாசவகு ளாம்புயத்தா
ளேதியநூ லொன்றிலையே லுத்தமநா ராயணனே
யாதிமுத லென்றறிவா ரார்.

கொந்தா ரிலஞ்சியந்தார்க் கோமான் குருகூருள்
வந்தா தரித்துரைத்த வண்டமிழ்ப்பா வொன்றிலையே
லந்தாம மென்றறிவா ரார்.

இவை வெண்டளைத்தாய்வந்த சிந்தியல்வெண்பா வொருபொருண் மேன் மூன்றடுக்கிவந்தமையால் வெள்ளொத்தாழிசை. (௩௫)

வெண்பாவினம் முற்றும்.

ஆசிரியப்பா.

42 காமரு பன்மரங் கலுழிய பொதும்பர்
மாமரப் பணையின் மதுகர மிழைத்த
முதிர்நறுந் தேற னெதுமலர் முன்னுபு
கொளத்தகு மரபிற் குன்றவாண
வரைதனின் வரையா தொழுகலி னிருவிரு
மாறுபட் டொழுகிய மதியினி ராதலிற்
றிருமகிழ் மாறன் றிருவருட் கிலக்கா
பொழுகா தவருளத் தொன்று
மழுகா மதியின் மறுதவல் யானே.

இது, நேரிசை யாசிரியப்பா. அலங்காரம்—உள்ளுறையுவமத்தினுள் வினையுவமப்போலி. பகுதி—பகற்குறி. துறை—வருத்தங்கூறி வரைவுகடாதல். (௧)

43 *இறையறங் கூரா [1]வெறிபுனற் பொய்கைத்
துறைதொறுந் துவன்ற தோடவிழ் பன்மலர்

---

*மாறனலங்காரத்து இச்செய்யுளிற் கண்ட பாடபேதம் பின்வருமாறு:—
[1]வீர்ந்தண்பொய்கை.

மாந்துபு வயினிறை வெய்திய கவரி
யேந்தெழின் மாடத் தீண்டிறகசை றுள்ளிப்
படர்வுழிப் படர்வுழிப் பணைமூலைக் குறுங்கண்
மடைதிறந் துவளக மடுநிறைத் தொழுகும்
[1]பாற்றடி னியினோர் பழிதீர் பெடையின்
மாற்றருங் களியின் மகிழ்வர மூழ்கிய
பானிலாத் தெறுசிறைப் பவளவா யெகினந்
தணந்தயற் கழனிச் சாதிப் பெடையை
மணந்தத னனந்தலை மள்ளர்தா மூழுத
நாற்றடி யதன்க ணறுந்தழை பதனழிந்
தூற்றெழுங் களங்க வுறுபுன லாடிப்
பண்டுதான் மரீஇய பானிறப் பெடையைக்
கண்டுதான் விளக்குங் காமரு கடல்கெழு
கண்ணகன் ஞாலங் கண்டு[2]கண் களிப்பான்
விண்ணவர் [3]வியப்பவு மேதரு [4]படிமத்
தரவணைத் [5]துயின்ற வரங்கத் தமுதி
னூரவுநீர்க் காவிரிக் குறு[6]வய லூர
புல்லேன் பொதுவுணின் மார்பெனச்
[7]சொல்லே னெம்மனனத் தொடர்புடை யானே.?

இதுவும் நேரிசையாசிரிப்பா. இதன் வேறுபாடுங் காண்க. இது வும் வினையுவமப்போலி. திணை—மருதம். கைகோள்—கற்பு. பகுதி—பரத்தையிற் பிரிதல் திணையிற்றிணை—பெண்பாற்கூற்றுப் பெருந்திணை. துறை—இல்லவை நகுதல். (உ)

(மாறனலங்காரப் பாடம்.) [1]பாற்றிடி னியினையற் பழிதீர் பேடையைப், போற்றாது களிப்பிற் புணர்ந்தவன் மூழ்கிப், புனிதமுற் றிருசிறை புலர்த்திய வோதிமந், தணந்தயற் கழனிச் சாதிப் பெடைகளை. [2]கண் ணயப்பான், [3]வியப்பான். [4]படிவத். [5]துயின்றரு ளரங்கத். [6]புனலூர. [7]சொல்லேன் புன்மனத் தொடர்புடை யேனே.

44 †குவளையு நீலமுந் தவளவொண் பதுமமும்
பூம்பொறி வண்டின ராம்பலுங் கஞலித்
திசைதிசை யோசனை தேங்கமழ் திவ்விய
வசைதீ ரந்தண் மயிலை வேலிப்
பொய்கையுட் டீடந்தேன் பொதியவிழ் நறுமென்
செய்ய பொற் றாமரைத் திருமல ரதற்கு
மாந்தினர் மதிமயர் வுறுத்தும் பாசடைக்
கரைசேர் வெள்ளிடைக் கலித்தெழு வனவாங்
கஞ்சா விஞுக்குங் கஞ்சமென் றிடுகுறிப்
பெயர்மலி பான்மைப் பெரும்புன லூரன்
றெண்டிரைக் காவிரித் திருவரங் கேசன்
றொண்டர்தந் தொண்டர் தொடர்பினை யொரீஇப்
போதம் புறந்தரப் புரைதீர் தமதுயிர்க்
கேதங் கொள்ளுநர்க் கிடரிழைத் தகலா
தொல்லாப் புலன்வழி யுய்க்கும்
புல்லறி விஞுட்குடி புகும்புன் மையனே.

என்பது படிவுவமப்போலி. திணையும் பகுதியு மிதுவு மது. துறை—உழையரியற்பழித்தல். பா—இதுவுமது. (௩)

---

†இச்செய்யுள் மாறனலங்காரத்திற் பின்வருமாறு காணப்படுகிறது.
குவளையுங் குமுதமுந் தவளவொண் பதுமமுந்
திசைதிசை யோசனை தேங்கமழ் திவ்விய
வசைதீ ரந்தண் மயிலை வேலிப்
பொய்கையுட் செவ்வியிற் பொதியவிழ் புனிதச்
செய்ய தாமரைத் தேறலை யளவளா
யுவட்டா தருந்தியு முருகிய சுரும்பதன்
கரைசேர் வெள்ளிடைக் கலித்தநீர் முள்ளியிற்
பாடவிழ்ந் தயற்சுரும் புணர்ந்துணப் பதனழி
பூநறு வுண்டின் புறுபுன லூரன்
றெண்டிரைக் காவிரித் திருவரங் கேசன்
றொண்டர்தந் தொண்டர் தொடர்பினை யொரீஇப்
போதம் புரந்தரப் புரைதீ ரின்னுயிர்க்
கேதங் கொள்ளுந ரிதயம்விட் டகலா
தொல்லாப் புலன்வழி யுய்க்கும்
புலலறி விஞுட்குடி புகும்புன் மையனே.

45 * இனியதெள் [1]ளமுதா யெறித்தரு கிரணப்
பனிமதி யகடுழப் பணைநெடும் பொங்கர்ப்
பூந்துணர் ததைஇய பொழிலெழி னள்ளிடை
யீர்ந்தண் கோட்டகத் தினமலர் முற்றிய[2]
பொன்னிதழ்த் தாமரைப் பொற்பொகுட் டாசனத்
தரசுவீற் றிருந்த வரிதுணர் பாண்மைச்
சேவலோ திமமொரு சிறைப்படு காவிற்
குறுகுபு கொடுமுட் டாழைவெண் டோட்டினும்
வைகலு நசைஇவை குறுபுன லூரன்
பூமக ளிலகுலாம் பூண் மூலை [3]பொதுப்பத்
[4]தேம்வழி பசுந்துழாய்த் திருமணி மார்பன்
றென்னரங் கேசன் றிருவருட் கிலக்கா
[5]மானுடை யோர்கட் குறு துணை யெனவா
ழில்லறம் பழிபிறங் காதிருந் தில்லி
னகனமர்ந் தாளு துறையுர்
[6]தகவது மிலாத தவறு ளோனே.

இதுவும் பயவுவமப்போலி. இதன் வேறுபாடுங் கண்டுகொள்க. பகுதி–இதுவுமது. துறை–தோழி யியற்பழித்தல். பா–இதுவுமது.

46 நீர்நிலை [7]முற்றலி னிழன்மலி சோலையுட்
கார்வழங் காத காலையுங் கவின்பெற
வேர்முதற் பழுத்து வியன்சினைப் பலவு
வளங்கெழு நாடவெம் மணிபுரை மாண்கவின்
புறந்தரு மாயினும் புனித[8]மொன் றின்று

---

*மாறனலங்காரத்துக் கண்ட பாடபேதம் வருமாறு:-- [1]ளமிர்தா யெறித்தெழு. [2]இவ்வடிக்குப் பின்னும் 'பூமகளிலகுலாம்' என்று தொடங்கும் அடிக்கு முன்னும் பின்வருமடிகள் காணப்படுகின்றன. 'பொதியவிழ் தாமரைப் பொகுட் டாசனத்து, மதிநல னுறப்புணர் மாண்புடைப் பெடையொடும், வீற்றிருந் தின்புறு மேன்மையோ திமமொரு, பாற்படு கரைசேர் பன்மரக் காவிற், குறுகுபு கொடுமுட் டாழைக் கூன்சினை, வெறுநிலத் தடர்தர விரித்தபா சடைமேற், றளிநறை மாந்துபு சார்பெடைக் குருகொடு, புணர்தலு நலனுறும் புனன்மலி யூரன்'. [3]முகடுழத். [4]தேமவிழ். [5]மானுடையோர்க ளுயிர்த்துணை. [6]தகவேது. [7]முற்றிய நிழன்மலி. [8]நின் னின்று.

லரவணைத் துயிலமர்ந் தருளரங் கேசன்
றாணீர்க் காவிரித் துறைபடிந் தல்லதை
யொல்லே மலரம ளியினுறப்
புல்லேம் [1]பரத்தையர் பொதுவுணின் மார்பே.

என்பது மெய்யுவமப்போலி. பகுதி—இதுவுமது. துறை—அணைந்த வழியூடல். பா—இதுவுமது. (ரு)

47 உலைவினீ ரழுவத் துறுசிறை [2]யவையி
னலைகொழித் [3]தறைதொறு மறைதொறு மொத்துண்
டழுங்களு ரெய்திய [4]வாக்கைப தாகியுந்
தன்னால் வளர்க்கத் தகுசினை [5]யதன்கண்
மன்னு தரவின் [6]வாமீன் வைத்தகண்
வாங்கா துய்த்து வளர்புன லூரற்
கேவலிற் பிழையா வின்னிசைப் பாணர்
புதுவது வாய்வழி பிழைத்திவண் போதரு
மதுநினைந் தருவிருந் [7]தளித்தற் கந்தோ
மதுமகிழ் மார்பினன் வழுதிநன் னாட்டவர்
குடிஞையைக் காய்திறன் குறிப்பது மின்றான்
[8]மாதோ மாணிழை மடவால்
யாதோ கறியின் இனிதமைப் பதுவே.

இதுவும் மெய்யுவமப்போலி. இதன்வேறுபாடுங் காண்க. பகுதி—இதுவுமது. துறை—பாணனைப்பழித்தல் பா—இதுவுமது. (சு)

48 பன்மலர் கலுழிய பழுமரச் சோலையுட்
டண்ணிழ றணையாத் தளிர்த்தமௌ வலின்மலர்
விரிகதிர் தெறுதலின் வெம்மையுற் றுணங்க
முட்புறக் குடக்கனி முடப்பல வதனயற்
செங்கிடை மலர்களின் சிறப்பவு நிழற்று
மொண்புன லூரற் குறுபழி விளைக்கும்

(மாறனலங்காரப் பாடம்.) [1]பரத்தையர்ப் புணர்ந்தநின் மார்பே. [2]யதன கண். [3]தலைதொறு மலைதொறு. [4]யாக்கைய. [5]யதன்மேன். [6]வளர்மீன், [7]தளித்திடற். [8]காதோ வுலவுகட் காரிகை.

யாமே திலமே திலமென வெங்கையர்[1]
மாமனைப் பயின் மாணிழை மடவாரன்
மதாரிக் கண்ணாய் மதங்கனுற் றிலனாற்
புவிப்பா வலர்தம் புரவலன் மதுரா
கவிப்பா வலன்புகழ் கருணையங் கடலெனு
மதுமகிழ் மாலிகை மார்பினன் மயர்வறச்
சதுமறைப் பொருளாற் றருந்தமிழ் மறைத்துணி
வுரனுடை யோரி னுணர்ந்துயர் வறவுயர்
நலனுடை யிறைநிலை நவையறத் தெளிந்தோர்
பழிதீர் படிவம் பயின்றன ராகிக்
குணவத மிழந்த கூடா வொழுக்கின்
மனனக மலமிக மறுகுன
ரினமென லொன்று யிகழ்பொய்ம் மையனே.

என்பது உருவுவமப்போலி. பகுதி—இதுவுமது. துறை—பாண னெடுவெகுளுதல். தோழிகூற்று. பா—இதுவுமது. (எ)

49 ஒன்றாய்ப் பரந்த வுருவளி கறங்கலின்
மின்றாழ் பண்மீன் மிளிர்விசும் புழுசினே
சுமைமலிந் தொசிதாத் துணர்த்தமென் பூமுகை
பொறிச்சுரும் புளர்தொறு மளர்தொறும் பொதும்பருண்
முறுக்குடைந் திழிதரூஉ மொய்ந்நறுந் தேறல்
பரந்துபன் முகத்தவாய்ப் பவளக் கொடியொடுங்
குரூஉக்கட் பரூஉத்தாட் குடம்புரை செருத்தற்
கயவாய் மேதி கட்கமழ நீருண்
டுயவால் வைந்நுதித் தொடர்நெறி மருப்பிற்
புறக்காழ் வயிரப் பூங்கழை தடிந்துகு
நிறக்காழ் நித்தில நிரந்தரம் வரன்றயல்

(மாறனலங்காரப் பாடம்.) [1] இவ்வடிக்குப்பின் பின்வருமாறு காணப்படு கின்றது. 'மாளிகை பயின்று மதங்கருற் றிலாரற், புவிப்பா வலர்புகழ் புரவலன் மதுர, கவிப்பா வலன்புகழ் கருணையங் கடவுண், மதுமகிழ் மார்பினன் வண்குரு கூரன், சதுமறைப் பொருளாற் றருதமிழ் மறையினுண், முதுமொழி யுணரா மூடம தடைந்த, மனன கமலமிக மறுகுன, ரினமென லொன்று யிகழ்பொய்ம் மையனே.'

வெள்ளிடை நிவந்த மேதகு சுவலினை
யுள்ளுயிர்ப் பேடையை யுறையுளி னிருத்திப்
பாலுணீர் தெரித்துப் பருகுமொண் சேவ
லாலுநீர்ச் சிறைபுக் காய்ந்திரை கொணர்வலென்
றிகந்[1]தற விடைப்படிந் தெழூமயர் வுயிர்ப்பான்
வாலுக வைப்பென மறுகுபு குறுகிவீழ்ந்
தன்மையிற் றவக்குற் றச்சப் பார்வையிற்
புராதனப் பொய்கையுட் புகும்புன லூர
பொருநவரு தாமரைப் புதல்வனைப் பயந்த
திருமறு மார்பினன் றிருவரங் கத்துட்
பொதுநலப் பெண்டிர் பொருவுணின் மார்ப
மல்ல னீர்படிந் தல்லது
புல்லேலந் தீண்டலெம் [2]பொன்னடிப் போதே.

இதுவு மொருவுவமப்போலி. இதன் வேறுபாடுங் காண்க. பகுதி-இதுவுமது. துறை-அணைந்தவழியூடல். பா-இதுவுமது. (அ)

ஓங்கிய குரம்புசா ருவளக வயின்வயின்
வீங்கிய திணிதோண் மிடலுடை மள்ளர்
சுவைபெய் தாற்றலிற் சுரிமண் பன்முறை
தகைவுறப் படுத்த சால்பிற் றெண்ணீர்
வார்ந்துகு கவர்முழை மதகுபடர் குடுமியிற்
சேர்ந்தசை வறவிரு சிறகரு மொடுக்கி
மறைபுகு நோக்கின் மனப்பட் டிமையாற்
றுறைபுகு கயலினைச் சோர்புகண் டெடுத்துக்
கூர்வாய் வெண்சிறைக் குரண்ட மென்பெடைக்
கார்வா யெனவருத் தியினருத் துபுதுடித்
தயல்வீழ் வதனையாங் கற்றம் பார்த்து
மிச்சிலென் றறிந்தும் விழைநெறி யொரீஇ
நச்சியுண் புலவு நாற்றத் தோடுஞ்
செங்கால் வெள்ளுகிர்ச் சேவ லோதிம
மொருசிறை யிருந்த வோவாச் செவ்வி

(மாறனலங்காரப்பாடம்.) [1]தய விடைப். [2]பொன்னடிச் சுவடே,

யிருசிறைப் [1]பெடையுறை யெழின்மலர் குறுகு
களிமலர்ப் பொய்கை நல்வய லூர
திருநெடு மாயன் றிருவரங் கத்துப்
பொருணசைப் பரத்தையர் பொறித்தநின் மார்பிற்
றனக்குறி யாநிற் றழுவுபு சிதைவுறின்
மனக்கிட ரிழைப்பது மன்றி
நினக்கிட ருறுமா னெருங்கலெம் மிடனே.

என்பது பிறப்புவமப்போலி, பகுதி—இதுவுமது. திணை—பெண்பாற் பெருந்திணை. துறை—பள்ளியிடத்தூடல். பா—இதுவுமது. (கூ)

51 விசும்பு தூர்த்தெழு வியன்சினை மாத்தின்
பசும்புறத் தீங்கனி பரீஇநுகர் கடுவன்
புரப்பவர் குறுகுபு புலம்புரீஇப் பொங்க
ரிரிந்தலம் போதரு மீர்ந்தண் சோலையுட்
புளிங்கறி வேட்டபுன் [2]றெழின்மையர்க் குறுது
பழிப்பின் றுகப் பாகுசெய் தட்ட
கோதறு மாண்பாற் குழம்புபொற் கலத்தினுட்
பெய்திருந் [3]தாறிய பெற்றி போல
முடவடிப் பலவின் [4]மூட்புறக் குடக்கனி
வேர்முதற் பழுத்து விரிந்தபொற் றீஞ்சுளை
பதனழி பான்மைப் பாய்புன லூர
நூற்கடற் பழகிய நுண்ணுணர் வுடையோ
ராற்றலிற் பரவுசீ ரரங்கனுக் கமைந்த
பாற்கடன் முற்றப் பருகுதற் கெழுந்த
போராப் பெரும்பசி யாளர்தம் முன்ன
ராரவள்ளத் தமுதமைப் பவர்போற்
சிறுவரை யின்பத் துறுதுய ரிழைத்தற்
கொத்த லீங்கியல் பன்றாற்
பரத்தையிற் பிரிதனின் பண்பா கும்மே.

இஃது "உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்—தள்ளா தாகுந் திணையுணர் வகையே" என்பதனல், புளிங்கறிவேட்ட புன்றெழின் மையர்க்குப் பாற்குழம்பு பொற்கலத்தினுட் பெய்திருந்தாறியபெற்றி

(மாறனலங்காரப்பாடம்.) [1]பேடை யெழின்மலர். [2]றெழிற்றன் மையர்க்குத். [3]ஆறும் பெற்றி யேய்ப்ப. [4]முதிர்பொற் குடக்கனி.

போல வென்று புலப்படக்கூறு மேனையுவமம் புலப்படக்கூறாத உள்ளுறையுவமத்தினைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத் ததனுட் கூடிநின்றது. "விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தர" வென்னு மருதக்கலியுள்ளும், "நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போல" என்ற வினையுவமந் தாமரைமலர் பனிவாரத் தலைவிடுமென்ற வுள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது. அன்றியும், "உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்—கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே" என்ற பொருளியற்சூத்திரத்தாற் சிறப்பென்ற வுள்ளுறை. இவ்வேனையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து உள்ளுறையுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளாது நின்றவாறு காண்க. இது பரத்தையிற் புணர்ந்துவந்த தலைவன்வரவு கண்டிய காமக்கிழத்தி, ஊடியவாறுகண்டு சார்ந்த தலைவனுடனூடநீர் கின்றாள் கூறியது. இதனுள், தலைவி, தோழி, காமக்கிழத்தி, உழையரென்போர்கூற்று வந்தன. ஒழிந்தோர்கூற்றும் வந்தவழிக் கண்டுகொள்க. இவை பத்தும் நேரிசையாசிரியப்பா. (௫0)

52 திரைகொழித் துயிர்ப்பன திகழ்வலம் புரியே
வலம்புரி யுயிர்ப்பன வாணித் திலமே
நித்தில முயிர்ப்பன நெடுவெண் ணிலவே
நிலவுற வடர்பிணி நெகிழ்வன குமுதங்
குமுதமங் குயிர்ப்பன குளிர்தெண் ணறையே
நறைநதி
சுழித்தெடுத் தனவாய்த் துறைதொறுந் துறைதொறுந்
தெழித்துயிர்ப் பனவுங் குறுமணித் திரளே
மணித்திரள்
பரிதிபோன் றிரவினைப் பகற்செய் வனவா
லருகுநின் றலர்வன வம்புய மலரே
மலரினை
அளகமர் புறவினு ளான்புண லுணயரீஇக்
குளகென மாந்துபு குழக்கன் றுள்ளாலும்
உள்ளிப்
படர்வுழிப் படர்வுழிப் பணைமுலைத் தலைவழிக்
குடமடித தீம்பால் குதித்திரு நிலத்தூற

அப்பால்
ஆறிரண் டெனப்பகுத் தலைத்தெழு நனந்தலை
வீறுட னெக்கர்கூர் வெண்மணல் வெள்ளிடை
நள்ளிடை
மதியக டுரிஞ்சிய மழைதவழ் பொதும்பர்ப்
புதியமென் மலரினைப் பூத்த காயா
வைகலுஞ்
சொரிதரு நாண்மலர் துவன்றுயா றீளிடை
விரிவன வாகி விழுமிதின் விளங்கும்
அத்திறம்
பாலா றியினடுப் பரிமள வாவணை
மேலாய் விழிதுயில் விமலனைப் பொருவருஞ்
சங்கணித்
துறைபயில் பொருநைச் சொற்றமிழ்க் குருகூ
ரிறைவநின் பொன்னடி யிறைஞ்சுகே னின்னும்
நானிலத் தொருபிறப் புணதா நன்னகர்
மானிடப் பிறவியி லாணுரு வெனலா
மதுமுத லியபெறற் கரியன வெளிமையிற்
பொருவற வெய்திநிற் புகழ்புல வனெனப்
பருமணி குயிற்றிய பசும்பொற் கும்பத்
தருண்மலி மஞ்சன மாடிய காலையி
னுத்தம வீரவா டையுமூறுக் கொலியலு
மத்தக வடைந்தவ ணலங்கரித் தெழுதிருக்
கைத்தலச் சேவையு முத்திரைக் காமுஞ்
சித்திர நாபியிற் செறித்தகைத் தலமும்
புத்தமு தனையசெந் தமிழ்மறைப் பொருள்புணர்
முத்தமுந் திருப்பவ ளமுங்குறு மூரலு
மறுத்துடைத் தொளிர்முழு மதிமுகச் சோதியு
முறுப்புடைத் திருக்குழை யுருவமும் புருவமும்
நயனமர்ந் தருள்புரி நயனும் புயமு
மயங்முதன் மதித்தபத் மாசனத் திருப்பும்
வருளா பாண மார்பமு மவுலியு

முகுளா திணைவிழி முழுதுறு காட்சியிற்
கூடிய வுணர்வொடுங் குழைநெகிழ் ஞவாற்
பாடி நின் ஞுடியும பனுளுள் கழிந்தபின்
பொருவில்பே ரின்பமும் புணர்வான்
ஒருவரந் திருவுள ருவந்தருள் கெனவே

இது நாற்பத்தைந்தடியா யிடையிடை தனிச்சொற்பெற்றுவந்த நேரிசையாசிரியப்பா. என்னை? "சீர்கூ றுத னேரடிக் குரித்தே" என்பதனுலறிக. (இ-ள்) திணை—பாடாண். துறை—கடவுள்வணக்கம். (கக)

53 கார்கதழ் பரிநெடுந் தேரின் முந் தியதாற்
காகோ தரவணைக் கண்டுயி லெடுமால்
கார்வா னத்தரு மாரியும் வலவா
காரிகை மையுண் கண்கலுழ் மாரியுங்
காமனைங் கணைமலர் பொழிநறை மாரியுங்
காட்சிமூந் நீரிற் கலந்திவ ணெதிர்கொளுங்
காலுருள் கொடாதனை யறிந்தொரு கணவரை
காணுதி யவணுறக் கடாவுதி யிரதங்
காவலுன் னுயிர்க்கினி யதுவே
காவலின றெனதுயி ருறுதுயர்க் கடற்கே.

இதுவும் நேரிசையாசிரியப்பா. இஃது அடிதோறும் முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையா னடிமோனைத் தொடை. பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—பாகனொடு கூறல். (கஉ)

54 அணங்கனு ளுறையுளென் பதுந்தா மரையே
சுணங்குலா மிள முலை துணைத்தா மரையே
யொளிர்முக மரங்கலுந் தியந்தா மரையே
தெளிதரின் மதர்விழி செந்தா மரையே
தொடிக்கையுந் துணைத்தா மரையே
யடிச்சுவ டணியிழா யலர்தா மரையே.

இஃது அடிதோறும் எழுத்தானுஞ் சொல்லானும் ஒன்றிவரத் தொடுத்தமையா னடியியைபுத்தொடை. பகுதி—செட்படை. துறை—அவயவங்கூறல். (கங)

55 அராவணை மிசைத்துயி லமர்ந்தரு ளரங்கனைக்
காசல மூலமென் றழைத்தருள் கண்ணனை
முராரியை யிரணியன் மதுகையை முறுக்கிய
நராரியை நயந்திறைஞ் சினரே
தராதலம் விரும்புமந் தாமமெய் துவரே.

இஃது அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவரத்தொடுத்தமை யான் அடியெதுகைத்தொடை. (கச)

56 செந்தா மரைமகள் புணர்திரு வரங்கன்
கார்க்கடல் வண்ணன் கண்ணனெம் பெருமான்
வாமனன் கேசவன் மாதவன் சீதரன்
நெடியோ னீரடி யெனநில மளந்தோன்
அடியிணை நறுமல ரதுதூய்
முடிமிசை தரிப்பவர் முத்தரா குவரே.

இஃது அடிதோறுஞ் சொல்லானும் பொருளானும் முரணத்தொடுத்த மையா னடிமுரண்டொடை. (கரு)

57 ஆஅ னிரைகாத் தருளரங் கேச
னீஇ னிறக்கரி கிழன்மருப் பொடித்தோன்
பூஉ மகள்புணர் புயலடித் துணையிற்
றேஎ மலரிடு மவர்வினை
போஒ மொருநொடி யினிற்புறக் கொடுத்தே.

இஃது அடியளபெடைத் தொடை. (கசு)

58 நாவே [1]விழுமிய நலனுடை முதற்பொருள்
பொருளுரை யாய்தரிற் புகலமற் றுளதே
யுளதே வண்டிமி ருறுமல ரோடை
யோடை மால்வரை மூலமென் றுரைசெய
வோடை மால்வரை மூலமென் றுரைசெய
வுரைவிசைத் தடங்கா வொல்லையிற் குறுகுபு
புனிற்று வெனவருள் புரிந்திடர் செகுத்த

(மாறனலங்காரபபாடம்.) [1]யானுறு நலமிகு.

வரைபுன லரங்கத் தமுதினை யன்றியு
மதித்தொரு [1]முதலினை மகிழ்ந்து
துதிப்பது முளதோ சுரர்பெரு நாவே.

இதனுள் நான்கந்தாதித்தொடையும் வந்தமையா னந்தாதித் தொடை. (கஎ)

59 திடனே திடனே திடனே திடனே
யிறைதிரு வரங்க னென்பது
மறைமுத லரியென வாழ்த்திய துறினே.

இஃதோரடிமுழுது மொருசொல்லேவரத் தொடுத்தமையா னிரட்டைத்தொடை. (கஅ)

60 மாறனை யேத்தார் விழுதீ நரகிற்
சுடுநெறி யினியார் செல்வர்
விடலரீ கன்கு லாறியே குதியே.

இது மோனைமுதலாய முழுது மொவ்வாதுவந்த செந்தொடை. நேரிசையாசிரியப்பா. (ககூ)

தொடைவிகற்பம் வருமாறு:—

61 இரவினி னிருள்கடி முழுமதி வதன
மிதுசிறு பிறைநுத லிவைமுரி புருவமி
னிமணி நிரையென வணிநகை யிலங்கிய
திணைவிழி யிருகய லிணைபணி மொழிநறை
யிளமுலை மரைமுகை யிடுகிடை யிலையா
லிலைவயி றிமிழ்வளை களமென மிருநில
மிமையவ ரிறைவனெ டிரதிம னிருடிகண்
மணமரு டகைமட வரலெனு மமுதினொ
டளிமுரன் மதுமகி ழணிவர முனிவரை
யளவிய நலனிவ ணமைமதனு
மவனெனை யெதிருநா யினனனு பமனே

இதனுள் இணைமோனைமுதலிய விகற்பமேழும்வந்தமை காண்க. ()

(மாறனலங்காரப் பாடம்.) [1]முதலையே.

62 அறமுத லரியெனு மவனே பானே
யணுவினு ளவனே செகமுணர் பரனே
மனனே கரிசொல வருபுயல் பரனே
யமுதரு ளினனே யவனே பானே
நிலனே வானே நிறைமுதல் பானே
வலனே தரிதிகி ரியனே பானே
யயனே சிவனே யயனே பானே
யின்னண மமைதர விறைபரங் கேசனைப்
பொன்னடி பணிபவர் புகுபதி
பன்னருஞ் சிறப்பிற் பாந்தா மமதே.

இதனு ளிணையியைபு முதலாயின வேழுவிகற்பமும் வந்தமை காண்க. (உக)

63 முற்றுண னுற்பவ மாதவின் முழுமுதல்
பொற்கம லத்திரு முற்ற முயங்கிய
வற்புத ஞாண னுமென வுற்றபி
னற்றது பற்றெனி னுற்றது வீடுயிர்
செற்றது மன்னுறி லற்றிறை பற்றே
பற்றிலன் முற்றி லடங்கென நற்றமிழ்
கற்றவன் மற்றிரு பற்றறு கொற்றவ
னுத்தம ஞானமுத் திரைக்கையு முகமும்
பத்திமை யாற்றெரி சிப்பவர்
நித்தர்வந் தெதிர்கொள முத்தரா குவரே.

இஃது திணையெதுகைமுதலாய விகற்பமேழும்வந்த நேரிசையாசிரியப்பா. (உஉ)

64 அறிவில ருணர்வுள ரெனுமவ ரளவினி
லருவமொ டௌளிர்திரு வுருவம துடையனை
யெளியனை யடியவர்க் கேனையோர்க் கரியனைக்
கனவினு நனவினு மறிதுயிற் கண்ணும்
வெண்சங் காழி செய்மணிப் பொனை முடி
காலையு மாலையுங் கண்டுநன் பாகவினு

பின்புறத் துன்பமற் றிம்பரோ [1]டும்பரு
ணறவார் மலர்மக ணாதனை
மறவா தவர்பதம் [2]வாழ்த்துமென் னாவே.

இஃது திணைமுரண் முதலாகிய வேழுவிகற்பமும் முறையே வந்தமை யான் முரண்விகற்பத்தொடை. (உ௩)

65 நாஅல் வாஅய் மூலமென் றழைப்பச்
சாஅல் புணர்ந்து தாஅன் விரைதலின்
காஅ லெனநிமிர் கலுழனிற் போஒ
யாஅழ் நீஇர் வாஅழ் முதலையி
னாஅ ருயிருண் கோஒ மாஅன்
றூஅ தாஅர் பூஉமகள் சேஎர்
மோஒ கூஉர் மாஅ மாஅ
லெனவொரு காலுரை நாவே
நவையொரு காலமு நண்ணா னமனே.

இஃது திணையளபெடை முதலாகிய வெழுவிகற்பமு முறையானே வந்தமையா னளபெடை விகற்பத்தொடை. ஆகத் தொடைவிகற்பம் முப்பத்தைந்தும் வந்த இவையு மோர் பதின்மூன்றும் நேரிசையாசிரியப்பா. (உ௪)

66 கடுவே கடலெனக் [3]கருநெடுங் கண்ணிணை
காமனுங் காமுறுங் காட்சிய காண்முகங்
கிள்ளையின் [4]கிளவியுங் கிளைத்தகைக் கிளையுடைக்
கீரமுங் கீர்த்திக் கீரமுங் கீரே
குவட்டிடைக் குளிர்பொற் குன்றே குவிமுலை
கூர்புதா கூன்சிலை கூற்றுயிர் கூட்டுணுங்
கெடலருங் கெழுதகை கெழுமுபு கெழீஇய
கேகயங் கேளொடுங் கேடறுங் கேழியல்
கைபுனை கைக்கிசை கைக்கிணை கைத்துணை
கொண்டலுட் கொண்டன கொண்டையுங் கொடியிடை
கோடாக் கோவலர் கோற்றொடி கோமான்

(மாறனலங்காரப் பாடம்.) [1]டும்பர். [2]வழுத்துமென். [3]காந்தடங். [4]கிளையும்.

கௌரவ கௌசிகன் கௌசிகங் கௌத்துவ
மணியெனக் கொண்டுமுன் மனவீ டளித்தோன்
கண்ணகன் குறுங்குடிக் கனவரை
மண்ணகத் துறையுளாய் வளர்நில மகட்கே.

இது சகரவருக்க முற்றுமோனைத் தொடை. இதுவும் நேரிசை யாசிரியப்பா. (உரு)

67 தேமகிழ் மார்பன் றடரியஞ் சிலம்பிற்
றாமரை மலருங்
காமரு குவளையுங்
கோங் கரும் பிணையும்
பூங் கரும் பிணையுந்
தாமலி பூங்கொடி தருமனக் களியே.

இஃது தாறடித்தாய் முதலடியு மீற்றடியு மளவடித்தா யிடையிற் குறளடி யிரண்டுஞ் சிந்தடி யிரண்டுமாக வந்த இணைக்குறளாசிரியப்பா. துறை—காட்சி. அலங்காரம்—உருவகவாய்பாட்டான்வந்த வுடனிலைச் சிலேடை. (உசு)

68 படுதிரைப் பௌவமும் பானலம் போதும்
விடுசுடர்க் கதிர்வா விரிமரை மலருங்
கடுவுங் கணையும்
வடுவும் பிணையு
மடுபோர்க் கூற்றின் கணிச்சியுங்
கொடுவே லிணையுங் குறிக்கொளுந்
தடமா றுண்கட் டாழ்குழ லாயத்
தொடுவாழ் வெய்திட முபநிட தப்பொரு
ணடுவாய்த் தமிழ்மறை நவின்றருண் மாற
னெடுமால் வரைச்சந் தனத்தண் ணிழலே.

இதுவும் பத்தடித்தாய் முதலிரண்டடியு மளவடித்தாகியு மீற்றினில் நாலடியு மளவடித்தாகியு மிடையிற் குறளடி யிரண்டாகியுஞ் சிந்தடி யிரண்டாகியும் வந்த இணைக்குறளாசிரியப்பா. அலங்காரம்—பல பொருளுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல்.()

69 *வெண்டிரைப் புனற்கா விரியயல் விரிந்த
வண்டிமிர் பாசடைக் குவளைமென் பனிமலர்
முட்டாட் டாமரை முறுக்குடை நாண்மல
ராக்கெறி வள்ளித ழாம்பற் போதுடன்
மேய்தரு கயவாய் மேதிகன் றுள்ளுபு
பணைமுலை சுரந்து பனிற்றுபாற் றடினி
நெட்டிலை யரம்பையி னீடுபொற் கூன்கனி
முடவடிப் பலவின் முட்புறக் குடக்கனி
நெடுவெண் டிங்க ணடுமறுத் துடைத்திடுஞ்
செந்தளிர்ப் பொங்கர் மாவின் றீங்கனி

---

* இச்செய்யுள், மாறனலங்காரத்திற் பின்வருமாறு காணப்படுகிறது.

வெண்டிரைப் புனலரு வியலயல் வயல்விரி
வண்டிமிர் பாசடைக் குவளையென் பனிமலர்
புறக்கொடை மதிதரப் பொதியவிழ்ந் ததுபோய்ச்
சிறக்கணித் தனவாஞ் சேயிதழ்க் குமுத
முட்டாட் டாமரை முறுக்குடை நாண்மலர்
கட்கா மருகடை வாய்வழிந் திழிதர
மேய்தரு கயவாய் மேதிகன் றுள்ளுபு
பணைமுலை சுரந்து பனித்தபாற் றடினி
நெடுவெண் டிங்க ணிறைமறுத் துடைத்தொளிர
செந்தளிர்ப் பூஞ்சினைத் தேமாத் துருகனி
முடப்பரி யரைப்பலா முட்புறக் குடக்கனி
புறக்காழ் மரகதப் பூக மிடற்றி
னிறக்காழ் திரண்டு நீண்டுதிர் பழுக்காய்
நெட்டிலை யரம்பையி னீடுபொற் கூன்கனி
புதையிரு ளிரீஇக்கதிர் பொழிநவ மணிக்குலை
சுழித்தெடுத் திரைத்தவாய்த் தூமலர் பலகொண்
பாற்கடல் பொன்னியுட் படிதிரு வுருவங்
காண்பதின் முன்னிய காட்சியான் றெனலாய்த்
துறைதொறுந் துறைதொறுந் துழனியின் வளைக்குந்
திருவரங் கேசனைத் திருமறு மார்பனை
மனத்துற நினைந்தும் வாழ்த்தியும் வணங்குந
ரெக்குலத் தவரே யாயினு
மக்குணத் தவர்க்கடி யேனடி யேனே.

(77)

சுழித்தெழு திரைக்கையிற் றாமலர் பலகொடு
பாற்கடல் பொன்னியுட் படிதிரு வுருவங்
காண்பதின் முன்னிய காமர் காட்சியிற்
றுறைதொறுந் துறைதொறுந் துழனியின் வளைக்குந்
திருவரங் கேசனைத் திருமறு மார்பனை
வாழ்த்தியும் வணங்கியு மனத்துற நினைக்குந
*ரெக்குலத் தெவரே யாயினு
மக்குலத் தவர்க்கடி யேனடி யேனே.

இது, நிலைமண்டிலவாசிரியம். (இதனுள்) அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை வந்த வண்ணச் சினைச்சொல். அலங்காரம்—(இது) தற்குறிப்பேற்றவுவமை. திணை—பாடாண். துறை—நகர்வாழ்த்து.

70 வான்றிகழ் மூதய மதிமழை முகிற்கிழ்
மீன்றிரி தமர வெண்டிரை வைப்பினு
ளருவியஞ் சுவண வருவரை ஞாங்கர்
வாழ்திற மெனலாய் வதனமு மோதியுங்
காழ்புனை திதலைமென் கதிர்முலைச் சுவடு
முறுப்பமைந் தோவிய முயிர்படைத் தியங்குத
லறியா தாங்க ணணிவரைச் சாரலிற்
செறியா வுடைந்ததென் றிண்ணிய நிறையே.

இதுவும் நிலைமண்டிலவாசிரியப்பா. பகுதி — பாங்கற்கூட்டம். துறை—உற்றதுரைத்தல். அலங்காரம்—நிரனிரையுவமை. (௨௬)

71 மன்னோர் நின்றனன் வட்டமலை மிசையே
முன்னே சிலர்தொழ முயல்வது கண்டே
பொன்னே யலவிடு வதுமொரு பூவே
யென்னே சிலரெவ னாகெய் துமதே.

இஃது அடிமறிமண்டிலவாசிரியப்பா. திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—சுவையினு ளிழிவுபற்றிய வழுகை. ()

* இது முச்சீரடியாயிருத்தலால 'இது நிலைமண்டிலவாசிரியம்' என்னும் குறிப்புடன் பொருந்தாதிருத்தல் கவனிக்கத்தக்கது.

72 பதிகளி னதிபதி திருமகள் பதியே
துதிகளி னதிபதி தமிழ்மறைத் துதியே
மதிகளி னதிபதி மாறனுண் மதியே
நதிகளி னதிபதி வரசுர நதியே.

இதுவும் அடிமறிமண்டிலவாசிரியப்பா. திணையுந் துறையு மிதுவு மது. அலங்காரம்—சாரம். (௩௧)

73 தண்ணறுங் கடப்பந் தார்ச்செவ் வேளனு
மொண்மையுங் காந்தியு முயர்குடிப் பிறப்பும்
வாய்மையுங் குறையிரந் தொழுகலும் வண்மையுந்
தூய்மையும் வைகலுந் தொடர்பிடை விடாமையு மல்லாற்
கன்னலின் வளமலி கழனிநன் னாடும்
பொன்னெடுங் குன்றமும் புரவல புரப்பினுங்
கலைபயின் மாறன் காரிதந் தருள்கார்
மலைவளர் மயிலனை யாட்கு
முலைவிலை யாமென மொழிதலொல் லாவே.

இது நேரிசை யாசிரியப்பா. இதனுள், 'தூய்மையும் வைகலுந் தொடர்பிடை விடாமையு மல்லா'லென நாலாமடி யைஞ்சீரடியாய்வந்தது. இதன் வேறுபாடுங் கண்டுகொள்க. இது அலங்காரம்—விரியுவமை. பகுதி—வரைபொருட்பிரிதல். துறை—அருவிலைசெப்பல். (௩௨)

74 கண்ணன வானோர் பெம்மான் கார்போல்
வண்ணன் மோகூர் வைகும் மாயோன்
றண்ணந் தாமந் தாரான்
விண்ணின் றிங்கட் கென்செய் வேனே.

இஃது, நேரொன்றாசிரியத்தளையான்வந்த நேரிசையாசிரியப்பா. திணை—பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை—கையறல். அலங்காரம்—அவயவியுவமை. (௩௩)

75 மறைகளின் மறைமொழி வகைபயர் வறவுறு
முறைதரு தமிழ்மறை மொழிமகிழ் முனிவனை
யிறையென வுணர்பவ ரெவரவ
ருறைபதி யலர்மக ளுறைபதி யுலகே.

இது நிரையொன்றாசிரியத்தளையான்வந்த நேரிசையாசிரியப்பா. (இது) திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி. அலங்காரம்—சுவைபினுள், கல்விபற்றிய பெருமிதம்.* (௬௪)

ஆசிரியப்பாவினம்.

76 கஞ்சத் திருமால் கழல்பரவு மாறனார்
செஞ்சொற் றிருவாய் மொழியுணர்ந்த சீலத்தார்
வஞ்சப் பிறவி வலைப்பட் டுழலாரே.

ஆயத் தருமா லடிபரவு மாறனார்
நேயத் திருவாய் மொழியுணர்ந்த ஞானத்தார்
மாயப் பிறவி வலைப்பட் டுழலாரே.

தந்திக் கருண்மால்பொற் றாள்பரவு மாறனார்
சிந்தித் துரைத்ததிரு வாய்மொழிதேர் சிற்குணத்தார்
வந்திப் பிறவி வலைப்பட் டுழலாரே.

இவை மூன்றடியாய்த் தம்மு ளளவொத்து ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தமையா லாசிரியத்தாழிசை. இவுதுந் திணையுந் துறையும் அலங்காரமு மது. (௧)

77 இருநில மூவடி யெனவளர்ந் தோங்கிய
திருமறு மார்பனைச் சிந்தையுள் வைப்பவ
ரொருபொழு தினுமிட ருறுவதொன் றிலரே.

இது, தனியே வந்த ஆசிரியத்தாழிசை. இதுவும் திணையும் துறையும் அலங்காரமும் அது. (௨)

---

*இதன்பின், "இனி, கோயிற்கலம்பகத்துள், 'கரைபொரு தொழுகும் காவிரி யாறே' என்னு மகவல்போல இடையிடை தனிச்சொற்பெற்று முதலே அடி—௫—அந்தாதிப்பதாக வோரகவல் பாடவேணும். இரண்டாவது இவ்விரண்டடியாய் எழும் எட்டுத்தாள மாகி ௬—ந் தாளம் ஆறடியாய் நேரிசை யாசிரியப்பாவாய்ப் பாடவேணும். ஆசிரியப்பா முற்றும்" என்று எட்டுப்பிரதி யிற் காணப்படுகிறது.

78 அலைபயில்பாற் கடல்கடைந்தன் றமுதளித்த திருவரங்கத்
தமுதை யேத்துங்
கலைபயில்வண் டமிழ்க்குருகூர் மகிழ்மாறன் வரையனையீர்
கட்ப டார்கொல்
முலையெனுமான் மதக்களிற்றின் முன்னிறுத்தி வினையேனைக்
கொலைபயில்வேல் விழிபுதைத்த தறநிலையோ வறநிலையோ
கூறு வீரே.

இது, நான்கடியாய் ஈற்றயலடிகுறைந்து அல்லாத அடி ஒத்துவந்த ஆசிரியத்துறை. பகுதி-பாங்கற்கூட்டம். துறை-நாணிக் கண் புதைக்கு வருந்தல். அலங்காரம்-சங்கிரணம். (௩)

79 திரைத்திருப்பாற் கடல்கடைந்து தெள்ளமுதும் பருக்களித்த
திருமால் செய்கை
யுரைத்திருப்பா ரிடத்திழைத்த வூழ்வினைசென் றணுகாதென்
றுரைப்ப தொன்றே
வுரைத்திருப்பா ரிடத்திழைத்த வூழ்வினைசென் றணுகாமை
வரைத்திருப்பா ரிடத்திழைத்த வல்வினையும் வரைத்தவர்பான்
மருவா தன்றே.

இஃ தீற்றயலடிகுறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. திணை-பாடாண் துறை-கடவுள்வாழ்த்து. அலங்காரம்-கல்விபற்றிய பெருமிதம். (௪)

80 வண்ண மகிழ்மாறன் மால்வரைமா னனைத்துட்
கண்ணென் றிகல்புரிவன் கூற்றினையேன் வைத்தானெண்
கண்ணு ளானுங்
கண்ணென் றிகல்புரிவன் கூற்றினைவைத் தாலயலா
ருண்ணின் றுயிர்கவர்வ துள்ளா தெனவெளிவிட்டா
ருரனுள் ளாரே.

இது நான்கடியாய் இடையிடைகுறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. பகுதி-இயற்கை. துறை-தகையணங்குறுத்தல். அலங்காரம்-அவயவியுருவகம். (௫)

81 நெடுவான் கலைவயிரத் திழைத்தபருப் பதக்குடுமி நீவ நாளு
மோடுவான் மதியகட்டி னுருபிணையைப் பிணையெனக்கொண் [டும்பர் வாவக்
கோடுவார்த்திழிதருதெள்ளமுதவருவியிற்குழுமிக்கொடியனாரோ
யாடுவார்மைந்தருமுண்டுண்பதுமத்தெள்ளமுதேயவர்களுளும்.

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். திணை—பாடாண். துறை—நாடுவாழ்த்து. அலங்காரம்—திரிவதிசயம். (௬)

82 படியின்மேற் படிந்தகதிர்ப் படைமீது கிளர்களையாம் பணிவண் டாடிக்
கடியுணீ லமரூஉமென் கமலமுஞ்சாய்த் துடன்கிடந்த காட்சி கூறி
னடியுமா கமுந்தழுவிக் கொழுநரொடுங் கலவியினி லழுந்தி யோர்தம்
முடியுமே தகவுடைநன் முகத்துறவைத் துடன்றுயிலு முறையே [போலும்.

இதுவும் அது. துறையும் அது. அலங்காரம்—ஒருவயிற்போலி. ()

83 நிறந்தழைவான் கதிருணங்க வங்குரித்தங் குடன்வளர்ந்த நீர்மைத் தாருந்
திறந்தழைசெங் கமலமுமிந் தீவரமு முடனுணங்குஞ் செயலுந் தீந்தேன்
வறந்தரவண் டினந்துறந்த செய்கையுநீ ரவருறவின் மாண்புங் கள்ளுண்
டறந்தவறித் திரிகளிய ருறவினிழி வையுமுணர்த்து மமைதித் தாமே.

பாவினம்—இதுவுமது. துறையும் அது. அலங்காரம்—நிதரிசனம். (௮)

84 காழகிற் பொழிலுஞ் சந்தனப் பொழிலுங்
கமழ்நறுஞ் சண்பகப் பொழிலுங்
கோழரைக் கமுகு நாளிகே ரமும்பொற்
கோங்கும்வேங் கையுமலர்க் குருந்து

மாழையந் துளைமூட் புறக்கனிப் பலவு
மாவுநா கமும்பணை மருதுந்
தாழையு மகிழும் வாழையுங் கரும்புந்
தனித்தனி தழைத்த [1]வெம் மருங்கும்.

இது, எழுசீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். (௯)

85 மரவமுங் [2]கடமும் பனசமும் பிடவும்
வடமுமா தவியுமா துளமுங்
குரவமு மிலவுந் திலகமும் விளவுங்
கொன்றையுஞ் செருந்திலுங் குமிழு
மரசுநா வலுந்தான் றியுமரீ தகியு
மாமல கமுநரந் தமுமரம்
[3]பிரமுமே லமுமார் மாமும்வே ழமுஞ்சம்
பீரமுந் துவன்றசால் பினவே.

இதுவு மது. (௧௦)

86 வள்ளையங் கொடியு முல்லையும் விரைமென்
மயிலையு மிருபுடை மயங்கிக்
கொள்ளைவண் டினம்பாண் முரன்றறு பதத்தாற்
குடைந்துதே மதுமடை திறக்கு
முள்ளுடைக் கொழுந்தாட் கமலமும் விரவி
முறுக்கவிழ் குவளையு மிரவின்
விள்ளிதழ்க் குமுதத் தொகுதியும் பருதி
விளக்கும்வா விகள்பல பலவே.

இதுவு மது. இவை மூன்றும் நாடுவாழ்த்து (த்துறை). அலங்காரம்—இடத்தன்மை. (௧௧)

(மாறனலங்காரப் பாடம்) [1]தெம்மருங்கும். [2]கடம்பும் பனசமு மருதும். [3]பிரமுமே லமுஞ்சன் பகரும்வே ழமுஞ்சம் பீரமுந் தழைந்துள வொருசார்.

87 தாழிதடங் கடலகடா யொலிக்குந் தண்ணர்
தளிதருதீம் பாறயிராய்த் தலைப்பெய் *கோவரப்
பாழிநெடுங் கிரியெனுமந் தரமத் தாகப்
படநாகம் வடமாகப் பரந்த தேவர்
வாழியிருந் தெள்ளமுதங் கடைநா ளாழ்ந்த
வயிரவரை யினைக்கமட வடிவா யேந்து
மாழிபுனைந் தெழுதடக்கைப் பெம்மான் றொண்டர்க்
கடியவரா நிலைமையரென் னடிக ளாவார்.

இது, எண்சீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரிய விருத்தம். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—வினைத்தன்மை. (கஉ)

88 வெற்றாணென் றிசையாது சாவா மூவா
விழுமருந்†தொண்டுறக்கமேய்வானைச்
செற்றாணென் றிசைகனக னிங்கு ளானே
சிறுவவென மதுகைநர சிங்க மாகிப்
பொற்றாணெட் டகடுகிழித் தவன்ற னாகம்
போழ்ந்துகிரா லளைந்துருடர்ப் புண்ணீர் மாலை
கற்றாணம் பொருவுதிர டிண்டோள் வேய்ந்த
கருணைவரைக் கடிமைசெயுங் காட்சி யாரே.

இதுவும் எண்சீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். இதுவும் துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—அவயவவுவமை. (கங)

89 தேனிலங்கும் பைந்தாம மாலை மார்பிற்
றெசரதனன் மகவாகித் திண்கான் மேவி
வானிலங்கொ ளேழுமரா மரமும் வாலி
மார்பகமு மிலங்கேசன் மவுலி பத்து
நானிலத்தன் றிழிதரவோர் வாளி தூவி
நன்னுதலா ளுடன்கூடி யிளவ லென்போன்

*கோவாம் என்றிருப்பிற் பொருள் பொருந்துவதாம்.

† 'தொன்றுண்டுறக்க' மென்றிருப்பிற் பொருந்துவதாகும்.

றுனிலங்கா புரம்புரப்பக் களித்த வென்றித்
தனுராமன் றனக்கடிமை தழைந்து ளாரே.

இதுவும் எண்சீர்க்கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். துறை-இதுவும் கடவுள்வாழ்த்து. அலங்காரம்—வீரம்பற்றிய பெருமிதம். ()

90 உடைமணியுங் கிண்கிணியுங் கறங்கா வண்ண
மொதுக்கிமழ வொன்றுடனு ளற்ற நோக்கி
யிடைமகளிர் மனையிடைபுக் கதன்பொற் றேண்மீ
தேறிநிமிர்ந் திடக்கையுறி பிடியா மற்றைப்
புடைமலர்க்கை கொடுவெண்ணெ தொடுவுண் டந்தப்
புதல்வனுக்கும் பகுந்தருத்திச் சிங்க நோக்கிற்
கடைநயன மணிவாயில் பற்ற நின்ற
காட்சிநினைந் தாடுவார் பாடுவாரே.

இதுவு மது. அலங்காரம்—வினைத்தன்மை. (௧௫)*

91 பொலந்தளிர் மிளிர்தாப் பொறையுயிர்த் துலவா
நலந்தழைகோங் கரும்பரும்பி நறைததும்பு நறுநெய்தன்
மலர்ந்துளபொற் புடைக்கமல மலர்ந்தெதிர்ந்தோர் மம்மர்நோய்
புலந்தனவாஞ் செழுங்காந்தள் பொருவில்கொழுங் குமிழினொடு
மலர்ந்தளிதாய் மணமல்கி யமைந்தபொனங் கொடிமன்னே.

இஃது தைந்தடித்தாவு.

நான்முகத்தோன் றனக்கமைத்த நவையறுபொற் பிணவாகும்
வான்முகத்தும் வளர்பொழிற்கண் வளர்வதுதா னுளதென்றோர்
நூன்முகத்தும் வியப்புறவே நுவல்வதுமொன் றிலதாயும்;

வெண்டிரைப்பாற் கடல்படந்த விழுமியதெள் ளமுதருந்து
மண்டர்தம னியப்புவனத் தமைந்துளவைந் தருவகத்துங்
கண்டனனென் றொருபனுவல் கழறியதொன் றிலதாயும்;

* ஏட்டுப்பிரதியில் இதனையடுத்து, 'பொலந்தளிர்' என்ற முதற்குறிப்புடைய செய்யுளும் அதுபற்றியகுறிப்பும் எழுதப்பட்டு ௧௬ என்று எண்கொடுக்கப்பட்டுளதாயினும், (௧௫) என்பதன்பின் ஆசிரியப்பாவினம் முற்றும் என்று வரிப்பினர்த்தெழுதப்பட்டிருக்கிறது.

தத்துதிரைக் கடல்வளைத்த தரணியினள் ளிடையாக
வைத்தவிரு சுடர்வலஞ்செய் வடவரையின் மருங்காய
வுத்தரதிக் கினும்பனுவ லுரைத்துளதொன் றிலதாயும்;

எங்கோன்,

இவற்றுள், முன்னைய மூன்று மூன்றடித்தாழிசை. ஏனையது தனிச்சொல்.

அருட்புயன் மாற னருவியங் குடரிப்
பொருப்பினுட் கண்டவற் புதத்தான்
மருட்கையின் வயத்ததாய் மகிழுமென் மனனே.

இது, மூன்றடியாய்வந்த நேரிசையாசிரியப்பாவாலிற்ற சுரிதகம்.

இஃது, அகநிலையொத்தாழிசைக் கலிப்பா. பகுதி—இயற்கை. துறை—காட்சி. அலங்காரம் உருவகவாய்பாட்டால் வந்த உடனிலைச் சிலேடை.

கலிப்பா.

92 நீலாலங் குளிறுதிரை கெழுகடன்முற் றகன்ஞாலத
தாலால மிசைபவள வருவரையுங் கருவரையுந்
[1]தமவெனவாங் கமைத்ததொழிற் றன்மையுட னொருதலையா
யெமதெமதென் றெதிருணரின் னுயிர்செகுத்தீத் திருநோக்கிற்
கடைசிவந்து [2]வரிபரந்து கவின்பெறுவார் குழைபோழ்ந்த
வடிபுரைமாண் [3]மதர்மழைக்கண் மதிபுரைவா ணுதலாயுல்;

இஃ தாறடித் தாவு.

இடந்தழுவுங் குனிசிலைக்கை யிகன்மறவர் [4]தொடுக்கணையோ
டுடன்றெழிலொண் சுடர்வடிவேற் றுணவாத லொருதலையாற்
றொடர்ந்தெழுதினை றமரேற்சென் பகமாறன் றுணையடிசேர்
திடந்[5]தழுவுந் ததியரெனத் தெறலருநன் கருளுநனே;

(மாறனலங்காரப் பாடம்) [1]தமிதமியென் னதுவெனலாந் தலைருயாண் டொழிற்றன்மை. [2]கருமையவாய்க். [3]மதர்மலர்க்கண். [4]கொடுங்கணையோ டென்றெழிலென். [5]தழுவு ததியரெனத் தெருளுறநன்.

வாட்டானைத் தூழமறவர் வயிரவழப் [1]பிழம்பெறிகட்
கோட்டானை யுடனவரிலெலக் கூற்லேவே லவர்மார்பிற்
றீட்டானை யினையளிப்பா னுமரேற்றிவ் வியந்துளபத்
தோட்டானைத் தொழுமாறன் றொண்டரினன் கருளுவனே;

குளிர்மதிவா னகநிறைஞ்சுங் கொடிக்கதேரின் குழுவினொடு
மொளிர்கழ்வண பண்டமறவ [2]னுடனெறெழில்வைந் நுதிவேலாற்
களிபயிலவெந் தொழில்புரிவ னுமரேல்வண் கருணைச
[3]னளிபயினன் மகிழ்மாற னடியரினன் கருளுவனே;

இவை மூன்றும நாலடியாய் ஒருபொருண்மேல் அடுக்கிவந்த தாழிசை.

எனவாங்கு,

[தனிச்சொல்]

காணுதி காணுதி கனல்தெறு கெழிலுந்
தாணுவி னிலதவ றினுநதவ றுவுரை
குன்றுசூழ் கூர்ம்பரற் [4]கொடுநெறி
யொன்றுநீ டமுழங்கு நறலே குதியே.

இது நான்கடியாய் நேரிசையாசிரியப்பாவினு லிற்ற சுரிதகம்.

இது, தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகமெனனும நான்குறுப் பினு மியுகின்றாய்வந்த ஒத்தாழிசைக் கலிப்பா; என்னை? "ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே, கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே", "அவற்றுள், ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகும்", "இடைநிலைப் பாட்டே தரவுபோக் கடையென, நடைபயின் றொழுகு மொன்றென மொழிப"* என்பவாகலின் உணர்க. இதனை யாப்பருங் கலக் காரிகையார் நேரிசையொத்தாழிசைக் கலிப்பா வென்ப. அலங் காரம்—சுவையணி பெருமிதம். என்னை? "கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச், சொல்லப் பட்ட பெருமித நான்கே"† என்றாகலின். பத்தி—உடன்பாக்கு. துறை—அடலேற்றுத்துறைத்தல். (௧)

(மாறனலங்காரப் பாட்டு.) [1]ப்புயப்புகுகட். [2]குடமுகெழுன். [3]னளிதிகழ்தே மகிழ்மாற. [4]கொடுநெறிக், கொன்று.

*தொல். பொருள். செய்யுளியல் 130—132.

†தொல். பொருள். மெய்ப்பாட்டியல் 9.

93 அண்டாண்ட பகிரண்ட முழுவதுமீன் றகத்தடக்கிக்
கொண்டபெரும் பாழினுக்கு னோங்காதாய்க் குளிறுதிரை
மண்டுபெரும் புனல்விரசைக் கப்புறத்தாய் மதிநலந்தோய்
தொண்டரினம் பேரின்பத் துறைபயிலந் தாமத்து
ளருணவிளங் கதிருதய மலகிறந்தொன் றியதொன்றாத்
திருமணிமண் டபத்தினுளிந் திரையுடன்வீற் றிருந்துளாய்;

இஃ தாறடித்தரவு.

இலகியவான் சுடர்விளக்கி னெழுத நுபல் பந்தமெனு
வுலகொருநான் கினுமதன்க ணொருநால்வ ரெனும்படித்தாய்
நிலவலயத் தடைவடைவே நிரைத்துளதீ விருமூன்றுஞ்
சுலவியபாற் கடலாவிற றுயிலுவந்த வொருமுதலாய்;

மீனாவ தாரமுதன் மேதினிமேல் வருகற்கி
தானாகி யுனக்குமொரு தந்தைதா யுளவெனலா
யூனார்பைக் குரம்பையினோ டுகந்தோறு முகந்தோறு
மானாதிங் கமைபருவத் தங்குமமை பவனாகி;

ஏழ்வகைத்தாய்நால்வகைத்தோற்றத்திசைந்துமிழைத்துளதம்
மூழ்வகைத்தா யலம்போது முயிர்கடோறும் பிரியாது
வாழ்வகைத்தாய்ப் புனல்சொரிந்து மலர்தூவி வழிபடுதற்
காழ்கடற்பா ரடியவர்பா லங்கங்கங் கமர்ந்துளாய்;

இவை மூன்றும் நான்கடியா யொருவிகற்பத்தான் வந்த தாழிசை.

பேதமையா லிறந்துபிறந் துழல்வனெனப் பேதுறு
மூதறிவா ரழியாத முதல்வனெனத் தெளிந்துளாய்;

சாபந்தா விழுக்கூறாத் தலைமையாய் சாபமடைந்
தாபத்தா யினர்சரணெ னடைதருமாங் கருள்புரிவாய்;

இவையிரண்டும் ஈரடியிரண்டப்போதரங்கம். (இவை பேரெண்.)

வேதனுமூற் றுணர்வலெனி லறிவரிய மேன்மையாய்;
ஆதரவுற் றிடுமெளியர்க் கறிவெளிய பான்மையாய்;
நினைபவர்தா நினைவுறுமவ் வுருவமதாய் வெளிநிற்பாய்;
அனைவருங்கண் டால்லியப்புற் றுசிபகர்ந் தெழுமொற்பாய்;

இவைநான்கு நாற்சீரோரடி நாலம்போதரங்கம். இவை அளவெண்.

திகிரியை யுயர்வலந் தரித்துளாய்;
திகழ்வரி வளையிடம் பரித்துளாய்;
புகர்முக மதமலை சொலச்செல்வாய்;
பொருமுத லையினுயிர் செலக்கொல்வாய்;
இரணியன் மார்பது பிளந்துளாய்;
இருநில மூவடி யளந்துளாய்;
அரணிய லார்கலி யடைத்துளாய்;
அதனிடை யேழ்மதிள் புடைத்துளாய்;

இவை யெட்டும் முச்சீரோரடி யிடையெண்.

தேனிமிர் துளபத்தாய்;
செனனம துளபத்தாய்;
ஈனை திடமெய்தாய்;
எழுமெழு மரமெய்தாய்;
அலகையி னுயிர்கொன்றாய்;
அறனல தருகொன்றாய்;
உலகம துறுதுப்பாய்;
உரலிடை யடர்துப்பாய்;
மறைமொழி யினுமெட்டாய்;
வரைபொரு ளுரையெட்டாய்;
உறைதயி ரதுகட்டாய்;
உரைபுகழ் பலகட்டாய்;
அகன்மலை கவிகையுளாய்;
அழல்பொரு கவிகையுளாய்;
சகடம துதைமைந்தாய்;
தகவின ருளமைந்தாய்;

இவை பதினாறும் இருசீரோரடிச் சிற்றெண்.

எனவாங்கு,

[தனிச்சொல்.]

பாத்துவ முதலாப் பரந்துள வைந்தாய்
வாத்துடன் மூவுரு வாகிய வாத
திருக்குரு கூரின் றிருவடி வழுத்து
மெங்கோன் றிருமகிழ் மார்பின னியற்றமி
ழூழிதோ றூழியெவ் வுலகினும்
வாழிய தாக வளர்க்கநீ யெனவே.

இஃ தாறடித்தாய் நேரிசையாசிரியப்பாவினாலிற்ற சுரிதகம்.

இது, தரவு தாழிசை எண் தனிச்சொல் சுரிதகமெனும் ஐந்துறுப்பி னால் வந்த வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா. என்னை? 'ஏனையொன்றே,

தேவர்ப் பராஅ முன்னிலைக் கண்ணே', 'அதுவே, வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே', 'வண்ணகந் தானே, தரவே தாழிசை யெண்ணே வாரமென், றந்நால் வகையிற் றோன்று மென்ப', 'தரவே தானும், நான்கு மாறு மெட்டு மென்ற, நேரடி பற்றிய நிலைமைத் தாகும்', 'ஒத்து மூன்றாகு மொத்தா ழிசையே'. (ஒத்த தாழிசையை ஒத்தாழிசை யென்றது வினைத்தொகை.), 'அடக்கியல் வாரந் தரவொ டொக்கும்' 'முதற்றொடை சுருங்குமன் னெண்ணே', 'எண்ணிடை யொழித லேத மின்றே, சின்ன மில்லாக் காலையான'* என்பவற்றான் உணர்க. இவ்வாறு வரும் வண்ணகவொத்தாழிசையினுள் இருசீரோரடிச் சின்னம் பதினாறும் ஒருசீரோரடியாய் வருவனவும் உள. அவை:—'உறைபதியி னுடனமைந்த யுந்திப்பாற் படைத்தாயு, மறைகடல்சூழ் நிலமுதலா யனைத்துலகும் படைப்போயும்'† என்னும் வண்ணகவொத்தாழிசையினுள் மூன்றடித்தாழிசை மூன்றும், 'வானுநீ; நிலனுநீ; மதியுநீ; விதியுநீ; தேனுநீ; அமிர்துநீ; திருவுநீ; உருவுநீ; அணுவுநீ; அருளுநீ; ஆதிநீ; அந்தநீ; இன்பநீ; துன்பநீ; இன்மைநீ; உண்மைநீ;' என ஒருசீர்ச் சின்னம் பதினாறுமாக வந்தவாறு காண்க. 'கொடலரு மாமுனிவா'‡ என்னுங் கலியுள் மூச்சீரோரடியிடையெண்ணினையும் இருசீரோரடிச் சிற்றெண்ணினையும் ஒருசாராசிரியர் இருசீரோரடியாகவும் ஒருசீராகவும் அளபெழாம லமைத்தவாறுங் கண்டுகொள்க. இவ்வாறு வரும் வண்ணகவொத்தாழிசையினை ஒருசாராசிரியர் அம்போதரங்கவொத்தாழிசையென்று கூறுமாறும் உணர்க. (உ)

இனி வண்ணகமெனப்படும் அராகமென வுரைத்து அவ்வுறுப்புடையன வண்ணக வொத்தாழிசை யெனவுஞ் சொலவர். வண்ணித்துப் புகழ்தலால் வண்ணகமாயிற்றென்ப துணராதே. அன்றியும், எல்லா வாசிரியருஞ் செய்த வழிநூற்குந் தொல்காப்பியம் முதனூலாதலின் அவனொடு மாறுகொளக்கூறலாம் அது ஆதலால் அது தொல்காப்பியர் நோக்கமன்றென வுணர்க. அதற்குஞ் செய்யுள் வருமாறு :—

---

* தொல். பொருள். செய்யுளியல். 138– 142, 144—146.

† ஷை. ஷை ஷை நச். 146 ம் சூத்திரவுரைபார்க்க.

‡ ஷை ஷை ஷை ஷை ஷை

94 பூமாது நிழன்மணிப்பூண் பொதியவிழ்பொன் னிதழ்ப்புனிதத்
தேமாலை நறுங்களபஞ் செறிமார்பத் திடைமுயங்க
வளப்பரிதாம் பகிரண்டத் தப்புறமு மகத்தடக்கி
யுலப்பிலிளங் கதிருதயத் தொளிகிளர்பே ருருவாயு
நன்னரங்கத் தணுக்கடோறு நயந்தணுவா கியுமெழில்கூர்
தென்னரங்கத் தரவணைமேற் [1]றெளிந்திருகண் வளர்ந்துளாய்;

இஃ தாறடித் தரவு.

ஒருசுடராஞ் சொருபமுட னருபமமைந் தொருசுடரோ
டிருசுடராய்க் குணமொருமூன் றெனலாகி முறைமுறையே
படைப்பதையு மழிப்பதையும் புறம்போக்கிப் பழிபிறங்கா
திடைப்படிகா வலை[2] நினைதென றெடுத்ததெய்வ னருளுதியே ;

நின்றனவா [3]யியங்கினவாய் நெடியபல் லுருவளித்தோன்
பொன்றியநா ளெழுந்தபெரும் புனற்படிந்த வுயிர்களைநீ
யெம்மானே திருவுதரத் திருத்தியசா வற்கவற்றுங்
கைம்மாறங் கெவனோ[4] முன் கைக்கொண்ட தருளுதியே ;

புறம்பயின்ற வினைவழிசார் போக்குவர வினும்பிரியா
[5]தறம்பயின்ற தனுவுளதே லதற்கவற்றை யெடுத்தனையா
யுண்ணீர்மை பற்றனமாய்க் கூடகரகிற் புகுவாறுறீஇக்
கண்ணீர்கொண் டகன்றகலாக் காவலெவ னருளுதியே;

இவை மூன்றும் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி நான்கடித்தாய் இரண்டுங்கற்பதுதான் வந்த தாழிசை.

தாணியு ளவரொடு மூரணிய பெருவிற
லிரணியன் வரனெனு மரணற விகலினை ;

ஒருபது சிரமுட னிருபது கரமுள
னிருதனை யுயிர்பிசை பொருகணை சிதறினை ;

பறைபவ ரிறையவ ருறையவயின் வடிவுமா
பறைபல னுயிர்பரு மறைகழ லிணையினை ;

(மாறனலங்காரப் பாடம்.) [1]திறந்திருகண், [2]பலைதென், [3]யியங்குன வாய் நீடியபல் லுருவமைத்தோன். [4]நீ, [5]தறம்புரிவ தனுவுளவே,

முதலையி னிடருறு மதமலை மடுவினு
ளுதவுக வெனுமுரை யதனொடு முதவினை ;

இவை நான்கும் அராகம் ; என்னை? 'உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்'* என்பதனாற் குறிலிணைக ளுருட்டிவந்த துணர்க.

வஞ்சனையோர் வடிவெடுத்த மாதுலனை மறைபயின்ற
சஞ்சனைக்கொன் றாரகேசன் கடும்பொறையைத் தவிர்த்தனையே ;
குருகுலத்தார் நூற்றுவரைக் கூற்றுவனுட் டினிலிருத்தித்
தருமன்முத லவர்க்கவனி தனியாளக் கொடுத்தனையே ;

இவை நாற்சீரடி யிரண்டம்போதரங்கம். இவை பேரெண்.

கழிபெருங்கற் பினளாடை கழியாம லயந்தனையே ;
வழிபடுந்தூ தனுமாகி மடக்கோலை சுமந்தனையே ;
ததிபாண்டன் றனக்கழியாத் தமனியநா டளித்தனையே ;
விதிகாண்டற் குலப்பில்பல வேடமவை கொண்டனையே ;

இவை நான்கும் முச்சீ ரோரடி நாலம்போதரங்கம் ; அளவெண். அற்றேல், நாற்சீ ரீரடியிரண்டம்போதரங்கத்தொடும் இவற்றிடை வேற்றுமையாதோவெனின் எழுத்து முதலா வீண்டிய வடியிற் குறித்த பொருளை முடியநாட்டல் வேற்றுமை என்னை? 'எழுத்து முதலா வீண்டிய வடியிற், குறித்த பொருளை முடிய நாட்டல், யாப்பென மொழிப யாப்பறி புலவர்'† என்பதனானுணர்க. இந்நோக்கம் மேல்வரும் இடையெண் சிற்றெண்ணிற்கும் ஒக்கும்.

தாடகை யுடலுயிர் போக்கினை ;
தாபதன் மனதிடர் நீக்கினை ;
நீடக லிகைபழி தீர்த்தனை ;
நேசமுள் ளவனொடு சேர்த்தனை ;
வில்லினை மிதிலையில் வளைத்தனை ;
மெல்லிய விளமுலை திளைத்தனை ;

---

*தொல். பொருள். செய். 233.

†ஷை ஷை ஷை 78.

வல்லா வடல்கெட நடித்தனை,
மருதினை முதலொடு [1]முடித்தனை

இவையெட்டும் முச்சீ ரோரடி யெட்டம்போதரங்கம்; இவை இடையெண்.

உறித்தயிர்கட் டுண்டனையே;
உரலிடைகட் டுண்டனையே;
மறித்துநிரை காத்தனையே;
வழங்கினையைங் காத்தனையே;
குடநடமுன் பாடினையே;
குழலினிற்பண் பாடினையே;
படர்சகடம் பொடித்தனையே;
பகட்டுமருப் பொடித்தனையே;
நாவலன்பின் னடந்தனையே;
நடித்தனை[2]மன் னடந்தனையே;
கோவலரில் லிறுத்தனையே;
கோள்விடையே ழிறுத்தனையே;
புள்ளினைவா யிடந்தனையே;
புரந்தனைபா ரிடந்தனையே;
தெள்ளமுதங் கடைந்தனையே;
தேவருளங் கடைந்தனையே;

இவை பதினாறும் இருசீரோரடிச் சிற்றெண். அம்போதரங்க மெனினும் எண்ணெனினும் ஒக்கும்.

இதனுள், பேரெண் இரண்டும் அளவெண் நான்கும் இடையெண் எட்டும் சிற்றெண் பதினாறும் அடைவே குறைவின்றி வந்தன.

எனவாங்கு,

[தனிச்சொல்]

இனையருங் கமையவா மெண்ணருந் துணைத்தி
னினைவருங் காவ னிகழ்த்தினை யதனா
னின்னது கருணையு நீயு
மன்னிய திருவுடன் வாழிவா ழியவே.

இது நான்கடியாய் நேரிசையாசிரியப்பாவினாலியன்ற சுரிதகம்.

(மாறனலங்காரப்பாடம்) 1 பொடித்தனை. 2 மமன்.

இதனுள் ஆறுறுப்புங் குறைவின்றிவந்தமை கண்டுகொள்க. இது யாப்பருங்கலக்காரிகை நோக்கம். என்னை ? 'அவற்றொடு மூடுகிய லடியுடை யராக, மடுப்பது வண்ணக வொத்தா ழிசையே' என்பதனு னும், 'அசையடி முன்ன ராரகம்வந் தெல்லா வுறுப்பு முண்டேல், வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி'* என்பதனுனும் உணர்க.

இவையிரண்டும் திணை—பாடாண். துறை—முன்னது கடவுள் வணக்கம். பனுவல்வாழ்த்தெனினு மாம்; பின்னது கடவுள்வாழ்த்து. இரண்டும் அலங்காரம்—வாழ்த்து. (ரு)

95 ஆளாய் மதுரகவி யாதரித்த பூங்கமலத்
தாளான் மகிழ்மாறன் றந்த தமிழ்மறைப்பாக்
கேளா தவரே யிருசெவியுங் கெட்டாரே ;

மாதா முலைப்பா லருந்தா வரோதயனுந்
தாதார் மகிழ்மாறன் றந்த தமிழ்மறைப்பா
வோதா தவரே யுரையறியா வூமர்களே ;

புள்ளிப் பொறிவண் டிமிர்பூம் பொழிற்குருகூர்
வள்ளன் மகிழ்மாறன் வடித்த தமிழ்மறைப்பா
வுள்ளத் துணரா தவரே யுணர்விலரே.

புலவீர்,

பழுதற மாறன் பகர்தமிழ் கையா
லெழுதிய வேட்டி னிணமலர் சூட்டித்
தொழுததன் வாசந் துற்றியவ் வேட்டைச்
செறிப்பதே சென்னி மற்றைய
பொறித்தலை யென்னப் புனைபொய்த் தலையே.

இது தாவின்றாகித் தாழிசைபெற்ற கொச்சக வொருபோகு. என்னை? 'ஒருபோ கியற்கையு மிருவகைத் தாகும்', 'கொச்சக வொரு போ கம்போ தரங்கமென், றொப்ப நாடி யுணர்தல் வேண்டும்',† 'தரவின் றாகித் தாழிசை பெற்றுந், தாழிசை யின்றித் தரவுடைத் தாகியு, மெண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியு, மடக்கிய வின்றி யடிநிமிர்ந்

*யாப். காரிகை. செய். 11. †தொல். பொருள். செய். 147, 148.

தொழுகியும், யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது, கொச்சக வொருபோ காகு மென்ப'* என்பவற்றா னுணர்க. இது தனிச்சொல் லும் சுரிதகமுமின்றித் தாழிசைதாமேயும் வரும். (ச)

96 புண்டரிக மடலவிழ்பொற் பொகுட்டினில்வாழ் திருமகளுந்
தெண்டிரைசூழ் புவிமகளுந் திருத்தகவாழ்ந் தெழில்பெருகும்
வண்டிமிர்பூம் புனற்பொன்னி மதிளரங்கன் றிருவடியுட்
கொண்டவர்க ளினிப்பிறவிக் கருக்குழியுட் குறுகாரே.

இது, தனிச்சொல்லுஞ் சுரிதகமு மின்றித் தன்றளையான்வந்த தாழிசையின்றித் தரவுடைத்தாய கொச்சகவொருபோகு. திணை—பாடாண். துறை கடவுள்வாழ்த்து. அலங்காரமும் வாழ்த்து. இதற்கு யாப்பருங்கலக்காரிகையார் தரவுகொச்சகமென்று பெயர்கூறுப. (ரு)

97 மாந்தளிர் போன்மேனி மாமயுண் கருங்கயற்கட்
பாந்தளின் மேதக்க பைபோன றகலல்குல்
வாய்ந்தவனை மெனமென்றேண் மடவா னல்லா
யழுங்கலுஞ் சீறா ரகன்மலைக் கெம்மூர்ச்
செழும்பசும்பொன் கோடு செய்துயர் குன்றந்
திணிதாய்ப் புடைத்தெழுகின் றெண்ணித் திலக்கா
ழணிபூண் முலைபோன் றணித்து.

தேமகிழ் மாளிகைச் செம்மலின் சென்னியும்
பூமகள் காதலன் பொற்றாட் கமலமும்
போன்றணித் தன்றியும் பொய்தீர் வசிட்டனும்
வான்றனில் வைகும் வடமீ னெனலாந்
திருந்திய கற்புடைச் சேயிழை யென்னு
மருந்ததி யும்போன் றணித்து.

இது, தாழிசையின்றித் தாழிசைபோற்பட்ட தாவிலக்கணத்திற் றிரிந்துவந்த தாவிணைக் கொச்சகவொருபோகு; என்னை? 'மூசி றுதி யாசிரியங் கலியே', 'வெண்பா வியலினும் பண்புற முடியும்'† என்னுஞ் சூத்திரங்களுடன் படாது, எழுத்து முதலா வீண்டிய வடியிற் குறித்த பொருளை முடிய நாட்டற் றரவு தாவிணை வந்து அதன்பின்ன ரீற்றயலடி முச்சீரா யெழுசீராயும் நேரிசையாசிரியச்சுரிதகமாதல்,

*தொல். பொருள். செய். 149 †தொல். பொருள். செய். ஏசு. எஎ.

ஈற்றடி முச்சீராய் ஈற்றயலடி நாற்சீராய் மேனின்று மெழுசீரானிறும் வெள்ளைச்சுரிதகமாதலின்றி, வெண்டளைதட்டு வெள்ளோசைதழீஇ வெண்பாவியலாற் றவிரண்டும ஈற்றடிக்கண் முச்சீரா னிற்றமையா னென்றுணர்க. இதற்கு இங்ஙனம் தாவிரட்டிப்பதே பெரும்பான்மை யென்றுணர்க. தாவிரட்டியாது வருவதூஉம் வந்தவழிக் கண்டுகொள்க. "செவ்விய திவ்விய"* வென்னும் பாலைக்கலியும் இதுவென்றறிக. (இது) பகுதி—இயற்கை. துறை—இடமணித்துக்கூறி வற்புறுத்தல். அலங்காரம்—ஒருபொருட்குப் பலபொருளுவமை. (௬)

98 கற்பனைமேற் கொண்டொழுகுங் கடைப்பிடியார் வயிற்றிருநாண்
பொற்புறுமாற் றலிற்பொறித்த பொருவருசெவ் வணிநோக்கித்
தற்பொதிவாட் டிறந்தகெழு தகைத்தாய புனலூர
னிற்புகலால் வெஞ்சினநஞ் செனக்கூர்த்த மருளுக்க
முற்பலந்தெள் ளமிர்துயிர்த்தற் [1]றெளிகிளர்சீர் பயின்றனவே.

அஃதன்றுல்,

அருகனிங் கெனமையாண் டருண்மகிழ் மாறன்
புனல்வறங் கூராப் பொருநையுட் [2]புத்தேட்
டினகரோ தயத்திற் செவ்விபெற் றலர்ந்த
[3]தண்மலர் மரைபுரை தகைத்தா
மொண்ணுத லரிவை [4]யொளிர்திரு முகமே.

இது, தன்றளைத்தாய்த் தரவு, தனிச்சொல், சுரிதகம் என்னும் மூன்றுறுப்பால்வந்தது. இதனை யாப்பருங்கலக்காரிகையார் தரவு கொச்சகக்கலிப்பா வென்ப. இதனது வேறுபாடும் காண்க. (இது) பகுதி—பாத்தையிற்பிரிதல். துறை—முகமலர்ச்சிகூறல். அலங்காரம்—அற்புதவுவமை. அற்று உவமவுருபு. (எ)

99 இமிழ்திரையார் கலியழுவத் திரும்புனன்மீ மிசைபொடிக்குங்
குமிழ்புரைபுன் னிலைப்புலவுக் குரம்பையின்வீ வினையோர்துங்
கடிகைதாங் கழிதொறாஉங் கழிபெருங்கா மருசெவ்வி
யொடிகையாய் புயங்கிழைமூப் புடனுறனூண் முகத்துணர்ந்து

*'செவ்விய தீவிய' என்பது கலித்தொகையிற்கண்ட பாடம். (பாலை.18. (மாறனலங்காரப் பாடம்). [1]றெளிதிகழ். [2]புனைதீர் தினகரோதயத்திற். [3]தண்மலர் புரைதகைத்தாகு. [4]புலமையாண் முகமே.

மமிழ்தினும்வான் சுவைபயப்ப வருண்மாறன் மயர்வறக்கூர்
தமிழ்மறையின் றுறைமூழ்கித் தத்துவந்தான் றலைப்பெற்றே
யொருதலைபற் றினர்க்கிகல்செய் துணருணர்வி னிலைநீத்த
பொருள்வேட்ட கெழுதகைமைப் புரவலநின் போக்குறீஇ
மருள்வேட்டா டிறத்தியான் வடிப்பனபற் பலவும்ம;

தாளாண்மை யகத்துறீஇத் தகவிலர்க்குந் தக்கார்க்கும்
வேளாண்மை செய்ததற்பின் வெள்வளைதா மிறைதுறப்பத்
தொய்யிறு னணைமென்றோட் டிணைதுறப்பப் புதுமதிபோன்
மையில்வாண் முகமாழ்கி மணிமாமை யதுதுறப்பக்
கறைகெழுவே லெனமிளிர்ந்து கள்ளுயிர்க்குங் கழுநீரி
னுறைமலிநோ யுழந்திருகண் ணுறங்குதுயில் வினைதுறப்ப
நன்னுதலார்க் கணியாய நலம்புரிநா ணுளந்துறப்ப
வின்னுயிர்தன் னிலைதுறக்கு மிவைமன்ற வின்னுங்கேள்;

அஃதன்றால்

புகழும் வாய்மையும் பொச்சாப் பின்மையு
நிகழுந் தோற்றமு நின்னிலை துறப்பக்
கற்கடங் கடந்து சேறற்
குற்றனை றுனுறு வனவுலப் பிலவே.

இது, தரவிணைத்தாகித் தரவிரட்டித்துத் தரவு தனிச்சொற் சுரிதகமென்னு மூன்றுறுப்பால் வந்தது. இதனை யாப்பருங்கலக்காரிகையார் தரவிணைக் கொச்சகக் கலிப்பா வென்ப. இதனது வேறுபாடுங் காண்க. (இது) பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—செலவழுங்குவித்தல். அலங்காரம்—இதனுள் பலவயினு முவமை வந்ததாயினும் முன்னவிலக்கினுள், தலைமைவிலக்கு. (அ)

100 தாதிவர் தண்டுழாய் தளையவிழ் வகுளமதாய்
மேதகு புயநான்கும் விழுமியதோ ரிரண்டாகி
மாதவனென் றருமறையும் வாழ்த்துந் திருநாமம்
பூதலத்தோர் மாறனெனப் புகழ்க்குருகூ ரமர்ந்துளாய்;

இது நான்கடித்தரவு.

ஈசனென்று நீயென்று மெண்ணுதற்கோர் பாவினையா
னீசனிறை யொன்றுமிலே னெனக்கென்று நீகேழ்த்து
மோசமதிற் சென்னெனன் றறிவென் மொழிந்தருளே;

மத்துறுவெண் ணெய்க்காக மாதவனீ கட்டுண்ட
தெத்திறமென் றுறுதிங்க ளெம்பிரான் சோகமுறு
மத்திறமு மேதென் றறியே னருளுதியே ;

தன்னைத்தான் பாடியவண் சடகோப னாகியநீ
யென்னைப்பா டென்னைப்பா டென்றிறைவர் நிற்பவவண்
பின்னைத்தா னீயிருந்து பாடியதென் பேசுகவே ;

இவை மூன்றும் மூன்றடித்தாழிசை.

அஃதான்று,

[தனிச்சொல்.]

நற்றாய் முலைப்பா னயவா விரதங்
கற்றா யதனாற் கடவுளன் றுயிரென
நின்னிலை நினைவரி தெமக்கா
னுன்னிலை நீயே யுணர்வது கடனே.

இது நான்கடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது, நான்குறுப்பாய்வந்ததாயினும் தேவபாணியாய்வருதலின் முதனிலையொத்தாழிசையாகாது, 'ஏனையொன்றே, தேவர்ப்பராஅ முன்னிலைக்கண்ணே'* யென்பதனாற் றேவர்ப்பராயிற்றேனும் எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றலின் வண்ணகமு மாகாது ; ஆதலான் இது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகவொருபோகாயிற்று. சீர்வகைக்கலிக்கு 'விராய தளையு மொருஉநிலை யின்றே'† யென்பதனாற் றளைவிரவப்பெறும். 'கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்—நிலைக்குரித்தன்றே'‡ யென்பதனாற் சீர்வகைக் கலியடியாதலின் வாழ்த்துமென்னு நேரீற்றியற்சீர் வந்தது. (இது) திணை-பாடாண். துறை-கடவுள் வாழ்த்து. அலங்காரம்-சந்தயத்துள் சுத்தசந்தயம். நிச்சயகோர்ப்பம் எனினு மாம். 'ஆறறியந்தண'§ ரென்னுங் கலியு மிது. (கூ)

*தொல். பொருள். செய். 138.
†ஷை ஷை ஷை 61.
‡ஷை ஷை ஷை 25.
§கலித்தொகை. 1.

101 அரவணைமேற் றிரைத்திருப்பாற் கடற்றடம்பா லறிதுயில்கூர்
பரனிலவுந் திருவுந்திப் பனிமலர்ப்பொற் பொகுட்டுயிர்த்த
வுலகிலெலாம் பகிரண்ட மவையனைத்து மகத்தடக்கி
யிலகுமொரு தனிப்பெரும்பா ழினையுமகத் தடக்கியவாம்
விரசையெனுந் திருநதிக்கப் புறத்தாய விழுமியவெண்
டிரைபரமம் பரந்தாமத் தடனுறைவோ ரிருந்தெய்துஞ்
சுகமிவணின் றணையென்றேட் டுயிர்முகத்தெய் தினனுக
வகனமர்ந்து மையிற்றொடர்ந்த வமைநியவா யுயிரெனலாந்
தொடர்புடைய தமர்பிரியத் தொழிலியற்றி யதுவென்றே
மடலவிழ்வண் பொழிற்சிறைபு மறைதெருளா வகையமைத்துந்
திருவுருவம் பருவகலன் சிறந்ததல னொடுமொன்றென்
றொருதலையா கவுமமைத்த தொருங்கிவையென் றுணைநெஞ்சான்
முயற்சியதொன் றிலனுரு முறைமையிற்கட் டிருமண
மியற்றியதா யியம்றுபிழ்தேர் மகிழ்மாற னெழில்வரையிம்
மடவர லினைமகிழ்ந் தளித்த
கடவுளை நினைதொறுங் களிக்குமென் மனன்றனே.

இஃது தன்றளையாற் பதினாறடித்தாய் ஈற்றயலும் ஈறும் முச்சீரும் நாற்சீருமாகி ஆசிரியத்தளையான் வந் தடக்கியலின்றி யடிநிமிர்ந்தொழுகிய கொச்சகவொருபோகு. இங்ஙனங் கலியடியாய்க் கூறுங்கால் நேரிசையாசிரியத்தொடிதனிடை வேற்றுமையின்றுமெனவுணர்க. 'அகன்ஞாலம்' என்னும் நெய்தற்கலியும் அடக்கியலின்றி யடிநிமிர்ந்தொழுகிய கொச்சகவொருபோகின் பகுதியாய்த் தனிச்சொல்லு மடக்கியலுமின்றி(ச் சுரிதகமற்று) வந்தது. "எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே", "வெண்பா வியலினும் பண்புற முடியும்"* 'ஒருபான் சிறுமை யிரட்டியதனுயர்பே'† என்பதனானு முணர்க. இக்கருத்தறியார் இதனை வெண்கலியென்ப. வெண்கலியாமா றுமுன்னர்க் காட்டுதும். அன்றியும் 'அரிதாயவற னெய்தி'‡ யென்னுங் கலிப்பாவினு ளீற்றயலடி 'பல்லியும் பாங்கொத் திசைத்தன' வென முச்சீரான் வந்தன. 'மணிநிறமலர்ப்பொய்கை'

* தொல். பொருள். செய். 76, 77.

† ஷை ஷை ஷை 151.

‡ கலித்தொகை, பாலைக்கலி. 10.

யென்னும் மருதக்கலியுள் 'இல்லி னெழீஇய யாழ்தழீஇக் கல்லாவாய்ப், பாணன் புகுதராக் கால்' என வெண்பாவியலானும் பண்புறவந்தவாறு காண்க.

இனி, 'யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய'* தென்பது யாப்பின் வேறுபடுவனவும் பொருளின் வேறுபடுவனவும் என இரண்டாம். அவற்றுள் யாப்பின் வேறுபடுதலாவது மேற்சொல்லியவாறும் இனி வருகின்றவாறுமின்றி யாப்பிலக்கணத்தின் வேறுபடுதலாம். பொருளின் வேறுபடுதலாவது கலியுள் ஒத்தாழிசைக் கோதப்பட்ட கடவுள்வாழ்த் துப்பொருண்மையின்றிக் காமப்பொருளாக வருதல்: எனக் கொள்க. எனவே, வண்ணகவொத்தாழிசைக் குறுப்பாகியவற்று ளொன்று மிரண்டுங் குறைந்து வருவன கொச்சகவொருபோகெனப் பெயர்பெறுமெனக் கொள்க. இவ்வாறுவருங் கொச்சகங்களை யொருவரையறைப்படுத்து நான்குபாவினு மினஞ்சேர்த்துப் பண்ணிற்குத் திறம்போலத் தாழிசை துறை விருத்தமெனப் பன்னிருபகுதியாகக் கூறுவர்: அவற்றுள், வெண்பாவிற்கும் ஆசிரியத்திற்கும் இனம் முன்னர்க் கூறினும். ஒழிந்த இக் கலி முதலிய பாவிரண்டிற்கும் இனம் பின்னர்க் காட்டுதும்.

இது பகுதி—இயற்கை. துறை—தெய்வத்தை மகிழ்தல். (௧௦)

102 புத்தேளிர் நிரப்பிகப்பான் பொருதிரைப்பாற் கடல்கடைந்து
மெய்த்தேவர் பெருமானும் வேங்கடத்தெங் கண்ணபிரான்
புரந்தருணன் மருந்திறுத்த புலந்துவரத் துறந்திழைத்த
வாரந்தருபெண் ணமிர்தாமிம் மடவாள்மென் றேடுறந்தே
யில்லறத்தின் றொடர்புடையோர்க் கின்பமுமா யலர்க்கருத்து
நல்லறத்தின் றொடர்ப்பாடு கனிதருஞ்செம் பொருளென்றே

ஆய்ந்ததனால்.

ஒருதலைபெற் றனனுகி யுருப்பவிர்வெங் கடத்திடைபோய்
வருபொழுதிற் பெருவறங்கூர் மணிநாவின் மம்மர்நோ
யருண்மடந்தை யிலவிதழ்த்தெள் ளமிர்தருந்தத் துறந்தனவே;

அஃதான்று,

*தொல். பொருள். செய். சூ. 149. அடி, 5.

[1]வேனுதிவள் பாற்கடந்தா ரிடவேனில் வெயிற்குழையாள்
கோனுதற் கட்டழற் குளித்த மதனெனமெய் [2]கூர்ந்தநோய்
பானலங்கட் கிளிமொழிமெய்ப் பரிசத்தாற் றுறந்தனவே;

அஃதான்று,

உருவிலா வுருவிற்று முருளிலா மசரதத்தைப்
பருகுவான் புனலெனச்செல் பாலைசார்ந் துளங்கொதிநோய்
[3]திருமகளோ டுறுமின்பத் திரையாடத் துறந்தனவே;

அஃதான்று,

வரையிரு மருங்கினு மரீஇய வெவ்விடம்
புரைசுரத் [4]தாரதர் புக்குயிர்க் குறுநோ
யம்மென் சாய லணிமயில் பைம்பூட்
கொம்மை வெம்முலைக் குன்றிடை முயங்கலி
னனவு கனவா நயந்துழி
நினைக லாநீ ளிடைநீத் தனவே.

இது, தாவு தாழிசை தனிச்சொல் சுரிதகமென்னு நான்குறுப்பினோடுந் தாழிசைதோறுந் தனிச்சொற்பெற்று நேரிசையொத்தாழிசையிற் சிறிது யாப்பின் வேறுபடுதலா லொருசாராசிரியர் சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவென்ப. இதுவும் எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றிய கொச்சகவொருபோகு. பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—உண்மகிழ்ந்துரைத்தல். (கக)

103 மாதர்வாண் முகத்திருவர் மதிப்பிளவொத் திமிழிசைய
வோதநீர்ப் படுவிடந்தற் றாவிடையார்க் கிடரிழைத்த
மேதையா னிடந்தழீஇ மேம்படுவிற் றணைசெருத்த
திலகவா ணுதற்செவ்வாய்த் திருமகள்கா றுறும்பெருமா
னலகிலாக் குணங்களிற்றுக் கருமறைவண் டமிழ்கூர்ந்த
தெண்டிரைத்தண் டுறைப்பொருநைத் திருநாடன் றிமிரவரி
வண்டிரைக்கு மகிழ்மாலை மணிமார்பன் றடரிவாய்;

இது தாவு.

(மாறனலங்காரப் பாடம்) [1]வேனுதல்வன். [2]கூர்ந்தநோய். [3]திருமகளாற் பெறுமின்பத். [4]தாரதர்ப்.

குழந்துளைப்பற் பணியுமிழ்ந்த குருமணிக ளிருடுரீஇ
யுறும்பகல்போன் றழலினுமா ணொளிவிடுநீ ணிலையவால்;

புறக்காழ்வன் பணையுகுத்த புதுமணிமா தவன்புகழ்போ
னிறக்கார்வெண் மதியினுநீ டிருடோத்து நிலையவால்;

கொண்டலினுங் கிடியெனவே கோதையிற்பே துறக்குளிறுந்
தொண்டகத்தி னொலியடங்காத் துயரியற்று நிலையவால்;

ஆளியெனப் பொறிவரிய வடுபுலியிற் றெழுந்திறங்கூர்
ஞாளியின்வாய்க் குரைப்புயிர்க்கு நடுக்குதவு நிலையவால்;

நற்றாயர் முகத்துபய நமன்பொருவு மூருவிற்றாய்
வெற்றலத் தினுங்கொடிதாம் விழிதுஞ்சா நிலையவால்;

ஊர்துஞ்சா துஞ்சினுமோ வொருசிறைவாழ்ந் திருந்தவய
லார்துஞ்சார் நீளிடைவாழ் பவர்துஞ்சி யெவண்மன்னோ;

இவையாறு மீரடித்தாழிசை.

எனவாங்கு,

[தனிச்சொல்]

கங்கு லின்னணங் கழியா நின்றது
திங்களஞ் சுடரினிச் சேணுற லுளதா
லின்னுயிர்க் கேள்வ ரெய்தாரென்
பொன்னிறப் பைம்பூட் புணர்முலைக் குவட்டே.

இது சுரிதகம்.

ஏழடித்தரவு மீரடித் தாழிசையாறுந் தனிச்சொல்லும் நேரிசை யாசிரியத்தாலிற்ற சுரிதகமும் பெற்று ஒத்தாழிசையிற் சிறிது வேறுபட்ட விதனையு மவ்வாசிரியர் பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பாவென்ப. இவற்றது பேதங்களுங் கண்டுகொள்க. பகுதி — இரவுக்குறி. துறை — காப்புச்சிறைமிக்க கையறுகிளவி. அலங்காரம்—ஒத்தது வென்றதென் னும் வாய்பாட்டா லொருதொடர்பினுள்வந்த வுவமை. (கஉ)

104 மணிமல்கு திரைத்திருப்பாற் கடனடுவண் வரியரவி
னணிமல்கு மமளியிலைமே லறிதுயில்கொள் வுழிமதமா

வழுங்கனுர்கூர்ந் தழைக்கநூற் கலர்மடந்தை முகுளமுலைக்
கொழுங்களபத் திளிலபூந்திகழுழைதிருமார்பையுநெகிழ்த்துப்
பூங்கழல்வன் னிலத்துறைப்பப் பொலந்துகில்சுற் றவிழவிரு
டேங்குநயன் றுணர்க்குஞ்சி சுவற்புளத் துணைத்தோளாற்
றாங்குகலு ழனைக்கொடுதாய்த் தாயிடங்கர் முரண்முருக்கித்
தேங்கமலத் தடப்புடைசூழ் தென்னரங்கத் தமர்ந்துளாய்;

இது எட்டடித்தரவு.

ஆங்கும்,

ஆன்ற கதிர்போன் றனுக்கடொறும் வீற்றிருத்தல்
சான்றவர்மெய்ஞ் ஞானந் தரிப்ப வுலகனைத்து
மீன்றருணின் மாயை யினைத்தெருளா தேயிறப்பை
தோன்றுவைநீ யெனபதெவன் சொல்;

கற்பனசால் கோதமனுர் கற்படிவங் கைக்கொண்டாள் ற்/
சற்படிவ மாகியதைத் தாட்ட மரைதருநாள்
பொற்படிவஞ் செய்ததுறூர் போன்ம்;

முருந்தி னகையாண் முழுவலிப்பப் பூந்தா
ளிருந்தை யதனை யிளவாச த்தாக்கிப்
பொருந்த வளித்ததுறூர் போன்ம்;

அஃதான்று,

அணங்கொருத்தி தன்னை யளித்தியன வென்றூற்
றணந்தவணிற் கென்னத் தணந்தவளை நோக்கப்
புணர்ந்தவரே யல்லதப் புண்ணியனை கா ணுத
துணர்ந்திலரோ மூடமுணர்ந் தோர்;

காத்ததலா லுந்திக் கமலமல ரண்டமெலாம்
பூத்த திறமறியார் போன்ம்;

இவையைந்து கொச்சகம்.

துறவற மூதவிப துரிசற வருளினன்
அறமலி புதல்வனை யருளிய தறிகிலர்;

திவழு று சிறுவர்க ளிருவரோ டிருவரை
யவன்வயி னடைவினி லருளிய தறிகிலர் ;

இவையிரண்டும் அராகம்.

தாதை யாதலும்	பெரியனாதலும்
புதல்வனாதலும்	சிறியனாதலும்
பேதையாதலும்	கரியனாதலும்
அறிவனாதலும்	செய்யனாதலும்

இவையெட்டுஞ் சிற்றெண்.

உணர்கிலர்,

[தனிச்சொல்.]

கன்றொடு சிறுவர் கடைகயி றணிகுணில்
கொன்றையந் தீங்குழல் கொடுமல ரயனெழு
மவ்வுழி யவையவை யவரவர் தெருளுற
வெவ்வுரு வமுமா னினதுரு வழியா
திருப்பவும் வியாத்தியெய் தியதுணர்ந் திலரா
லற்புதன் மாயை யழிவிலாக் கருணைய
சிற்குண நினைத்தெருட் டினரோ
யெற்கிறை யெனமனன் மதித்ததிப் போதே.

இது எட்டடித்தாய் நேரிசையாசிரியத்தா னிற்ற சுரிதகம்.

இது, அம்போதரங்க வொருபோகு ; என்னை ? 'அம்போ தரங்க மறுபதிற் றடித்தே—செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை'* என்பதனானும், 'எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெண்—ணடக்கியல் வாரமொ டந்நிலைக் குரித்தே'* என்பதனானு முணர்க.

இங்ஙனங் கூறப்பட்ட அம்போதரங்கவொருபோகு தன்னுறுப் பெல்லாங் கூட்டி யறுபதிற் றடித்தாகவும், அதன் செம்பால் முப்பதடித் தாகவும், அதன் வாரம் பதினைந்தடித்தாகவும் சிற்றெல்லைபெறு மென்ற வாறு. எனவே யிது தலையளவம்போதரங்கவொருபோகும் இடையள

*தொல். பொருள். செய். 152, 153.

வம்போதரங்கவொருபோகுங் கடையளவம்போதரங்கவொருபோகுஞ் சிற்றெல்லை கூறியவாறாயிற்று. அவற்றுக்குப் பேரெல்லை கூறுமாறென்னையெனின், அறுபதிற்றடித்தெனத் தலையளவிற்கு வேறு கூறியவழி யவ்வளவைப்பற்றி யதன் செம்பாலும் வாரமும் எனப் பாகஞ் செய்துவந்தானாதலாற் கடையளவிற்குச் சிற்றெல்லை பதினைந்தாயவழிப் பேரெல்லை முப்பதின்காறு முயருமெனவும், இடையளவிற்குச் சிற்றெல்லை முப்பதாகியவழிப் பேரெல்லை யறுபதின்காறு முயருமெனவும், தலையளவிற்குச் சிற்றெல்லை யறுபதாயவழிப் பேரெல்லை (யிரட்டி) நூற்றிருபதின்காறு முயருமெனவும் கொள்ளவைத்தான் என்பதாம்.

ஆதலால் இது, நாற்பத்துநாலடியால் வந்தமையால் (இடையெல்லை.) இடையளவம்போதரங்க வொருபோகு. ஒழிந்தனவும் இவ்வாறேவரும். இவையெல்லாம் இக்காலத்து வீழ்ந்தனபோலும். திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. (ஒத்தாழிசைக்கலியின்வகை முற்றும்.) ()

105 பொன்னெடுங்குன் றெனச்செறிந்து [1]புடைத்தெழுமென் புளகமுலை
மின்னெனலா நுணுகிடையவ் வேய்புரையுந் [2]துணைமென்றோட்
குளிர்மதிபோன் [3]றொளிர்வதனக் கோமளப்பூங் கொம்பன்னா
டளிர்புரைமெல் லடிச்சுவடுந் தளர்நன [4]வெய் யோனென்றாற்
குடதிசைவான் கதிர்சுருக்கிக் கொடித்தேரி னெடுமறைந்தா
னடல்புனைவே [5]லவரென்று லற்றம்பார்த் தாறலைப்பர்
பொன்புனைபூண் மணிமார்பிற் புரவலவின் றிருவிரு
நன்குலத்தெம் மில்வைகி நறுந்தேன்செந் தினையருந்தி
மரையதளிற் [6]றுயிலமர்ந்து வைகறைவாய்த் துயிலெழுந்து
விரைகமழ்தார் மகிழ்மாறன் மெய்த்தமிழ்ச்சொற் குருகூரின்
முதிர்திரைப்பா லாழியின்வாண் முகடுரிஞ்சு முதயகிரிக்
கதிர்வருமுன் சேர்தல் கடன்.

இது, வெண்கலிப்பா. என்னை? 'வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்—வெண்பா வியலது வெண்கலி யாகும்' என்றார் காக்கைபாடினியர். இதனுள்ளும் வெண்டளைதட்டு வெள்ளோசை தழுவியும் கலித்தளைதட்டுத் துள்ளலோசைத் தாகியும் ஈற்றடி முச்சீ

(மாறனலங்காரப் பாடம்) [1]புடைபரந்த. [2]தடமென்றோட். [3]மிளிர்வதனக். [4]வெய்யோன்மன்னோ. [5]லெர்குறுகியற்றம்பார்த். [6]றுயில்வைகி.

ரான் வந்தவாறு காண்க. பகுதி—உடன்போக்கு, துறை—நெறிவிலக்கல். அலங்காரம்—அவயவம் அவயவி யிரண்டினையும் உவமைப்படுத்தலான் முற்றுவமை. (கச)

106 படுதிரைப்பா லாழி பயந்தவெண் டிங்க
ளடுவண தாகிய நாண்மலர் நீல
மிணையென வாண்முகத் தெய்துந் துணைவிழி
நன்னீ ரருவி நறந்தே னருவியுடன்
மன்னீர்மை வாய்ந்தன வா மாழை வரைபரையும்
வெண்ணித் திலத்தாம மேதரும மணிவடத்திற்
பண்ணமைத் தோங்கிய பைம்பூட் புணர்முலை
கூற்றுரு நேர்ந்தோர் குறிப்போ டுயிருண
மாற்றருங் கூர்தன மருள்வண ரைம்பா
லெம்போன் றடிப்பணி யீறின் றியற்று
துமதா ருயிர்கொண் டொருவுமின் சேய்த்தெல்
றருடக வாண்டாண் டணித்து ழை மைந்தர்க்
குருபமை நூபுர மோவா தொலிக்குந்
தளிர்புரை மெல்லடித் தையல் பொருட்டா
லிளம்பிறை வெண்கோட் டிரும்பிணர் வான்கை
வளங்கெழு தீவிழி வாரண வேட்டைக்குச்
சிங்கங் குழூஉச்செய் சீறா ரதரிடை
யிங்கியாங் அன்புற வீண்டிருள் யாமம்
பனிமகிழ் மாறன் பராங்குசன் வெற்பிற்
றனிவால் வேலோய் தவிர்.

இது, கலிவெண்பா. என்னை? 'ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற்—றிரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே*' என்பதனா லுணர்க. இதனுள் வெண்டளைதட்டு வெள்ளோசை தழுவிவந்தவாறு காண்க. பகுதி—இரவுக்குறி. துறை—இரவச்சங்கூறி வரவுவிலக்கல். அலங்காரம்—பெயரொடு பெயர் நிரனிரைப்புலமை. இல்பொரு ளுவமையு முள. (கரு)

*தொல், பொருள், செய் 154.

107 குருகையின் மகிழ்மாறன் குலகிரி தனில்வைகுந்
திருமுக மதிபோலுஞ் சிறுபிறை நுதன்மன்னே
விருகபஞ மதர்நோக்க மிலவின திதழ்செவ்வாய்
பருமணி நிரையென்னப் பழுதற மிளிர்மூரல்
வருமிள முலைமாதே மதகளி றெனலாரு
மொருபிடி யிடையாரு மொருபிடி நடைசாலு
முருவளர் பணைமென்றோ ளுயர்வுறு மாவல்குல்
கருமுகில் குழன்மொழி கரும்பு.

இது, ஆசிரியத்தளையானுந் தன்றளையானும் வந்த வெண்கலிப்பா.
பகுதி-சேட்படை. துறை-அலயவங்கூறல். (கலிவெண்பாட்டுமுற்றும்.)

108 மலர்புரை யாணர் மைபுண்கண் மொய்யிழாய்
உலகிய லறிந்தோ ருசாத்துணை யுள்ளத தருமறை
தமவெனுங் கருவிக ளடங்காச் சாக்கிரத்
தமர்தரு மகத்தவை யடங்கிய வேலைய
சொற்பன சுழுத்தியிற் பரவலுந் துணையுணர்க்
குற்பவ மாமுளத் தெனலுண் மையதாம்;

இஃதிரண்டாமடி யைஞ்சீரான்வந்த வாறடித்தாவு.

சினதூரன்,—[இது கூல].

தலையவிழ் பல்பூத் ததைமெல் லணைமேல்
விளைவுறு வேட்கையின் விம்மிதனாகி
வளைமலி முன்கையை வாழ்த்துபு பற்றி
யிளையரில் யாமத் தினில்;

பூங்குழ லோர்கையிற் றங்கினன் றங்கலு
மீண்டிய மென்மை யினிமையிராக் கமழ்தல்
கூண்டு மழலை மிழற்றுந் துளிர்ப்பவளம்
யாண்டெய் திளைநீ யெனும்;

வேர்க் களப மெழுகித் தாளவடம்
பாரித்த சொர்க்கம முலையெனுரங்கப் பஞ்சுறையும்

பூரித் தழுந்தப் புணர்மார் பிணைநோக்கி
யார்நிற் கிணையிங் கெனும்;

இவை மூன்றுங் கொச்சகம்.

வாய்ந்தமருந் தீன்ற மலர்மடந்தை நன்படிவ
மீந்தவர்தாம் யாரிங் கெனும்;

இது வெள்ளைச்சுரிதக மிடைவந்தது.

கழுவா மணிக்குக் கவினுமுறுப் பெல்லாம்
வழுவா தமைத்து மலர்தூவிக் கண்டார்
தொழுதா தரிக்கத் துளக்கமதுய்த் தாரீ
ரெழுபா ரினும்யா ரெனும்;

இயற்கை யுறுப்பி னெழிலணிகள் வேய்ந்தார்
முயற்சி மறைத்தருளு மூடமிஃ தென்னென்
றுயர்த்தி யுறுகட் டுரையினுள மொன்றப்
பெயர்த்துந் தழுவிய பின்;

இவையு மோரிரண்டு கொச்சகம்.

அணியிழாய், [தனிச்சொல்]

இக்காலத்தாராக்கவிஃதென் னென் றுணர்வே?
னக்காலத் தொன்றி யயர்வுற் றனன்மன்னோ;

இது பேரெண்.

தோய்ந்த துயில் விட்டுத் துணுக்குற் றுணர்வுறலு
மாய்ந்ததட மென்றோ ளணைமேற் றுயில்கொள்வா
ளுய்ந்ததட மென்றோ ளணைசேர் துயின் முகத்தாங்
கேந்திழைக்கென் னீக்கமிஃ தென்னுமென் னுமென் னும்;

ஆற்றுவா ராற்றற் கனைமதருமங் நோயதனைப்
போற்றுவார் மாட்டென் புகழ்பழியென் பான்மன்னோ
போற்றுவார் மாட்டென் புகழ்பழியென் றூற்பிரித
றேற்றுவாய் நெஞ்சே யெனுமறைசிங் தித்தனனால்;

இவை யிரண்டுந் தாழிசை.

சிந்திப் பதனொடுமிச் சிந்தை யறைபோக
வந்திப் பசலை மறைத்ததுமெய்ம் மாசுணவே;

இதுவும் பேரெண்.

ஏடீபென் சொல்வேன் மன்யான் பிரிவென்ன
நீடிய வுள்ள தவர்க்கு;

இதுவும் கொச்சகம்.

ஆயினும், [இதுவுந் தனிச்சொல்]

எனதுயி ரெனவுறு நினதுயி ருணர்வுற
மொழிவது மொன்றே பிரிவது புரிபவ ருடனே காமுறு
மனனே, குழையினை யுண்பது முறக்கமு மறக்குமென்
னையரிக் கண்கள தல்லான் மன்றோ
மெய்யென வுணர்ந்துணர்த் துகநீ
யொய்யென வுடலினை யுயிர்துறக் குமதே.

இதனுள் முதலடி முழுது முடுகியலாகவும், இரண்டாமடி யிருசீர் முடுகியலாகவும், மனன் என்பது சொற்சீராகவும் வந்தன.

இவ்வாறு வருவன கொச்சகக்கலிப்பா வெனப்படும். ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தாழிசையாகிய வுறுப்பு மிக்குவந்தாற்போலக் கொச்சகக் கலிப்பாவிற்கும் வெண்பாவாகிய வுறுப்பு மிக்குவருமென்று கொள்க. இனி, யீண்டோதப்பட்ட வுறுப்புக்கள் மிக்குங் குறைந்தும் மயங்கியும் வருமவை கலித்தொகையுட் கண்டுகொள்க. இதற்குக் கூறிய தொல்காப்பியத்திற் சூத்திரம்: 'தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து—மைஞ்சி றடுக்கியு மாறுமெய் பெற்றும்—வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்,' 'பாநிலை வகையே கொச்சகக் கலியென—நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே'* என்பதாம். இச் சூத்திரத்தைத் 'தோன்றும்' மென்பதளவும் பிரித்து வேறாக்கி இதனைக் கலிவெண்பாவினுறுப்பின் வேறுபட்ட கொச்சகமென்றும் ஒருசாராசிரியர் கூறுவர். இது தலைமகன் குறிப்புக்கண்டு பிரிவர்கொல்லென வையுற்றுச்செல்கின்ற தலைவி யக்காலத்துத் தலைவன் கனவினாற்றல்கேட்டுப் பொருள்வயிற் பிரிகின்றானெனத் துணிந் தாற்றாளாய்த் தோழிக்குரைத்தது. (கஎ)

*தொல். சொல். செய். 155, 156.

109 முள்ளுடைத் தாட்டா மரைமலர் முன்னிய
பிள்ளைமை யெய்தாப் பிதாமக னாகிய
தெள்ளிய நான்முகத் தோதியுந் தேர்வரு
மொள்ளிய நால்மறை யோதா துணர்வினுட்
கொள்பவ னாகிக் கொழித்த தமிழ்மறை
புள்ளுயர் கேதனத் தாற்கருள் பொன்மகிழ்த்தார்
வள்ள லுயர்குடரி வாய்;

இஃதேழடிப் பஃறொடைவெண்பா.

திருந்திய வெண்ணெண் கலைகளுந் தெற்றெனத்
தரும்பனு வலின்றுறை சார்ந்துணர் கேள்வி
பொருந்திய பழிபிறங் காவருட் புரவல;

இது மூன்றடி நிலைமண்டிலவாசிரியப்பா.

நெய்த்து மிருண்டுஞ் சுருண்டு நெறித்தனவாய்
மொய்த்தகுழல் கோதி முடிமுச்சி
வைத்தமுகை விண்டு மதுத்துய்ச் சுவற்புரள்வ
துய்த்திங் கெழுதுவதொன் றோ;

இருட்பான்மை யின்றி யிருதிணையும் பானுட்
பொருட்பான்மை முற்றப் பொறிப்பவரொன் றானு
மருட்பார்வை மையுண் மதரரிக்கண் செப்பு
மருட்பார்வை தீட்டுவதிங் கார்;

இவையிரண்டு மின்னிசைவெண்பா.

காந்தளிதெனு மிணைக்காங்க ளையெழுதினு
மாய்ந்தணி வரிவளை யவைபுரா வொலிப்பதுந்
தோய்ந்திட வெழுதலுந் துணிபவர் யாரே;

இது மூன்றடி நிலைமண்டிலவாசிரியப்பா.

வண்ண மணிக்கச்சினை வெங்கட் டறவிம்மித்
தண்ணென்னும் வெச்சென்னுந் தன்மை புரிவனவாய்
வெண்ணணித் திலவடங்கண் மீவாவும் பூண்முலைமேற்
பண்ணப் படுமோ பகர்.

இது, இன்னிசைவெண்பா.

உண்டிலைப் பெறைய ழுற நுண் ணிடையுருவங்
கண்டெழுந் வாரெவர்யென காலுறினுந்—தெண்டமதுட்
கொண்டெசிதல் கூடும் படிக்குங் குறித்தெழுதும்
பண்டிதரிங் காருளர்நண் பா ;

இது நேரிசை வெண்பா.

பலவாய், மறித்தினி யுரைப்பதென் மடவர லவயவ
நெறிப்பட நிகழ்த்திய படிநீ கிழியினிற்
செறித்துள தென்னிற் சீறூர்
குறிக்கொளக் குழுவொடு கொடுபோ துகவே.

இது, நான்கடியாய்வந்த நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது, ஆறுநிலைக் கொச்சகக்கலிப்பா. என்னை? 'பாநிலை வகையே கொச்சகக் கலியென—நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே'* என்றாகலின். பகுதி—மடல். துறை—அவயவமெழுத வரிதெனவிலக்கல். 'அகவினம் பாடுவாந் தோழி' என்னுங் குறிஞ்சியுட் கலியும் பாவிது. ()

110 கதழ்பரி பூண்ட கடுந்தேர் கடாவுய்
மதனுடை நோன்றாள் வலவனி னீயற்
புதமிவ ணெய்தல் புதனழிந்தீர் போலுந்
திதமகிழ் மாறன் றிருக்குரு கூர்வா
ழிதமரு ளெங்கைய ரீதுறி லின்பஞ்
சுதனுறுந் தேர்மீளத் தூண்டு ;

மடநல்லாய்,

தவறொன் றிழையாத் தமியேனை யீன
விவற லுடையா யெனலாலிப் போழ்து
கவர்வுற் றதுநெஞ்ச கம் ;

புனலூர,

பொய்யினைப் பொய்யாகப் புறம்போக்கி மேதகக
மெய்யினை மெய்யாக்கும் விழுமியவர் மாறுநின்
செய்கைப் பொதுமகளிர்ச் சேர்ந்தாங் களவளாய்

* தொல். பொருள். செய். 156.

மைய லூறுநின் மனோவாக்கும் வெண்பளிங்காய்
யெய்திற்றென் சொல்வ தினி ;

இன்சொல்லாய்,

சொல்வன் மையாரந் துயவற் றவர்விறற்சொல்
வெல்வன் மையார் விளம்பு ;

புரவல கேட்டி,

நனிநீ ரவரு நருதற் பொருட்டாய்த்
தொளிநீர் வளைமுன்கைத் தோகதகங்கூர் மாதர்
முனிநீர் மையாக முள்ளுகிராற் செய்புண்
பனிநீர்பெய் சாந்தெழுதும் பண்பின் மறைத்துட்
கனிநீர் மையர்போலக் கையிருதாள் பற்றித்
தனிநீ குறையிரப்பத் தாழ்ந்ததுள நின்க
ணினிமேலென் செய்குவல் யான்.

இது, உறழ்கலி. என்னை? 'கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும்—போக்கின் றாத லுறழ்கலிக் கியல்பே'* என்னும் விதியால் ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய் பெற்றும் போக்கின்றி யிற்றவாறு கண்டுகொள்க. 'அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்ச' மென்னு மருதக்கலியு மிது. (௧௧)

111 அன்றினர் நிறத்துற வழுத்துபு பறியா
வன்றிறன் மாரதர் வலம்பட வேந்திய
கொழுங்குருதிப் புனன்முழுக்குண் கூரிலைவே லினைவென்றே
யழுங்களுர்கூர் நமன்படைபோன் றமர்புரிமை யுண்கணார்
மந்தரவெற் பிணைப்பழித்து வயிரமணிப் பருவரைபோற்
சுந்தரமொன் றியபைம்பூட் டுணைத்தோளும் புனலூரன்
பின்றிகழ்தட் டொளியினுமாண் மிளிர்வெய்திக் கதிர்சுலாம்
பொனறிணிமால் வரைமார்பும் புணையாகப் பொதுவுண்பான்;

இவையிரண்டு நான்கடியாய்வந்த தரவு.

தண்ணறும்பூந் துணர்ப்பொதும்பர்த் தமிழ்மலயத் தாவுமிழ்ந்த
வொண்மணியும் பசுங்கழைவிண் டுகுமணியுங் கைக்கொண்டே;

வயிரவழற் பிழம்பெறிசண் மால்யானை மதமாடி
வெயில்விரிபொன் னசும்பதனை மெய்ம்முழுது மட்டித்தே;

*தொல். பொருள். செய். 157.

பொறிவரிவண் டுளர்நறுமென் பொதியவிழ்பூ நறவருந்தி
வெறிகமழ்சந் தகிலுகம் வேர்முதல்கீண் டுருட்டியே;

மாங்கனியும் வாழையின்மா ழையங்கனியும் வருக்கையின்மாண்
டீங்கனியு மெவ்வுழியுந் திசைதிசைபோய்த் திரைத்தெடுத்தே;

முதுமொழிவான் பொருட்டிறங்கண் முழுவதூஉ முதுக்குறைவாற்
பொதுவறவுட் கொண்டவரிற் பொருண்முழுதுங் கவர்ந்துராய்;

நெடும்புடனின் றுருதிவலை நிலத்துறுமுன் னெதிர்கதுவிச்
சுடுஞ்சுரந்தண் மருதமெனத் தோன்றுதற்கா யிடையடைந்தே;

இவையாறு மீரடித் தாழிசை.

புறவு பருந்தொ டெருவை வெருண்டு
பறவிய பம்பு தொழுதி வழங்கவே;

உலவை முளிந்த குடச முழிஞ்சி
விலகு கடம்பு குரவை நெருங்கியே;

இரலை மருண்ட பிணையொ டிரங்க
வருண நிறங்கொண் ஞமலியை யுந்தியே;

உலைவில் குறும்பி னெயினர் கணஞ்செ
யிலைசெய் குரம்பை யுழந்து பெயர்ந்திடா;

இவை நாலு மராகம்.

குல்லையுந்தே னிமிர்கொழும்பொற் கொன்றையுந்தண் காயாவு
முல்லையுந்தோன் றியுந்துவன்ற முல்லையுளொல் லையிற்படர்ந்தே;

ஆம்பலந்தீங் குழற்குடவ ரகன்பாடித் தொழுவுறாஉ
மோம்படைமூ வினமொன்றிற் கொன்றுலக்கற் றிரியவே;

குடப்பால்வெண் டயிர்விராய்க்குளிர்புனற்கங்கையைப்பழித் துக்
கடற்பாலின் வளமலிந்து கவின்மருதங் குறுகியே;

கருமேகந் தொடுசிகரக் கருவரையும் பொருவலவெண்
திருமேரு வெனப்பணைத்த விருகரையி னெடும்பொருதே;

சுடுமணுறப் படுத்திழுகு சுதைவழித்த மடைமுழையுக்
கிடுமணுறு முழவிணைவெண் டெழிலியெனக் குளிறியே;

ஊதியங்கொள் வதற்குளதோன் றுதவினர்தம் முதவியைவென்
றீதலியல் பறிந்தோரி னெழின்மணியேற் பவர்க்குய்த்தே;

இவையு மோரா றீரடித்தாழிசை.

எனவாங்கு, [தனிச்சொல்]

வண்டானங் துணை புரிய;
மகன்றிலுந்தன் றுணைபிரிய;
தண்டாத வனமிரிய;
தடஞ்சிறைப்புள் ளினமிரிய;
பொய்கை தொறும்பரந்தே;
பொழில்க டொறும்பரந்தே;
செய்க டொறும்பரந்தே;
திரள்கரும் பிற்பரந்தே;

இவை யெட்டும் இருசீ ரோரடிச்சிற்றெண்.

பரந்த, [தனிச்சொ லிதுவும்.]

மதிநலத்தான் மிக்க மறைத்தமிழ்தேர் மாறன்
மொதிய மகிழ்மாலே முகுனேன் குருகூர்த்
ததியர் புகழ்சங் கணித்தண் டுறையுட்
புதியவா மந்தண் புனல்.

இது, நாலிரட்டித்துத் தாழிசையாறு மாரக நான்குந் தாழிசை பின்னுமோராறுந் தனிச்சொல்லும் இருசீரோரடிச் சிற்றெண் எட்டும் பின்னுமோர் தனிச்சொல்லும் பெற்று, இன்னிசை வெள்ளைச்சுரிதகத் தா லிற்றுக் கலிக் கோதப்பட்ட வாறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும் மயங்கிவந்தமையான் இதனை யொருசாராசிரியர்—யாப்பருங்கலக்காரிகையார்—மயங்கிசைக் கொச்சகக்கலி யென்ப. அசிரியத்தோடும் வெண்பாவினோடும் மயங்கிவந்தமைபா னென்று கொள்க. பகுதி—பரத்தையிற் பிரிதல், துறை—புனல்வரவுரைத்தல் அலங்காரம்—வென்ற தொத்த' தென்னும் வாய்பாட்டா லொருதொடர்பினுட் பல வந்த வுவமை. இதன் வேறுபாடுங் காண்க. (உ0)

கலிப்பா முற்றும்.

கலிப்பாவினம்.

112 மெய்யமர் வேல நெடுமா லரங்கத்துன்
னையரிக் கண்ணியை யாரென வின்னு மறியேன் யான்;

செஞ்சுடர் வேல திருமா லரங்கத்துன்
னஞ்சனக் கண்ணியை யாரென வின்னு மறியேன் யான்;

செம்புகர் வேல திருமா லரங்கத்துன்
னம்பமர் கண்ணியை யாரென வின்னு மறியேன் யான்;

இவை மூன்று மிரண்டடியா யீற்றடி யிரண்டுசீர் மிக்குவந்தமையாற் கலித்தாழிசை. பகுதி—சேட்படை. துறை—அறியாள்போன்று நினைவுகேட்டல். அலங்காரம்—அவயவவுவமை. (க)

113 தாய்போன் றுலகளித்த தஞ்சைமால் வெற்பனையாய்
சேய்போன் றொளியுடையான் செங்கைத் தழைதாலுஞ்
சேய்போன் றொளியுடைய கொண்டிலனென் சித்திரத்தால்
வாய்போன் றினிவரிலென் சொல்லி மறுப்பன் வினையேனே.

இஃ தீற்றடி யொருசீர் மிக்கு வனையடிகண் மூன்று மொத்துத் தனியே யிடைமடக்காய்வந்த கலித்தாழிசை. இதுவும் பகுதி யது. துறை—தலைவி குறிப்பறிதல். அலங்காரம்—அவயவியுவமை (உ)

114 மின்பெற்ற மேக மெனமிளிரு மெய்த்திருமா
லன்பிற் றருதழையை யாயிழையா
ளன்பிற் றருகவென வாங்கி யதையணைத்த
பின்புற்ற வின்பப் பெருக்கென் புகல்வென் பெருமானே.

இஃ திரண்டாமடி மூன்றுசீராகக் குறைந்து முதலடியு மூன்றுமடியு மளவடித்தாய்த் தம்மினொத்தும் ஈற்றடி ஐஞ்சீராய்த் தம்மிலொத்து மொவ்வாதும் வந்த கலித்தாழிசை. பகுதி—இதுவுமது. துறை—தழைவிருப்புரைத்தல். அலங்காரம்—இதுவுமது. (ங)

115 வாளி பின்செல முன்செலு மறிபுன லொழுக்கத்
தாளி பின்செல முன்செலு மடிகளி றக்தோ

கோளில் வான்பிடி குறுகலும் புணர்ச்சி யுட்கொளலால்
வேளின் மேதகு பெருவிறல் யாவரே விளைத்தார்.

இது நெடிலடி நான்காய்வந்த கலித்துறை. துறை—நாடுவாழ்த்து. அலங்காரம்—தொழிலதிசயம். (௪)

116 அடனி லாதர ணிழந்துளார் யாவரே யானு
மிடனி லாரிடை பணிபவ ராமெனன் மெய்யே
யுடனி லாதவாய் ஞாளிமுன் பிரிநரி யுறுநீர்ப்
படரு மாகளிற் றெருத்ததாய்க் களித்தது பாய்ந்தே.

இதுவுங் கலித்துறை. அலங்காரம்—நிதரிசனம். (௫)

117 இறைவ னுலவேந் திரியல்போ ருனரிறை மையிலாச்
சிறைவ லாருமைச் சரண்புக வுடனிசி திறனென்
றறைவ தாம்புன லலைக்குமா ளிகடுதிக் கையினத்
துறைவன் மாமுத றழீஇயுட னிசிதரு தொடர்பே.

இதுவுங் கலித்துறை. திணையுந் துறையு மது. அலங்காரம்—வினையுவமை. (௬)

118 கலக்கு பாய்புனல் கடிந்தெழக் கவட்டொடு மலங்கப்
புலங்கொ டாருவிற் புட்குலம் போகலா திரைத்தல்
குலங்க டாங்குனர் நடுக்குறக் குலத்துளா யவர்பா
னலங்கொள் வார்சூழீஇக் கலுழ்வதே போன்றன நவிலின்.

இதுவுங் கலித்துறை. திணையுந் துறையு மது. அலங்காரமுமது.

119 அறைபொரு தமிழ்தரு மணியைத் தாருவை
நறைமரை வளக்கபி லையினை நாகினைத்
துறைதொறுஞ் சுழித்தெறி தொகுதி பாற்கட
னிறையமிழ் துயிர்த்தபல் வளநி கர்க்குமே.

இது கலிவிருத்தம். அலங்காரம்—தொழிலுவமையுள் ஒருவயிற் போலி. (௭)

120 தாக்கவான் புனலிரு கரையுந் தாக்கலின்
மாந்தடா மசைந்தல ருகுத்தல் வாழுமெம்

முரங்கெடா தளித்தியென் றள்ளிக் கொம்பராங்
காங்களாற் பனிமலர் கவிழ்ப்ப போன்றவே.

இதுவுங் கலிவிருத்தம். அலங்காரம்—தற்குறிப்பேற்றவுவமை.

121 மண்ணக மடந்தைதன் வரம்பை வான்புனற்
பெண்ணர சழித்ததென் றுலகம் பேசுமா
றெண்ணியே யளவினுக் கெங்கு மார்த்தியா
யுண்ணுநீர்க் கடலையு முததிக் கீந்தவே

பாவும் அலங்காரமும் இதுவுமது. (௧௦)

122 புக்கமா நதிக்கெதிர் புணரி மாமணி
யொக்கவே தெளித்திட லுததி நாயகன்
மிக்கநா யகியென விரைந்து பாதகா
ணிக்கையாய்த் திரைக்கரத் திடுவ போன்றவே.

பாவும் அலங்காரமும் இதுவுமது. (௧௧)

123 மடைதிறந் தொழுகுநீர் வாவி வாய்ப்புக
மிடைதிறந் தருமர விந்த நாண்மலர்
புடைதிறந் ததுமலர்ப் பூவை பொன்னிதழ்க்
கடைதிறந் தெதிர்கொள நினையுங் காட்சித்தே.

இதுவும் பாவும் அலங்காரமும் அது. துறை—அஞ்சும் நாடு வாழ்த்து. (௧௨)

கலிப்பாவினம் முற்றும்.

வஞ்சிப்பா.

124 கறைவேல்விழி யிலவிதழிதழ்
நறைநாண்மல [1]ரம்புயமுகம்
புருவஞ்சிலை யுருவம்புய
லுருவம்புரி குழலெனுமது
பொன்னங்கிரி கொங்கைத்துணை
[2]மின்னென்றுண ரிடைகண்டிலன்
எனவாங்கும்

(மாறனலங்காரப் பாடம்) [1]ரஜீதானனம். [2]மின்னென்றுரை யிடை.

கற்றறி வுடையவென் னிறையினைக் கலந்து
ணற்றிரு வுறைவிட நண்பா
சொற்றமிழ் மாறன் றடரிவண் பொழிலே.

இஃது தொன்றியு மொன்றுதும் வஞ்சித்தளையான்வந் தாறடித்தாய் 'எனவாங்கு' என்னுந் தனிச்சொற்பெற்று நேரிசையாசிரியச் சுரிதகத்தாலிற்ற குறளடி வஞ்சிப்பா. அலங்காரம்—தொகையுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல். (க)

125 வான்றோய்கதி ரடற்றிகிரியை வலனேந்தியு
மீன்றோய்மதி மிளிர்வலம்புரி யிடனேந்தியுங்
கவுத்துவமணி வனமாலிகை கவின்மார்பினிற்
பவித்திரமுறு மலர்மாமகள் பயில்வாழ்வினன்
மகரக்குழை தழைகாதினன் மணிமௌலியன்
சிகரப்பஃ றலைசேர்வட மலைமேலுறை

செல்வனை,

அனவா தமும்வரி யளிசெறி தளையவி
ழினமலர் தூயிறைஞ் சினர்பாற்
கனவிலு முறுங் கொடுங்கணிச்சி யோனே.

இது, ஆறடித்தாய்ச் செல்வனையென்னுந் தனிச்சொற்பெற்று நேரிசையாசிரியச் சுரிதகத்தாலிற்ற சிந்தடிவஞ்சிப்பா. திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—பொருட்டன்மை. (உ)

126 பைம்பொற்குன்றே பணையிளவனமுலை
யம்புத்துணையே யரிமதருண்கண்
குனிசிலையிரண்டே கொடுநன்புருவம்
பனிமாமதியே பழிதீர்நன்முகங்
கொடியேதளரிடை கொண்மூவேகுழ
லாடரவின்பட மாமேகடிதடங்
[1]காந்தளந்துணைமல ரவையேகையும்
பூந்தளிரண்டே புடைபெயர்மெல்லடி

நண்பா,

(மாறனலங்காரப் பாடம்.) [1] காந்தளின் றுணைமலர்க் கவினே கையும்,

படர்புகழ் மாறன் பாரங்குசன்
[1]நடரிவண் பொழிலே தோகைய திடனே.

இது, பொதுச்சீர் பதினாறும்வந்து 'நண்பா' வென்னுந் தனிச்சொற் பெற்று ஆசிரியச்சுரிதகத்தாலிற்ற குறளடிவஞ்சிப்பா. துறை-இயல்பிடங்கூறல். அலங்காரம்-நியமவுவமை. (ரு)

வஞ்சிப்பா முற்றும்.

வஞ்சிப்பாவினம்.

127 நறைமகிழ் மாற - னுறைநக ராடவர்
மறைமொழி நினைதொறு - நிறை தளாருமே;

திருமகிழ் மாற - னருணக ராடவ
ருடலை நினைதொறு - முருகுமென் னிறையே;

பொன்மகிழ் மாற - னன்னக ராடவர்
முன்னுரை நினைதொறு - மென்னிறை யிலவே.

இவை குறளடிநான்காய் மூன்றும் ஒருபொருண்மேல் வந்தமையால் வஞ்சித்தாழிசை. பகுதி-பொருள்வயிற்பிரிதல். துறை-பிரிவு நினைந்திரங்கல். அலங்காரம்-சுவையினுள் அசைவுபற்றிய அழுகை. (க)

128 தண்டமிழ் மாறன், வண்குரு கூரார்
நண்புற வாரார், கண்டுயி லாவே.

இது, இருசீரடி நான்கினொலொருபொருண்மேலொன்றாய்வந்தமையால் வஞ்சித்துறை. துறையும் அலங்காரமும் இதுவுமது. (உ)

129 நீரநாகமா, தாரமாகமே
வாரமாகமா, ஞாரஞககா.

இதுவும் வஞ்சித்துறை. துறை-கடவுள்வாழ்த்து. அலங்காரஞ் சொல்லணியினுள் பிறிதெதிர்செய்யுள். அநுலோமப் பிரதிலோமமென வடநூலார் கூறுவது மிது. (ரு)

(மாறனலங்காரப் பாடம்.) [1]துடரிமால் வரைவளர் தோகைய தியலே.

130 சதிதக னடனுடை, திததிதிகாண்ஞானு
ததிதா கார்கண்ட, கதிகா ளிளர்கான.

இதுவுமது. துறையுமது. அலங்காரம்—சொல்லணியினுள், சுழிகுளம். (௪)

131 கொந்தார் திருமகிழ் மார்பினர்
செந்தா மரையடி சேர்பவர்
தந்தா வளமுறை நாரண
னந்தா மந்தனே யாள்வரே.

இது, சிந்தடிநான்காய்வந்தமையான் வஞ்சிவிருத்தம். துறை—இதுவுமது. அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிவந்த பெருமிதம்.

வஞ்சிப்பாவினம் முற்றும்.

மருட்பா.

132 வாய்ந்த மகிழ்மாறன் மால்வரைமான் கண்ணிமைக்கு
மோர்ந்தகமழ நீர்மென் முகைவாடும்—பூந்தளிர்க்
கானிலம் படர்தலுங் கண்டன
மானிட மகளே யணங்கலண் மனனே.

இது கைக்கிளை மருட்பா. பகுதி—இயற்கை. துறை—தெளிதல். அலங்காரம் சந்தயத்தினுள் நிச்சயாந்தம். (௧)

133 தேவர் பெருமான் றிருப்பாற் கடல்கடைந்தோன்
மூவ ரெனவாழ் முதல்வ னனைத்துயிர்க்குங்
காவல் புரிவானிற் காக்கவே யாவர்க்குந்
தண்ணளி புரிமகிழ் மாறு றதியரி
ணெண்ணிதிச் செல்வம துடனீ
மண்மிசை வாழி மதிகலந் தழைந்தே.

இது புறநிலைவாழ்த்து மருட்பா. திணை—பாடாண். துறை—புறநிலைவாழ்த்து. அலங்காரம்—வாழ்த்து. (௨)

134 பொய்தீர் புலவீர்காண் மாறன் பொருளுரைதேர்ந்
தெய்திசெய் தாது மிருந்திலீர்—மெய்பாக
வின்பமுடன் றுன்ப மிழவுபே றென்பவைதா
முன்பிழைத்த வூழான் முறைபிறழா—தென்பதுநீர்
மானிடம் பாடி மதியாது பொய்சொல்லி
யீன விளிவரவா லேற்றுண்டு—போனதுநாட்
கூற்றுவன் செய்யுங் கொடுந்தொழிலுந் தீநரகி
னாற்றலவை கேட்டு மடங்கலீர்—பாற்கடற்
பூரணன் மலர்மகள் புரவல னகில
காரணன் வடவேங் கடவ
னாரணன் கழலினிப் பாவுமி னயர்ந்தே.

இது, வாயுறைவாழ்த்து மருட்பா. திணை—பாடாண். துறையும் வாயுறைவாழ்த்து; அல்லது துறை பொருண்மொழிக்காஞ்சி எனின் அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம். (௩)

135 திருமால் பரனெனவே தேற்றுதற்கண் பாக
வருமா ரியன்றனையிம் மண்மேற் புலவீ
ரொருமா னிடனென் றுணரா தவனெம்
பெருமானு[1]மென் றுற்றப் பெம்மா னருள்கூர்
[2]பத்தா தடியிணை பாவுமின் னதுவே
யுத்தம விலக்கண முரைசான்
முத்தியை விளக்கு முபாசியு [3]மதுவே.

இது செவியறிவுறூஉ மருட்பா. இதுவுந் திணையுந் துறையு மலங்காரமு மது. (௪)

மருட்பா முற்றும்.

டாப்பாவினம் முற்றும்.

(மாறனலங்காரப் பாடம்.) [1]மென் றுணர்ந்தப். [2]பத்தர்த மடியிணை பரவுமி னதுவே. [3]மஃதே.

ஸ்ரீ:

பரிபாடல்.

1\. கருங்கட லுடுத்த காமர்திரு நிலமுதலா
வருங்கடன்மூ வுலகினையும் வரம்பில்பெரு மேனியொடு
மொருங்களந்தன் றகத்தடக்கி யோவாத வுவகையுடன்
பெருந்தகைய மாவலியைப் பிலம்புகவண் சிறையிருத்திப்
பொருந்தமரர்க் கருள்கூர்ந்த பொன்னடித் தாமரையோய்!;

இஃ தைந்தடித்தரவு. இதனுள், ஆசிரியவடி வஞ்சிபடி வெண்பா வடி கலியடியென்னும் நான்கடியும்வந்து தளையேழும் விரவியதூஉங் கண்டுகொள்க.

அழகிய வரங்கநின் னவிர்பொலங் கழல்புனை
கழல்புரிந் தருளிய கருமமஃ தொன்றோ
பழமறை பராஅய பாஅண்மையிற் பவித்திரத்
தழல்வளர்த் தாஅகுதி தான்றரு கவுதமன்
வெற்பினற் சிறைகுறை குலிச வேந்தனி
லிற்பழி யெய்திய வகலிகைக் கீத்த
கற்படி மத்தினைக் காமர்
பொற்படி வமதாய்ப் புரந்ததொன் றுளதால்;

இஃ தெட்டடியெருத்தம். இதனுள் ஆசிரியத்தளைகளும் வெண்டளைகளும் கலித்தளையும் விராய் ஈற்றயலடி முச்சீராய் வந்தது காண்க. இதனை யொருசாராசிரியர் நேரிசையாசிரியமென்ப.

அஃதான்று [இது ஒழியசை.]

உலகுயிர் தழைதர வுறுபசி ரதியினை
நிலமிசை யுறசிறு வியுமுத வினவே;

மலர்மகண் மகிழ்தர மிதிலையில் வரனொடு
சலமிரு தனுவிற மிதிதலை மையவே;

அலம்வரு பாதன்மு னவனென வணிநகர்
நலனுற வுடனுறை தருநசை யினவே;

பலகலை யுணர்வொடு பானிலை முழுதுணர்
புலவனொ டெழுகென வெழுபுது மையவே;

இவைநான்கு மெண்சீரடி யாகம்.

அஃதான்று, [இதுவும் ஒழியசை.]

பார்த்தன்கதழ் பரிபண்ணமை
தேர்த்தட்டினிற் றேர்ந்தஞ்சலித்
தேத்தன்பினிற் றன்பாலிடு
பூத்தும்பைய தானார்தம

தெழில்கூர்,

குழவித் திங்கட் கொழுந்தினைச் செருகுந்
தழல்புரை குடிலச் சடிலத்
தழகுறக் காண்ப தளித்தது மதுவே;

இது, நான்கடியாய் எழில்கூ ரென்னுந் தனிச்சொற்பெற்று மூன்றடி நேரிசையாசிரியச் சுரிதகத்தால்வந்த குறளடிவஞ்சிப்பா.

அஃதான்று,

பிறைபயில் கொடிய விடந்துளி குறுந்துளைப்
பிறைபுரை யெயிற்றுப் பேழ்வாய்க் கட்செவி
நிறையழ லுயிர்ப்புமிழ் நேர்நுண் கவர்நாக்
கறைமிடற் றரவங் கலங்கிக்
குறையுயிர் படநடங் குனித்ததொன் றுளது;

இஃதைந்தடி நேரிசை யாசிரியம்.

அஃதான்று, [இதுவும் ஒழியசை]

ஒருகுடை நிழற்கீ ழிருநிலம் புரந்த
வொருகுலத் தவர்தங் குலக்கொழுந் தெனலாம்
திருவுத ரத்தினுட் செறிந்துறை கருப்ப
மிருந்தை யாயிரு நிலத்துற
வருந்தவ மழவெண வளித்த தொன் றுளதால்;

இதுவும் ஐந்தடியாய் வந்த நேரிசையாசிரியம்.

அஃதான்று, [இதுவும் ஒழியசை]

மாதுல னாகிய வஞ்சனைக் கஞ்சனை
மூதுல குட்கொண் முதுமொழி தேர்ந்துணரா
வாதுல னாமென் றவன்பொன்முடி யுதைத்திட்
டோதுநற் செய்கையொன் றுண்டு;

அஃதான்று,

கூற்றுவனு மஞ்சக் கொலைத்தொழில்கூர் கூற்றமெனு
நூற்றுவர்க்கு முன்னோன்முன் னேற்றபல நோன்புடைய
வாற்றலுறு மைவர் சகாயனென வன்றுதூ
தூற்றமுறச் சென்றதுமொன் றுண்டு;

அஃதான்று,

பகடு தவழ்நடைசால் பண்பிதென மாயச்
சகடு தனையுதைந்து சாய்த்ததுட னண்ட
முகடு பொதிமருத முண்டுதைத்து மூலத்
தகடு கிழித்ததுமுண் டன்று;

அஃதான்று,

கட்கடைதீச் சிந்தக் கறுவுகொள்வன் னெஞ்சினொடு
நட்புடையோர் முன்னர் நவையுரைத்தோன் மன்னுயிரை
விட்புலமுங் கொண்டாட வீழ்பொழுதில் வான்சபையு
ளுட்கொண் டருளியதொன் றுண்டு;

இவைநாலும் ஒழியசை புணர்ந்துவந்த கொச்சகம், இவை ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசைப் பரிபாடல் வெண்பா.

நாட்டிய கடவுளர் நலனுறச் சென்னியிற்
சூட்டிய தந்தத் துணையடிப் பூ;
வீட்டியல் புணர்ந்த விண்ணவர் சென்னியிற்
பூட்டிய தந்தப் பொன்னடிப் பூ;
தனிநிகர் தானெனுஞ் சதுமறை தலையுறப்
புனைவது மந்தப் பொலங்கழற் பூ;
வினைவியங் கொள்புரி விழுத்தவங் கூர்ந்தோ
ரனைவரு முடிக்கொள லவ்வடிப் பூ;

செக நீர்வளி தீவெளி யெனுப்
புகழ்புலன் பூத்ததப் புனையடிப் பூ;
அகில வுயிர்களு மவ்வுயிர்க் குறையுளும்
பகர்திறத் தீன்றதப் பாதப் பூ;

இவையாறும் பேரெண். இவற்றுள், கட்டுரைவகையா னெண்ணொடு புணர்ந்து முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகியுஞ் சொற்சீரடி வந்தவாறு காண்க.

எனவாங்கு,

இது வழியசை. தனிச்சொல்லென்பது மிது.

இத்திறத் தனவா மிறைவநின் னிணையடிப் பொற்பூ
முத்திறத் திருதிற முயர்சியா முதலா
மெத்திறத் தெவரே புகழினு
மத்திறத் ததற்கதற் கமைதிறத் தினவாம்;

இது முதலடி ஐஞ்சீரான் வந்த நேரிசையாசிரியச் சுரிதகம்.

அதனால், [இதுவுந் தனிச்சொல்].

முக்குணத்தினுண் முற்குணத்தின;
பொற்புடைக் கருடவாகன;
வரிவளை யிடத்த;
வலனுறை நேமிய;
கரிசொல வந்த கருணை நாரண;
உயர்வற வுயர்நல முதல்வ;
ஒருதெச ரதனருள் புதல்வ;
திருவுறை மார்ப;

என விவை யிடையெண்ணும் அளவெண்ணும் சிற்றெண்ணும் தலைதடுமாறியும் வந்தன.

என யாம், [இதுவுந் தனிச்சொல்].

பூரண நாதநின் பொன்னடி போற்றுதும்
பார்புகழ் மாறர் பராங்குச வாணியை
வாழிய தாக வளர்த்தருள் கெனவே
யூழிதோ றூழி யுவந்து.

இஃது, நாற்கடி யின்னிசை வெள்ளைச்சுரிதகத்தாலிற்றது.

இது, "பரிபா டல்லே தொகைநிலை விரியி, னிதுபா வென்று மியனெறி யின்றிப், பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப"* எனவும், "கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு, செப்பிய நான்குந் தனக் குறுப் பாகக், காமங் கண்ணிய நிலைமைத் தாகும்" எனவும், "சொற்சீ ரடியு முடுகிய லடியு, மப்பா நிலைமைக் குரிய வாகும்" எனவும், "கட் டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து, முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியு, மொழியசை யாகியும் வழியசை புணர்ந்துஞ், சொற்சீர்த் திறு தல் சொற்சீர்க் கியல்பே"* எனவும், "உருட்டு வண்ண மராகந் தொடுக் கும்"† எனவும் சொன்னமுறையே பரிபாடலுறுப்புச் சிதைவின்றி வந்தமை காண்க.

அற்றேல், தொல்காப்பியனார் 'செப்பிய நான்குந் தனக் குறுப்பாக' என்று கூறவும் இப்பரிபாடலகத் தெருத்தென்பதோருறுப்பினையுங் கூட்டி யைந்தாகக்கூறிய தென்னையெனின், அஃதே! நன்றுசொன்னாய்! "தரவே யெருத்தே யராகங் கொச்சக, மடக்கியல் வாரமொ டைந்துறுப் புடைத்தே" என்ப தகத்தியமாதலின்; எருத்தமென்பதனைத் தாவென்று ஒருசாராசிரியர் கூறவும், அகத்தியமுணர்ந்த வொருசாராசிரியர் பாட் டிற்கு முகம் தாவாதலானும், எருத்தமென்பது கழுத்தின்புறத்திற்குப் பெயராதலானும், அவ்வுறுப்புத் தாவைச்சார்ந்துகிடக்கவேண்டுமென்ப தானும், எல்லாநூலிற்கும் அகத்தியம் மூந்துநூலாகலானும், அகத்திய னார் நோக்கத்தோடும் ஐந்துறுப்பாக்கினாரென வுணர்க.

அஃதாக; இதனுள் எண்விராயதென்னையெனின், "கொச்சக வகையி னெண்ணொடு விரா, யடக்கிய லின்றி யடக்கவும் பெறுமே" என் பதனால் விராயதறிக.

"காமங்கண்ணிய நிலைமைத்தாகும்" எனவே அறத்தினும் பொரு ளினும் வாரா தெனக் கூறிய பரிபாடலை இச்செய்யுளுடையார் வாழ்த்திய லாகக் கூறிய தென்னையோவெனின், "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே"‡ எனச் சிறப்புவிதியோதினமைபால் நான்குபாவினுள்ளும்

*தொல். பொருள். செய். 120—123.

† ஷ ஷ ஷ 233.

‡தொல். பொருள். செய். 109.

பரிபாடல் வெண்பாயாப்பிற்றுதலாற் கடவுள்வாழ்த்தாகியும் வரப்பெறு மென்னு முதனூலாசிரியர் நோக்கப்பறறிச் சங்கத்தார் பரிபாடல் கூறிய வகையாற் கூறினரெனவுணர்க.

"ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை" என்னும் பரிபாடற் றாவின்பின், "எரிமலர் சினைஇய கண்ணை பூவை, விரிமலர் புரையு மேனியை மேனித், திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை மார்பிற், றெரிமணி விளங்கும் பூணினை மால்வரை, யெரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்கையை, சேவலங் கொடியோய்நின் வலவயி னிறுத்து, மேவலுட் பணிந்தமை கூறும், நாவலந்தண ரருமறைப் பொருளே" என்பதும் எருத்தம். இதனை பொருசாராசிரியர் ஆசிரியமென்றுங் கூறுவர். கூறினும், இவ் 'அழகியவரங்க' வென்னுமெருத்தத்துக் தளையேழும் வந்தனவாதலா லிவ் வெருத்தத்தை நேரிசையாசிரியமென்றல் பொருந்தாதென வுணர்க.

இது திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. (க)

2. யாஅர் வாழ்வார் யாஅர் வாழ்வா
ரெனுமுல கனைத்து மீறி லாநிலை
யுருபொடு சொருபி னுவு னுதே
மாயையின் விரிந்த முதன்மா னென்றும்
யானெனுந் தொரந்தமு மதனி னெய்திய
புலனைந்து மாகி யவையி னுற்றவுமான
வண்டமு மலகில வடிவமு மான்மா
முழுவது மயக்முத லமைந்திடுந் தாமாய்
பொழுதெதி ரொருபுன லும்பரி னுமால்
பொன்னியு ளமர்ந்தவ னல்லான்
மாயா வோர்தனி மழவென மகிழ்ந்து;

இது, ஆசிரியத்தளையானும் வெண்டளையானும் வந்த பதினொடித் தரவு.

நூல்பல தாமு நுணங்கு மாரணப்
பாவி னுட்பமு......மங்கா ரெனுஞ்
சால்புணர் புலவிர்காண் முந்திய முதல்வருள்;

இது மூன்றடியான்வந்த நிலைமண்டிலவாசிரியம்.

ஓஒ, உணர்ந்தவி துணர்கிலர் வெள்ளை யறிவுட்
புணர்ந்தோர் பொருட்கண் கிரங்கு புன்மையர்
புணர்ந்தோர் பொருட்கண் கிரங்கு புன்மையு
முணர்ந்தே னும்மையி னிழைத்த வூழென்
றுவஃ தலாது பலவாய்த் தொகுத்த
வான்மா முழுதினு நிற்ப தறிகிலர்;

இதுவும் ஆறடியான்வந்த நிலைமண்டில வாசிரியம். இதன் முதற்கணின்ற ஓஒ என்பது 'சீர்கூ றுதல் நேரடிக் குரித்தே'* என்பதனால் தேமா எனச் சிறப்பின் ஒ அளபெடுத்துச் சீர் கூறாய் முதற்கண் நின்றது. அதனோடு ஐஞ்சீரடி யாக்கினும் இழுக்காது. என்னை? 'வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும்—ஐஞ்சீ ரடியு முளவென மொழிப'† என்பதனாற் கொள்க.

காயங் கழிதருங் காற்றன் னுருபு
ளாகவே யொருங்குவை காவ லின்புறு
மேன்மையே சற்று முறுகில ரதனொடு
மீளவே யனைத்து மெழுபான் மையுற
நான்முகன் றனது செயலிது வென்னத்
தானுவாய்ப் படிமத் தமைத்தபான் மைகளும்
வாழப் பருவத் தீரமில் சூரத்
தினமீறுந் தானவ ரிடும்பையிற் பாழுவார்
பாறு மிடரே கண்ண்
டாளினுங் காளியாய்த் தூணி னூறல்;

இது, தன்றளையானும் வெண்டளையானும் வந்து பத்தடித்தாயிற்றயலடி மூச்சீராய் நேர் நேர் எனக் கண்ண் என ஒற்றளபெடையாயிற்ற நேரிசையாசிரியப்பா. கண்ண் என்பதனை ஒற்றளபெழாது சொற்சீராக்கினும் இழுக்காது.

தோன்றி முன்னங் கவனுடல் போழ்ந்தது
மறிகில் லாதோ மன்பதனை யெனுமவைமன்;

---

*தொல். பொருள். செய். 49. †தொல். பொருள். செய். 63.

அவனிற் பாரி லல்லது பயந்த
வடல் பெருகு சிரங்கர மொருபதிரு பதுளான்;

இவை யிரண்டுவிகற்பத்தான்வந்த வீரடியிரண்டம்போதரங்கம்.

தறுகணன்;
மத்தமடவன்;
மூர்க்கர்முன்னன்;
கண்டாகண்டன்;
நிருதர்பெருமான்;
மதுகையாளன்;
அன்பிறீம்பன்;

வெண்பொன் வெற்பைக்கிளைத்த முன்பார் தோளன்;

மருப்புக்களுழுமுரான்;
தீக்கக்குநேத்திரன்;

வானிடி யெனத்தொனி மேய சொல்லன்;
நமனார் நடுங்க வமர்புரி பொருநன்;
வானோர் நடுங்க வேல்விடு மறவன்;

இவை ஒருசீர்முதலாய சிற்றெண்ணு மளவெண்ணும் விராய்வந்தன.

களித்த வுள்ளமொடு கணக்கி னென்பண்
றளித்தபல் வரத்துட னமையா யாக்கையன்;
தன்னைச் சமர்முகத்தி னேர்கணை யதுதொடா
மன்னு முயிருண் வகைமையு நினைகிலர்;

இவை யீரடி யீரண்டம்போதரங்கம்,

அதற்பி னகன்றிருந்த தேவி யடித்துணை
தொழுதன விதித்தெழு பொழுதருள் செய்யா
வடைக்கல மென்றவ னாருண்மை யோரார்;

இது மூன்றடி நிலைமண்டிலவாசிரியப்பா,

அமரிடை வசந்தன்மீ வானந் தோய்ந்திடு
முடலுயி ருடன்வர நின்று
தமர்தொழத் திண்டேர் நடைகற்ற தனையுறூர் ;

இது மூன்றடி நேரிசையாசிரியப்பா.

கமையடைந் தொடுங்குவான் விருந்தறைந் திடுகாலைத்
தமையன்வந் தனனெனப் பாதன துயிர்தந்தா
னமைவுகண் டுடனுண்பா னருள்வைத்த குணனுறூர் ;

இது மூன்றடி நிலைமண்டிலவாசிரியப்பா.

பின்னும்,

இது ஒழியசை. தனிச்சொலென்பதுமிது.

பொதுவர் மடவா னற்று யென்னும்
விதியினன் பான்முன் வெளிவர றேற்றூர்;

இதுவும் ஈரடி யோரம்போதாங்கம்.

தாயென வனிதையர் படிமமேற் கொண்ட
பேயத னுவி யன்றுண்டு போலைய்
மாஅய முற் றெதிர்க்குஞ் சாடு முருளிற
நோலய்வருத் திழைத்தவன் முடியுதைந் தனுமூறூர்;

இது நான்கடியாய்வந்த நிலைமண்டில வாசிரியப்பா.

முடிபடி யுறவசை மொழிபவ னுயிர்தளி
ரடியுற வருள்புரி நிலைமையு முறுகிலர்;

இது தனியனுகவந்த வெண்சீரடியாகம்.

ஆதிநாதன்;
வாசுதேவன்;
சங்கருடணன்;
பைம்பொனிணிறவன்;
பரத்துவசொரூபன்;
சொலத்தருவியூகன்;
உரனுடைவிபவன்;
உயிர்களினயனன்;
வெளிவருவிமலன்;
மறைபுரியமலன்;
உணனிலன்;
உணர்வுறவரியவன்;

என விரை சிற்றெண்.

என்பனவ, [இது தனிச்சொல்].

மறையின் மறைகளின் வழிநூ லொண்மையி
னிறைநிலை யுணர்த்து மேமவா ரியர்முன்
மதிமரு ணிலையற வழிபடு மதியுற்
றுறவாய்த் திறப்பட வுணர்த்தமெய்ஞ் ஞானம்
பிறவாப் பெற்றிகொண் டுணர்ந்தில ரஃதும் ;

இது, ஐந்தடி நிலைமண்டிலவாசிரியம்.

அதுவே, [இதுவுந் தனிச்சொல்.]

இனியவ ருயிர்கட் கிரங்கியிங் கெவனென
வெனதுயிர் பிழைப்பதற் கிரங்குத லுடனே
தாமரைத் தவிசிற் சதுமுகன் மேனா
ளாநிரை காத்தசிற் றுயரைக் கன்றினைக்
குறுந்தடி தாம்பொடு தீங்குழல் கொம்பிவை
மாயையின் வானுற வைத்திடப் பண்டையின்
யாவையு மாகிமுன் னுதிக்குந் திறத்தினன் ;

இதுவும் நிலைமண்டிலவாசிரியப்பா.

சுருதி முதல்வன் ; சுதமிலபிர்தன் ;
பரிதி வலவன் ; பதுமைகொழுநன் ;

இவையுமோர் நான்குஞ் சிற்றெண்.

மீனமு மாமையு மேனமு மாகி
வாமன னும்மூ வாளியு மானபின்
வருபல தேவ னிவுளியு மாமவன்
தருமன் முதலவர் தமது நகர்பெற
நூற்றுவர் கூற்றுவ னகர்பெற வுய்த்தவ
னெற்றம துரைத்து மிறைஞ்சுவ துடனே
பிறவா நெறிபெற வேண்டி
முறவா தவனை மதிக்குமென் மனனே.

இது எட்டடியான் வந்திற்ற நேரிசையாசிரியச்சுரிதகம்.

இதுவும், திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. கடவுள் வணக்கமெனினுமாம். இது சங்கப்பாடலாய பரிபாடலுள், கடவு

னிளவெயினனார்பாட்டாய் முதலே மூன்றுவதாய்ப் பெட்டநாகனு ரிசை, பண்ணுப்பாலையாழாய், "மாயோயே மாஅயோயே" என்னும் பரிபாடல்போல வெருத்தமுங் கொச்சகமு மின்றிவந்த பரிபாடல். (2)

3. வேல்விழியிணை யெனவினை கூர்த்த
வாலெயி றெண்மணி வாழொழுங் கினவே
கன்னலின் குழம்புங் களிகூர் யாழுஞ்
சொன்னலந் தனைவளர் வண்ணம்வாய்ந் தனவே
கனிதுகி ரிலவ தாருந் தோகாய்
தனியிதழ் குழற்கற்றை கார்தோய்ந் தனவே
மாரன் வண்போர்க் குரிய கைச்சிலை
பார வேலிணை வளைந்து திரண் டேர்செய்
சால்பினில் வார்கரும் புருவந்தோ ளிணையே
வாணுதற் சந்தமும் வளர்பிறை மாண்பின
பூணுறு நோக்கிற் கொருபொரு வுளதே
மறுத்துடைத் தொளிர்முழு மதியே திருமுக
முறுப்பமை துணைமுலை யுபயபொற் குன்றே
வள்ளைத் தண்டே வார்கா திணையு
மொள்வளை யெனலா மொளிவளர் மிடறே
கதிர்வளை செறியுங் காமர் கைத்துணைக்
கெதிர்பிறி தின்றாற் காந்த ளிணையே
சதிருடை யென்னிறை தாயபொற் கொடிக்கே ;

இது பதினெட்டடியாய் முதலடி முதற்சீர் சொற்சீராய்வந்ததாவு.

தங்கையின் சுழியிணைக் கவின்பயி லுந்தியோ
டிங்கிணை யென்பது மிறந்ததொ டொன்றே ;
இடங்கொள முலைசுமந் திடுகு நுண்ணிடை
படங்கொ ளரவெனப் புகழ்வதும் பழியே ;
பாந்தளின் படமெனப் பழிப்பன் பழித்தபின்
றுய்ந்தெழி லல்குலுக் கமைப்பது மதுவே ;
கொழுங்குளிர் வாழைத் தண்டெனக் குறங்கினை
யொழுங்குற வுரைப்பது முவமையற் றன்றே ;

தமனியத் திருமக டவிசெனச் சிறந்தனி
னமர்தரு நளினமு மணங்கிலைமெல் லடிக்கே;
இவை யஞ்சு மீரடியஞ்சு... ....
எனவாங்கு, [இது தனிச்சொல்].
இன்னண மவயவ மியைந்துள வவட்கே
தென்னரங் கேசன் சிலம்பினோர் பொலங்கொடி
மன்னிப லொடும் வரு மாமெனிற்
சொன்னிலத் திணையெனத் துணியுமென் மனனே.

இது நான்கடியாய் நேரிசையாசிரியப்பாவினாலிற்ற சுரிதகம்.

இதனுள், கொச்சகவுறுப்பும் அராகமும் வந்தில; சங்கப் பரிபாடலுள், "கார்மலி கதழ்பெய றலைஇ யேற்ற, நீர்மலி நிறைசுனை பூமலர்ந் தனவே, தண்ணறுங் கடம்பின் கமழ்தா தூதும், வண்ண" என்னும் பதினாலாம்பாட்டின் நடையவா யமைந்தது. பகுதி—செட்படை. துறை—அவயவங்கூறல். தோழிமுன்னிலை. தலைவன்கூற்று. (௩)

4. விழுமிய திறத்துரை வெளிறிலா மேதைகூர்த்
தொழுகவைத் துடனிகந் தொரீஇயவொண் சுடரினை
யிதுபொரு ளெனத்தெரித் தீறினுண் ணுரவுடைப்
புதுமொழி முகத்தகப் படுத்திய புலமைசால்
காமரு ஞானமுங் காட்சியுங் கருணையுந்
தாமொரு தலையாத் தனியுருப் புணர்ந்த
வெங்கோன் றிருமகிழ் மார்பின னிமையவர்
தங்கோன் றமிழ்மலைச் சந்தனப் பொதும்பர்க்
கொருதனி விளக்கம தாயுருத் துலங்க
திருவமர் மாணெழிற் றேசுடை மடவோய்
நுமர்புரந் தனராய் நோக்கமர் சீறூர்க்
கெமர்புரந் தனரா யேழுமு பேரூர்
தன்னுயிர்க் கூறு தருபட ருறீஇப்பிற
மன்னுயிர்க் குறுகண் மனக்கொளார் மனத்தினைப்

பொருளினுட் பொருளெனப் புனிதநூல் குறித்த
வருள்கெழு தகைத்தா யகலா தண்ணிய
தெவ்வள வணி, தெனு மிருநில
மவ்வள வெனுநிலை மையினணி மைத்து;

இது பதினெட்டடியான் வந்த நேரிசையாசிரியம்.

அஃதான்று,

இது ஒழியசை, தனிச்சொல்லென்பது மிது.

காந்தியும் வாய்மையுங் கருணையுங் கவிகையும்
வாய்ந்தநன் குலனு மறைமுத லியவுரை
தோய்ந்தறி வுடைமையுந் தூய்மையு மொழுக்கமுஞ்
சாந்தியு நிறையும் பொறையுஞ் சால்புமென்
றுய்ந்துள விவற்றினெஞ் றமைதிய நிலவாய்
மாந்தரென் றிடுகுறி யுடைமட மையார
நாரையுந் துதியா நன்னிலை நிலைஇப்
பானுடை பாராட் டியமதிப் பாவலர்
வானுடை நாவு மறுவில் வாய்மையு
மூாவுநீர்க் கடல்சுலா மூானுடை யுலக
மெப்படிக் கணித்தா யினதெனு
மப்படிக் கணித்தா யினவணி மைத்து;

இது பன்னிரண்டடியான் வந்த ஆசிரியம்.

அஃதான்று, [இதுவுந் தனிச்சொல்].

மணியினும் பொன்னினும் புனைபொலந் துகிலினு
மணிதிகழ் செவ்விபெற் றலர்நறு மலரினு
மான்மதக் குழம்பினும் வாசமோ ரைந்தினு
மானவை யுறுதகைத் தன்றெனத் துறந்தே
வாய்மையி னகந்தூய் மையராய் வடிவமுந்
தூய்மையுற் றனராய்த் துறவறத் தொழுகுபு
செந்திறப் பிருநிவித் திருவுடை யாடையு
முய்ந்நிலைத் தெனப்பொறித் துளவிலாஞ் சனையுந்
திருமணி வடமுந் தியான சிந்தையிற்
பொருளுரை புலப்படப் புலப்படு திருமனு

மேவிய பொ ்ந்தகை டை ினடி விளக்கிப்
பூவினுள் ளவள்பணிப் ட னிற்புரிந் தூட்டிய
சேடம தரு தித் திருமக ர ேகோன்புகழ்
பாடியா டியபத் தியர்திரு மேனிக்
கருந்தவக் காந்தி் ய வ் வளவணித் தத ே ற்
றிருந்திய சிறப்பினிற் செறியணி ல மத் ;

இது பதினறடியான்வந்த நிலைமண்டில வாசிரியம்.

அஃதான்று, [இதுவுந் தனிச்சொல்.]

தமரா யுள்ளவர் தமைத்தொடர்ந் துயிரொடங்
கமர்புரி மிடிநிரப் பேயென் றுமிடர்
கடித லெனதென வினைவிழை பவன்முய லினுளுள னின்புற்றே
யனவ ரத முறை தருதிரு வும்போன் றணித்து;

இது, முதலடியிரண்டு மளவடித்தாகவும் மூன்றாமடி யறுசீரடி முடுகியலாகவும், நான்காமடி முதன் முச்சீர் முடுகியலாகிய வைஞ்சீரடி யாகவும் வந்த ஆசிரியம்; என்னை? 'காமர் கடும்புன' லென்னுங் குறிஞ்சிக்கலியுள்ளும் இவ்வாறுவந்தமை காண்க. "வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு, மைஞ்சீ ரடியு முளவென மொழிப", "அறுசீ ரடியே யாசிரியத் தளையொடு, நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே"* என்பதனு மறிக.

இசைதிசை திசைநசை பெறவுற வசைதீர் நிதியிழை பண்பா
லறனுட னுயர்நல னெமைபுந்தோய்ந் தருள்கென
நாளும், யாமே நீங்கல பெ னவுரி மையவாத்
தாமே தகவெதிர் தன்மை ப வாகிக்
கூடிய குறியுடைத் தெனவாய்
நாடுடன் பீடுடை நகராணி மைத்து;

இது, ஆறடித்தாய் முதலடி ய சீரடி முடுகியலாகவும், இரண்டாமடி யிருசீர் மு டுகியலாகவும், 'நாளும்' என்னும் சொற்சீரடியும் பெற்று, ஏனையடிகள் அளவடியாகவும், ஈற் ய லடி முச்சீராகவும் வந்த நேரிசை யாசிரியப்பா.

---

*தொல். பொருள். செய். 63, 64.

பிறப்பெனப் பெயசிய பிணிக்கொரு வித்தா
யறப்படி றிழைக்கு மவாவெனு மவிச்சையை
நிலேயுத விவைநிலே யுதவில விவையெனுங்
கலேபல வுணர்ந்த காட்சியி னீக்கி
யையுணர் வெய்திய வமைதியி னழுக்கறு
மெய்யுணர் வடைந்த விச்சையோ ருள்ளத்
திடைய றுத்திறத் தீண்டிய வின்ப
மடைதரு நிலேமைய தெனவ ணிமைத்து ;

இது எட்டடியாய் வந்த நிலேமண்டிலவாசிரியப்பா.

இருநிலத் துழுவலன் பெய்துமென் னிதயமுந்
திருவுரு நலனிவை சிறத்தலிற்
பொருவரு நின்னேயும் போன்றணி மைத்து ;

இது மூன்றடியான்வந்த நேரிசை யாசிரியப்பா

மூவுரு முக்குண முத்தொழி லெனவிசைத்
தியாவையுந் தனவா விசைந்தமை யன்றியு
மோருரு வொருகுண மொருதொழி லெனதெனு
நாரண னுலவா நன்னர்மண் ணுயிர்தொறு
நீப்பின் றுஅ நிலேஇய
யாப்பென் னணமணித் தற்றணி மைத்து ;

இதுவும் ஆறடியாய்வந்த நேரிசையாசிரியப்பா.

அன்றியும், [இதுவுந் தனிச்சொல்]

எம்மனோர் வைகுறு மேமமா ளிகைமிசைச்
கொம்மை வெம்முலேக் கோதையர் முன்கைக்
கிளியினம் வைகலுங் கேசவா கதியெனு
மளியநன் பொருளுரை யஃதிரு செவியுற
வொளிகிளர் நும்மலே யுறைபசுங் கிளியினங்
கேட்டவை தாழுங் கேசவா கதியெனக்
கோட்டிலுட் குடம்பையிற் குதலேயின் மிழற்றும்
படிக்கணித் தென்றுற் பையு
ளடிக்கொளு மனத்தி னழுங்க னீயே.

இது ஒன்பதடித்தாய் நேரிசையாசிரியப்பாவினுலிற்ற சுரிதகம்.

இது 'தொன்முறை யியற்கையின்' என்னும் பரிபாடலுள் இரண்டாம்பாட்டி னுறுப்புடை நடைத்தாய் வந்தது. பகுதி—இயற்கை. துறை—இடமணித்துக்கூறி வற்புறுத்தல். (௪)

5\. கதமெரி கால்கண் ணெதிர்நிழல் சீறு
மதமலை நூலின் முதன்மொழி கூறுந்
திதமத னுலன் றதனுயிர் பேணுந்
திருமகள் கேள்வன் கருணை விநோத
னடலர வெனவுல குயிர்தொழ வளர்தரு
வடமலை யதனிடை பலமலர் பூத்த
பூங்கொடி மானு மாதர்வடி வனைத்து
மாங்கமை வானீடு கிழியுட் படவெழுதி
யீங்கெதிர் வேனென் றனிர் ;

இது வெண்டளையும் ஆசிரியத்தளையும் வஞ்சித்தளையும் விரவி யொன்பதடித்தாய் ஈற்றயலடியும் ஈற்றடியும் வெண்டளைத்தாய் நாற்சீரும் முச்சீருமாயிற்ற தாவு.

கருங்கட லுடுத்த கண்ணகன் ஞால
மொருங்ககப் படுத்திரு ளொளித்திடக் கதிர்விரித்
தொருதனித் திகிரி யுரனுடை யூர்திப்
பரிதியங் கடவு ளலம்வரும் பரும
வொண்பொன் மால்வரை யொன்றல விரண்டென
வெண்கொ ளப்புடைத் திணைத்திறு மாந்து
வளரின வனமுலை வடிவினை யெழுதினும்
புளகமுற் றடிக்கடி புடைப்பதை யெழுதலு
மேந்தெறில் வள்ளைத் தண்டினை யெழுதினும்
வாய்ந்தபொன் னூசலின் மறுகுவ தெழுதலுங்
காந்தளை யெழுதினுங் கதிர்வளை யுழல்வது
மெய்ந்நுட னொளிப்பது மெழுதலை தரிதா
னுழுவலன் பிடைநின் றூட்டிய வின்பக்
கெழுதகைக் கேளி ரின்றூங் கேண்மின் ;

இது, ஆசிரியத்தளையானும் இயற்சீர்வெண்டளையானும் பதினெலடித்தாய்வந்த தாவு.

அரிமத ருண்சண் ணெழுதினு மருண்மருள்
புரிவன வகைவகை பொறிப்பது மரிதே;
குமிழினை யெழுதினுங் குணனுகர் குறிப்புயிர்ப்
புமிழ்திற மெழுதலு முணர்வுற வரிதே;

இவை யிரண்டு மீரடி யிரண்டடிப் பேராதரங்கம்.

இதழமு தவலு மெழுதுவ தரிதே;
புதன்முனி வுறநெறி புதுமையு மரிதே;

இவையிரண்டும் ஓரடியிரண்டடிப் பேராதரங்கம்.

பதநட முறவணி பரிபுர வொலியுற
விதமுறத் தேமொழி யெழுதுவ தெவரோ;

இது எண்சீரான் வந்த தனியாகம்.

எனவிவை, [இது தனிச்சொல்].

எழுதிய கிழியொன் றுளவெனி லின்பம்
பழுது படாதல கலகொடு பயிலு
மன்றிலின் கூட்ட மகற்றலு நின்பாற்
பொன்முலி லருள்புறம் போம்வகை தொடங்கி
வன்றொழி லாடவர் மகிழ்ந்தயல் போதரப்
பூளையு மெருக்கும் புனைதா ராக
வேளைமுன் படர்த்தவன் வெண்ணீ றணிந்து
பனைமடல் பாய்மா வாகப்
புனைமணி மாட வீதிபோ துகவே.

இது ஒன்பதடியான்வந்திற்ற நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது, பகுதி-மடல். துறை-எழுதவரிதென்றல். (ரு)

ஆகப் பரிபாடற் கவி ரு.

பாப்பாவின முற்றும்.

ஸ்ரீ:

விஷய சூசிகை.

[எண்கள் பாக்களைக் குறிப்பன]

பாவும் பாவினமும்.

தொடையும் தொடைவிகற்பமும்.

பா–பாவினங்களைப்பற்றிய சில குறிப்புக்கள்.

அணிகள்.

அகத்திணைப்பகுதிகள்.

அகத் துறைகள்.

புறத்திணைகள்.

புறத்துறைகள்.

பலபொருள்.

இந்நூலுள் எடுத்தாளப்பட்ட பிற நூல்கள்.

ஸ்ரீ:

பாப்பாவினச் செய்யுண்முதற்குறிப்பு.

[எண் பக்க எண்.]

ஸ்ரீ:

பிழையுந் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கூ	22	பணமுலைக்கீழ்	பணைமுலைக்கீழ்
உ0	26	பொருள்புணா	பொருள்புணர்
௩அ	11	சுலவிய	சுலவிய
ச0	23	சொல்வர்.	சொல்வர்,
சக	25	துயர்மிசை	துயிர்மிசை
சஉ	14	நற்சி	நாற்சீ
சரு	3	சரிதகமு	சுரிதகமு
,,	16	செழும்பசும்பொன் கோடு	செழும்பசும் பொன்கோடு
சகூ	1	அரவனைமேற்	அரவணைமேற்
ரு0	6	வேறுபடுதவாவது	வேறுபடுதலாவது
,,	12	கொள்க	கொள்க.
ருரு	13	கோதமனர்	கோதமனற்
ருஅ	27	நெஞ்செ	நெஞ்சே
சாஉ	8	தொனீநீர்	தொனிநீர்
சா௩	19	கென்றையுங்	கொன்றையுங்
சாசா	28	மாங்கடா	மரங்கடா
சாஅ	4	மொன்றுதும் வஞ்சித்	மொன்றுதும் வரும் வஞ்சித்
சாகூ	13	நினைதொரு	நினைதொறு
,,	21	நீராநாகமா	நீரநாகமா
எரு	9	தனிச்செல்	தனிச்சொல்
,,	14	சுரிதம்.	சுரிதகம்.
அக	20	வாமன னமழு	வாமன னய்மழு
அ௩	25	நுமர்புரந் தனாய்	நுமர்புரந் தனரய்
அசா	22	மிசைச்	மிசைக்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*7.	தோத்திரத்திரட்டு			
8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	டிை இரண்டாம்பாகம்	4	8	0
	டிை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	5	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
*	சங்கப்புலவராற்றுப்படை உரையுடன்			
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	3	0
2.	கணூல் (5) இனியநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
*7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)			
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
*9.	அநுமானவிளக்கம்			
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	2	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (டிை)			
23.*	விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவிணவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0